1034

1034

Regd. No. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 4

இதழ் 11

செந்தமிழ் மாத சஞ்சிகை

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1352 ரஜப் மீ 1933 நவம்பர் மீ

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 NOV 1933
MADRAS

உள்ளடக்கம்

1. ஸஃரயே தஸாவுல் ... 401
2. நாயக வாக்கியம் ... 408
3. முஸ்லிம்களின் வீழ்ச்சி ... 409
4. ஐரோப்பிய நாகரீகத்தின் விபரீதம் ... 413
5. சற்குணசீலரின் சம்பூர்ண போதனைகள் ... 418
6. காஜீ நியமுகமும் முஸ்லிம்களின் கோரிக்கையும் ... 422
7. முஸ்லிம் வீரமாதுக்களின் தீரம் ... 426
8. மிஃரூஜ் வைபவம் ... 427
9. இஸ்லாமிய கட்டளையும் தொழுகையும் ... 431
10. மார்க்க வினவிடை ... 433
11. மன்னார்குடி அவதூறு வழக்கு ... 436
12 ஸமரஸத் தோற்றம் ... 437
13. ஷஃபான் மாதச் சிறப்பு ... 439

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா 3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு ...	„ 4	0	0
தனிப் பிரதி ...	„ 0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

حفاظة الإسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்.

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 4	ஹிஜ்ரி 1352 ரஜப் மீ 1933 ஞூ நவம்பர் மீ	இதழ் 11

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 NOV 1933
MADRAS

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக்கொண்டு (இதனை ஆரம்பிக்கிறோம்.)

ஸூரயே தவாவுல்.

1. எதைப்பற்றி ஒருவருக்கொருவர் கேட்டுக் கொள்கிறார்கள்?

2. மகத்தான பெரிய விஷயத்தைப்பற்றி,

3. எதைப்பற்றி அவர்கள் விகற்பம் செய்து கொண்டிருக்கிறார்களோ (அதைப் பற்றி) (இறுதித் தீர்ப்பு நாளில் நிகழ்பெறும் விஷயங்களைப்பற்றி.)

4. அவ்வாறு செய்யலாகாது! சீக்கிரம் அவர்கள் அறிந்துகொள்வார்கள்.

5. அவ்வாறு செய்யலாகாது (என்று நாம்) மறுபடியும் (கூறுகிறோம்) சீக்கிரம் அவர்கள் அறிந்து கொள்வார்கள்.

6. நாம் பூமியை விரிப்பாக ஆக்கவில்லையா?

7. இன்னும் மலைகளை முளையாக (ஆக்கவில்லையா?)

8. மேலும் நாம் உங்களை ஜோடி ஜோடியாகப் படைத்தோம்.

9. இன்னும் நாம் உங்களுடைய நித்திரையை ஆரோக்கியமாக ஆக்கினோம்.

10. மேலும் நாம் இரவை உடை (திரை) யாக ஆக்கினோம்.

11. இன்னும் நாம் பகலை ஜீவனோபாயத்திற்காக ஆக்கினோம்.

12. இன்னும் நாம் உங்களுக்குமேலே உறுதியான ஏழை (ஏழு வானங்களைச்) சிருஷ்டித்தோம்.

13. இன்னும் நாம் இலங்கும்படியான விளக்கை (சூரியனை) உண்டாக்கினோம்.

14. இன்னும் நாம் மேகத்திலிருந்து வேகமாய்ப் பொழியும் தண்ணீரை இறக்கிவைத்தோம்.

15. நாம் அதில் நின்றும் தானியத்தையும் புற் பூண்டுகளையும் வெளிப்படுத்துவதற்காக,

16. இன்னும் அடர்த்தியான பூஞ்சோலைகளையும்.

17. நிச்சயமாக இறுதித் தீர்ப்பு நாளானது குறிப்பிடப்பட்டுப் போயிற்று.

18. ஸூர் ஊதப்படும் நாளில் நீங்கள் கூட்டங் கூட்டமாக வருவீர்கள்.

19. இன்னும் வானம் திறக்கப்பட்டு (அதில்) வாயல்கள் ஏற்பட்டுப் போய்விடும்.

20. மேலும் மலைகள் பறக்கவிடப்பட்டு அது கானல்போலாய்விடும்.

21. நிச்சயமாக நரகம் எதிர் பார்த்ததாக ஆய்விட்டது,

22. (அதாவது) அக்கிரமஸ்தர்களுக்கு தங்குமிடமாக,

23. அதில் கணக்கற்ற வருடங்கள் தங்கினவர்களா யிருக்கும் நிலைமையில்.

24. அதில் அவர்கள் (எவ்வித) குளிர்ச்சி (யின்சுவை) யையும் பானங்களையும் அனுபவிக்க மாட்டார்கள்.

25. சூடான தண்ணீரையும் அருவருப்பான நீரையுந் தவிர்த்து.

26. (செய்கைகளுக்கு) தக்க கூலியாக.

27. (ஏனெனில்) நிச்சயமாக அவர்கள் கேள்வி கணக்கின்மீது நம்பிக்கை கொள்ளாதவர்களா யிருந்தார்கள்.

28. மேலும் நம்முடைய அறிவிப்புகளை அலக்ஷியம் செய்து பொய்யாக்கினார்கள்.

29. மேலும் நாம் ஒவ்வொரு வஸ்த்துவையும் புத்தகத்தில் சேரகரஞ் செய்து வைத்திருக்கிறோம்.

30. ஆதலின் அனுபவியுங்கள். நாம் உங்களுக்கு வேதனையைத் தவிர (வேரொன்றையும்) அதிகமாக்க மாட்டோம்.

31. நிச்சயமாக பயபக்தியுள்ளவர்களுக்கு ஜயமுண்டு.

32. (அவர்களுக்கு) தோட்டங்களும் திராக்ஷைகளும்,

33. மேலும் ஒரே வயதையுடைய மங்கையர்களும்,

34. மேலும் பிரகாசமான (பானப்) பாத்திரமும்.

35. அவ்விடத்தில் வீண் பேச்சுக்கும் பொய்க்கும் செவிமடுக்க மாட்டார்கள்.

36. உம்முடைய ரப்பினிடமிருந்து கூலியாக (அதாவது) தக்க நன்கொடையாக.

37. (அவனே) வானங்களுக்கும் பூமிக்கும் இவ்விரண்டிற்கு மிடையிலுள்ளவைகளுக்கும் றஹ்மானான றப்பு. அவர்கள் அவனிடம் பேசச் சுதந்திர முள்ளவர்களாக மாட்டார்கள்.

38. ஜிப்ரயீலும் மலக்குகளும் அணி அணியாக நிற்கும் நாளில் றஹ்மான் எவருக்கு உத்திரவு கொடுத்திருக்கிறானோ அவரைத்தவிர (வேறுயாரும் பரிந்து) பேசமாட்டார்கள். மேலும் (அவ்வாறு பரிந்து பேசுகிற அவரும்) நேரானதையே சொல்வார்

39. அந்நாள் உண்மையானதா யிருக்கும்; ஆதலின் எவன் நாடுகின்றானோ அவன் தன் றப்பினளவில் ஒதுங்குந் தானத்தை ஆக்கிக்கொள்வானாக.

40. நிச்சயமாக நாம் உங்களுக்கு சமீப காலத்திய வேதனையை எச்சரிக்கிறோம். (அதாவது) மனிதன் தன்னிரு கரங்களும் முற்படுத்தியதைப் பார்க்கும் நாளை (எச்சரிக்கிறோம்) இன்னும் (அந்நாளில்) நான் மண்ணாக யிருக்கவேண்டி யிருந்ததே என்று காபிர் சொல்வான்.

[அதாவது, இறுதித் தீர்ப்புநாளில் நிகழ்பெறும் மகத்தான ஓர்பெரிய விஷயத்தைப் பற்றி ஒருவருக்கொருவர் கேட்டுக்கொள்கிறார்கள். அன்னோர் அவ்வாறு செய்யலாகாது. சீக்கிரம் அவ் விஷயத்தைத்தெரிந்து கொள்வார்கள். நீங்கள் பூமியிலிருந்து கொண்டு வெள்ளாமை வியாபாரம் செய்து சுவண்டி அனுபவிப்பதற்காக அல்லாஹ்த ஆலா பூமியைவிரிப்பாகவும், அதில் அசைவுல் ஏற்படாது மலைகளை முளையாகவும், நீங்கள் ஒருவரோடொருவர் சேர்ந்து வாழ்ந்து சந்ததிப்பெருக்க மேற்படுவதற்காக உங்களை ஜோடிஜோடியாகவும் படைத்திருக்கின்றான். உலகில் உங்களுக்கு நித்திரையை சுவண்டி பெறுவதற்குக் காரணமாகவும், இரவை திரையாகவும், பகலை ஜீவனோபாயத்தைத் தேடிக் கொள்வதற்காகவும், அதிகப் பிரகாசத்தையுடைய ஒருவிளக்கை உலகமக்களின் பிரயோசனத்திற்காகவும் உண்டாக்கி இருக்கிறான். மேலும் பூமியிலிருந்து தானியத்தையும் புற்பூண்டுகளையும் பழவர்க்கங்களையுடைய அடர்த்தியான தோட்டங்களையும் வெளிப்

படுத்துவதற்காக மேகத்திலிருந்து வேக
மாய்ப் பொழியும் மழையை இறக்கிவைத்
தான். நிச்சயமாக பிரிவுடைய நாள்-நல்லோர்
கெட்டோரென தெரிந்துகொள்ளக் கூடிய
நாள் குறிப்பிடப்பட்டுப் போயிற்று. எக்
காளம் ஊதப்படும் நாளில் நீங்கள் கூட்டங்
கூட்டமாக வருவீர்கள். ஒருவகுப்பார் மற்ற
வகுப்பாரைச் சந்திக்கமாட்டீர்கள். அது
கால் வானம்திறக்கப்பட்டு வாயல்கள் ஏற்
பட்டுப்போகும். பூமியின் விரிப்புக்கு முளை
களே போன்றிருந்த மலைகள் பறக்கவிடப்
பட்டு கானலேபோலாய்விடும். நிச்சயமாக
நரகம் தீயோர்களை எதிர்பார்த்ததாக ஆகி
அதற்குச் சூழால் மலக்குகள் நின்று
கொண்டிருப்பதாக ஏற்பட்டுப் போகும்.
அதில் அன்னோர் கணக்கற்ற வருடங்கள்
தங்கி யிருப்பார்கள். அதுபொழுது அன்
னோர் அதில் குளிர்ச்சியின் சுவையையும்
பானங்களையும் பெற்றுக்கொள்ள மாட்டார்
கள். ஆனால் தாகம் பொறுக்கமுடியாது
அதிக சூடான வெந்நீரையும் நரகவாதிகளின்
திரேகங்களிலிருந்து வடிந்து பள்ளத்தாக்கில்
சேகரமாகி யிருக்கும் சீயையும் குடிப்பார்
கள். மேலும் அன்னோர், கணக்குக்கேள்வி
கூலிகொடுப்பது ஆகியவைகள் மீது அறிவிக்
கக்கூடிய அல்லாஹ்வின் திருவசனங்களை
பொய்யாக்கி வைத்தார்கள். அவர்களின் ஒவ்
வொரு செய்கைகளும் எழுதி பத்திரப்படுத்
தப் பட்டிருக்கிறது. அதன் காரணமாய்
இதுபொழுது வேதனையை அனுபவியுங்கள்
என அன்னோருக்குக் கூறப்படும். நிச்சய
மாக பயபக்தி பூண்டொழுகிய நல்லடியார்
களுக்கு ஜயமும் கனி வர்க்கங்களுடைய
தோட்டங்களும், திராக்ஷைகளும், ஒரே
வயதையுடைய மங்கையர்களும், ஒளி பொருந்
திய பானபாத்திரங்களும் அவர்களது
நாயன் புறத்திலிருந்து கூலியாகக்கிடைக்கும்.
அப்பானங்களைக் குடிப்பதி லீடுபட்டு வீண்
பேச்சுக்கும் பொய்க்கும் செவிமடுக்காதவர்
களாய் விடுவர். இவ்வளவு நன்கொடை
அளிக்கப்பட்டும் அல்லாஹ்விடம் பேசு
வதற்கு யாரும் சுதந்திரம் பெற்றவர்களாக
மாட்டார்கள். ஆனால் ஜிப்ரயீல் (அலை) யும்
மற்ற மலக்குகளும் அணிவகுத்து நின்று
கூலி, தெண்டனை பெறுவதிலும் பூஉலகில்
செய்த காரியாதிகளை கவனிப்பதிலும் ஈடு
பட்டிருக்குங்கால் இன்னார் விஷயமாக சாக்ஷி
கொடுங்கள், அல்லது இன்னாருக்கு சிபாரிஷ்
செய்யுங்களென றஹ்மானால் உத்திரவு
கொடுக்கப் பெற்றவர்கள்மட்டும் பேசுவார்
கள். அவர்களும் உண்மையையும் நேரானவை
யையுமே பேசுவார்கள். எனவே காபிர்,
கெட்ட நிர்ணய முடையவர் ஆகியோருக்குச்
சிபாரிஷ் செய்யமாட்டார்கள். சாக்ஷியம்
கொடுப்பதிலும் கூடுதல் குறைவாகக்கூறமாட்
டார்கள். அந்நாள் உண்மை வெளியாகக்
கூடியநாளாகையால் பொய்யும் தகுதியற்ற
வார்த்தைகளும் அதில் வெளியாகமாட்டாது.
ஆகவே எவன் நாடுகின்றானோ அவன் தன்
றப்பளவில் தன் ஒதுங்குந்தானத்தை ஆக்
கிக்கொள்ளவும்! அல்லாஹ்த ஆலா வேதங்
களின் மூலமும் நபிமார்கள் வாயிலாகவும்
மானிடர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை
செய்திருந்தும் அவனது கட்டளைக்கு மாற்
றஞ் செய்திருப்பதால் சமீபகாலத்திய வேலை
யைக்கொண்டு எச்சரிக்கை செய்கிறான். அது
மனிதன், தான் பூஉலகிலிருந்து அனுப்பி
பிவைத்ததைக் கண்டு கொள்ளும் நாளாகும்.
அதில் ஏற்படும் அமளியை காபிர் பார்த்து
நான் மனிதனை ஜனிக்காது மண்ணாகயிருந்
தால் நல்லதாக யிருந்ததே என்று கூறு
வான் என்பதே.]

இத்திரு அத்தியாயம் மக்கியாம். இவ்
வத்தியாயம் அருளப்பட்டதற்குக் காரணம்,
எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்
கள் நபியாக வந்து மறுமை நாளைக் குறித்து
அறிவித்தது குப்பார்களுக்கு பெரும் ஆச்சரி
யமாகத் தோன்றிற்று. அதனால் அன்னோர்
கேலி பரிகாசமாக மறுமைநாளைப்பற்றி பிரஸ்
தாபிக்க ஆரம்பித்து, கெட்டு மக்கிப்போன
எலும்புகள் எவ்வாறு மறுபடியும் ஒன்று
சேரப் போகிறதென்றும், அந்நாள் எப்பொ
ழுது ஏற்படப்போகிறதென்றும், அவ்வாறான
நாள் ஒருக்காலும் ஏற்படப் போகிறதில்லை
என்றும், இவ்வுலகின் வாழ்க்கை ஒரு பிர
தான விஷயமல்ல; உலகில் ஜனிப்பதும்
பிறகு மரணமடைவதும் சகஜமான விஷயமா
கையால் மரணத்திற்குப் பின் எழுப்பப்படு
கிறதென்பது கிடையாது என்றும், அவ்வாறு
நிகழ்வதாயினும் நாங்கள் உயிருடனிருக்
கும்போதே ஒருமுறை ஏற்படட்டும் பார்ப்
போமென்றும், நன்மை தீமைகளுக்குக் கூலி
கொடுப்பதற்கு ஒரு நாளை எதற்காக எதிர்
பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும்,

அவ்விஷயங்களுக்கு உடனுக்குடன் கூலியோ தண்டனையோ கொடுக்கப்படுமாயின் மானிடர் அதைக்கண்டு உணர்ச்சி பெற்று நற்கருமங்களை உற்சாகமாகப் புரிவதற்கும் கெடுதியைவிட்டு உடனே அகன்று விடுவதற்கும் ஆயுத்தமாக இருப்பரென்றும் கூறிக்கொண்டிருந்தனர். அவர்களின் இக்கூற்றுகள் யாவற்றையும் மறுத்து, நன்மை தீமைகளுக்கு கூலி கொடுப்பதற்காக மறுமை நாளை ஏற்படுத்தியிருக்கும் விவரத்தையும் அவர்களின் வினவுதல்கள் பெரும் ஆச்சரியத்தைத் தரத்தக்கதாக யிருக்கிறதென்பதையும் குறிப்பிட்டு அன்னோரின் வினவுதல்களுக்கு சமாதானம் கூறுவதற்கேயாம்.

இதன் முதலாவது வாக்கியத்தில், "எதைப் பற்றி ஒருவருக்கொருவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்" என வினவுகின்றான். அதாவது, அவர்கள் எவ்விஷயமாக ஒருவருக்கொருவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்களென்பதை அல்லாஹ்த் ஆலா நன்கு அறிந்திருந்தும் அஃதோர் மகத்தான விஷயமாகயிருப்பதுடன் அதுவிஷயம் கூறப்படின் அன்னோரின் புத்தியில் அமையுமா என்பதைக்கூட தெரிந்துகொள்ளாது அதில் தலையிட்டிருக்கின்றனரென்பதையும் அவர்களின் இம்முயற்சி பயனடையாது யாதொரு பிரயோசனமுமேற்படப் போகிறதில்லையென்பதையும் தெரிவித்து ஹஸ்ரத் ஆதம் (அலை.) அவர்கள் காலம்முதல் எம்பிரான் நபிகள்நாதர் (ஸல்) அவர்கள் காலம்வரை அல்லாஹ்தஆலா நபிமார்கள் மூலம் துயர்படியாக இதுவிஷயத்தை அறிவித்தும் நபிமார்கள் இப்பிரசாரத்தில் அநேக உதாஹரணங்களை எடுத்துக்காட்டி முழுப் பிரயாசையோடு உழைத்து மறுமையை ஸ்திரப்படுத்தியும் வந்திருக்கும் நிலைமையில் அன்னோர் ஒருவருக்கொருவர் அதுவிஷயமாய் கேட்டுக் கொண்டிருப்பது தகமையுடையதாக மாட்டாதென அறிவிக்கிறான். மறுமைநாள் சம்பந்தமாக சிலர், அவை அறவே ஏற்படமாட்டாதாகையால் கியாமத் என்பதே கிடையாதெனக் கூறினர்; சிலரோவெனில், கியாமத் என்பதெல்லாம் அறிவிற்குக் கொண்டுவரக்கூடிய ஒரு விஷயம்தானென்றும் செப்பினர்; வேறு சிலர் கியாமத் என்பது சரீர சம்பந்தப்பட்டதல்ல; ஆத்மார்த்தமானதாகுமெனக் கூறினர்; (இஃது நஸாராக்களின் கொள்கையாகும். அன்னோர் ஆத்மாமட்டுந்தான் எழுப்பப்படுகிறதெனக்கூறுகின்றனர்) சிலர் மறுமையில் எழுப்பப்படுவதென்பது மறுபிறப்புத்தானென்றும் அதாவது ஒருவன் மரணமாய் விடுவானாகில் அவனினுள்ள ஆத்மாவே வேறு ஜடலத்திற்கு வந்து விடுவது கொண்டு இதே உலகில் நன்மை தீமைகளுக்கு தெண்டனையோ கூலியோ கொடுக்கப்பட்டுப் போகிறதென்றும் அதுதான் அவர்களின் மறுமை என்றும், இதுவன்றி வானம் பூமிக்கு நாசம் ஏற்படமாட்டாதென்றும் கூறி நிற்கின்றனர். முடிவாக இம்மகத்தான விஷய நிகழ்ச்சி அனேகரின் புத்திக்குப் புலனாகாது பலவாறான சந்தேகங்கள் ஜனித்துக்கொண்டிருக்கின்றது. ஆதலால் இவ்வாறாக மானிடர்களின் சிற்றறிவுக்குப் புலனாகாது அதன் இரகசியம் யாதாகுமெனத் தெரிந்துகொள்வது கஷ்டமாகயிருக்கக்கூடிய விஷயத்தில் நபிமார்கள் கூறுவதையே ஏற்று அங்கீகரித்து நடக்கவேண்டுமென்று நமது இஸ்லாம் மார்க்கம் கட்டளை பிறப்பித்திருக்கின்றது. இதுதான் 'ஈமான் இஜ்மாலி' என்றும் ஈடேற்றம் பெருவதற்குள்ள மார்க்கமென்றும், வீண்தர்க்க விவாதம் அதிகமாகப் புரிவதுகொண்டு வழிகேடே வந்து சம்பவிக்குமென்றும் சன்மார்க்கம் பஹிரங்க அறிக்கை யிடுகின்றது. ஆகவே அவ்விஷயத்தில் அதிக கவனஞ் செலுத்திக்கொண்டு மேலும் மேலும் தர்க்க விவாதம்புரிய முற்படுவது பிரயோசனமற்றதாகு மென்பதை நன்குதெரிந்து கொள்கிறோம். இதற்காகத்தான் அல்லாஹ்த ஆலா, அவ்வாறு செய்யலாகாதென்று வற்புறுத்திக்கூறி, மறுமை நாளில் கூலிகொடுக்கப்படுவதை கூடிய சீக்கிரம் சந்தேகமறத் தெரிந்து கொள்வீர்கள்; அதற்குப்பின் யாருக்கும் எவ்வித சந்தேகமுமேற்படமாட்டாது; இவ்வுலகின் வாழ்க்கை அற்பமானதாக யிருக்கும் என அறிவிக்கிறான்.

மகத்தான அந்நாள் (மறுமை நாள்) ஏற்படுவதன் விஷயத்தைக் குறிப்பிட்டுவிட்டு அதற்குக்காரணமான—அவை நமக்கு நன்றாய்ப் புலனாகக்கூடிய சில விஷயங்களை அறிவிக்கிறான். அதனால் வல்லநாயன் இவ்வுலகத்தை ஒன்றுமில்லாது செய்துவிட்டு வேறு உலகத்தை உண்டுபண்ணுவதற்குச் சக்தி பெற்றிருக்கின்றான்; அவ்வாறு வேறு

உலகைப்படைப்பதில் அமைந்துள்ள இரகசியங்களும் விதங்களும் மானிடர்களாகிய நம்மனோரின் சிற்றறிவுக்கு எட்டுகிறதில்லை யாதலால் அவை சம்மந்தமாய் தர்க்க விவாதம் புரிந்து கொள்வதும் ஒருவருக்கொருவர் கேட்டுக் கொள்வதும் பிரயோசனமற்றதாகும்; அவைகளை உண்டு பண்ணுவதில் யாருடைய உதவியும் அவனுக்கு தேவையில்லை என்பவற்றை அறிவித்து விட்டு, உலகமும் அதன் வாழ்க்கையும் எவ்வஸ்துக்களின் மீது நிலைத்திருக்கிறதோ அவைகளை வரிசைக்கிரமமாகக் கூறி அவைகளை உண்டுபண்ணுவதில் யாருடைய உதவியும் கூட்டும் தேவையில்லா திருந்ததோ அதேபோல் மறுபடியும் இவ்வுலகைப்படைப்பதற்கு யாருடைய உதவியும் தேவையில்லை என்பதை நாம் தெரிந்து கொள்ளும்படி விளக்குகின்றான். அதாவது, (1) நாம் அலைந்து திரிவதற்கு பூமியை விரிப்பாக ஆக்கி யிருப்பதாகவும், பூமியை காற்றைப்போல் இலேசாகவும் தண்ணீரைப்போல் மிருதுவானதாகவும் நெருப்பைப்போல் சூடானதாகவும் படைத்திருந்தால் அதில் யாரும் வாசஞ்செய்ய முடியாதென்றும் இவ்வாறான அவனுடைய கிருபையின் பிரயோசனத்தை அனுபவிப்பதில் முஃமின் காபிர் யாவரும் ஒன்றுபோல் ஸ்தானம் வகித்திருக்கின்றன ரென்றும் கூறி மறுமையில் ஆண்டவனுக்குவழிப்பட்டோரின் இருப்பிடம் வேறாகவும் அவனுக்கு மாறுசெய்தவர்கள் தங்குமிடம் வேறாகவும் ஏற்படுத்தியிருப்பதால் இவ்வாறான மாறுதல்களை உண்டு பண்ணிய நாயன் இப்பூ உலகை அழித்துவிட்டு வேறு உலகை உண்டுபண்ணுவதற்கு சக்தி அற்றவனாக ஆய்விட்டானா? அவனுக்கு அவ்வாறு செய்ய முடியாதாவென வினவுகின்றான் (2) இப்பூ விரிப்பில் அசைவுதல் ஏற்படாதவாறு மலைகளை, முளைகளைபோலாக்கிவைத்த நாயன் ஒருநாளில் அதில் அசைவுதல் உண்டுபண்ணி நாசமாக்கிவிட சக்திபெறவில்லையா? வெனக் கேட்கின்றான். (3) மானிடர்களை ஆண்பெண்ணாக ஜோடி ஜோடியாகப் படைத்து பூவிரிப்பின் மீது சுவண்டி யடைவதற்கு வசதிசெய்து கொடுத்திருக்கும் நாயன், யாவற்றையும் அழித்துவிட்டு மறுமுறை அதனைப் படைப்பதற்கு சக்திபெற்றவனாக யில்லையா? வெனக் கேட்கின்றான். (4) மானிடர்களுக்கு நித்திரையை ஆரோக்கியமாக ஆக்கிவைத்து நித்திரையானது சிறிய மரணமென்றும் மானிடன் நித்திரையினின்று விழிப்பதே போன்று உலக முடிவுக்குபின் மறுமை நாளில் விழித்தெழும்புவானென்றும் அறிவிக்கின்றான். (5) அல்லாஹ்த ஆலா இரவை மானிடர்களுக்கு திரையாக ஆக்கியிருப்பதால் நல்லவேலைசெய்வோரும் கெடுதியில் முற்பட்டு அலைவோரும் அதனை தங்கள் தங்கள் காரியங்களுக்கு உபயோகித்துக் கொள்கின்றனர். இவ்வாறான இரவிற்குப்பின் பகலும் பகலுக்குப்பின் இரவும் மாறிமாறிவரும்படி செய்த நாயன் மரணத்திற்குப்பின் உயிர்ப்பித்து எழும்பும்படி செய்வதற்கு சக்திபெற்றவனாக இருக்க முடியாதா? (6) அல்லாஹ்த ஆலா பகலை மானிடர்கள் ஜீவனோபாயத்தைத் தேடிக்கொள்வதற்காகப் படைத்திருப்பதால் அதில் முஸ்லிம் காபிர்யாவரும் பங்கெடுத்துக் கொள்கின்றனர். எனவே, மானிடர் இரவில்சுவண்டி பெருவதும் பகற்காலங்களில் ஜீவனோபாயத்தைத் தேடிக்கொள்வதும் சகஜமாக இருந்துவருகிறது. இதுவன்றி சதாவும் இரவாகவோ அல்லது பகலாகவோ இருந்துவிடுமாயின் சுவண்டி பெருவதன் வாயல் அடைபட்டுப் போம். இவ்வாறு ஒரு கட்டுப்பாடுள்ள மாறுதல் ஏற்படும்படிசெய்தநாயன் இவ்வுலகினை மறுமுறைபடைப்பதற்கு சக்திபெற்றவனாக ஆய்விடமாட்டானா? (7) மானிடர்களுக்குமேலே ஏழுவானங்களை உறுதியானதாகவும் எவ்வளவுகாலம் செல்படியான போதிலும் கெட்டுப்போகாமலிருக்கக்கூடிய விதமாகவும் படைத்து அதில் அமைந்திருக்கும் ஏழு நக்ஷத்திரங்களைக்கொண்டு மானிடர் பிரயோசனமடையும்படி செய்திருக்கும் நாயன், அவைகளை அழித்து மறுமுறை படைப்பதற்கு சக்திபெற்றவனாக இருக்கமாட்டானா? (சமீப ஆராய்ச்சியாளர் ஏழு வானங்களென்பது ஒன்றுக்குப்பின் ஒன்றாக அமைந்திருக்கும் ஏழு நக்ஷத்திரங்களென்றும் அவைகள் அததன் இருப்பிடத்திலுள்ள வெட்டவெளியில் சுற்றிக்கொண்டிருக்கிறதென்றும், எந்த இடத்தில் அவைகள் சுற்றிக்கொண்டிருக்கிறதோ அந்த இடம்தான் அதற்குள்ள வானமென்றும் கூறுகின்றனர். ஆனால் இக்காலை வரை அவைகள் சுற்றிக்கொண்டிருக்கும் வெட்டவெளியை தூரதிருஷ்டி மூலம் அறிந்து

கொண்ட எந்த மனிதனும் கிடையாது. ஆகவே வானம் கிடையாதென்று கூறுவது வீண்விதண்டாவாதமேயாகும்) (8) பகற்காலத்தில் சூரியனையும் இரவில் சந்திரன் நக்ஷத்திரங்களையும் படைத்து அதில் பிரகாசத்தை அமைத்து சிலவற்றில் உஷ்ணத்தையும் சிலதில் குளிர்ச்சியையும் ஏற்படுத்தி பலவாறாக அமைத்து வைத்திருக்கும் நாயன், இப்பூஉலகினில் நல்லோர் கெட்டோர் யாவருக்கும் நற்கூலியும் வேதனையும் கொடுக்க சக்தி பெற்றவனாக இருக்கவில்லையா? கொடுக்க இயலும். ஆனால் அதற்காக மறுமை நாளைக்குறிப்பிட்டிருப்பதால் அங்குதான் கொடுப்பான். (9) மேகத்திலிருந்து தண்ணீர் வருஷிக்கச்செய்து தானியங்களையும் புற்பூண்டுகளையும் தோட்டங்களையும் உற்பத்திசெய்த நாயன் மறுபடியும் அவ்வாறு உண்டுபண்ண சக்தி பெற்றவனாக ஆயிருக்கவில்லையா? நிச்சயமாக சக்திபெற்றே யிருக்கிறான் என்று தெரிவிக்கிறான்.

எம்பெருமானார் நபிகள்திலகம் (ஸல்.) அவர்கள் மறுமைநாள் விஷயத்தை எடுத்துக் கூறுங்கால் குப்பார்கள் அந்த நாள் இப்பொழுதே ஏற்பட்டால் அதன் உண்மையைத் தெரிந்துகொள்வோமெனக் கூறினர். இக்கூற்றுக்கு விடையாக, நிச்சயமாய் தீர்ப்பளிக்கக்கூடிய நாள், நல்லோர் கெட்டோருக்கிடையே பாகுபாடு செய்யக்கூடிய நாள், நல்லடியார்களுக்கு உயர் பதவியும் தீயோருக்கு தண்டனையும் கிடைக்கும் நாள் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு காலத்தில் ஏற்படக்கூடியதாகயிருக்கிறது ; உலகில் குப்பார்கள் தீபரப்படுவதுகொண்டு அஃதேர்ப்படப்போவதில்லை; அந்நாள் வருவதற்குமுன் சிலநிகழ்ச்சிகள் ஏற்படுவது அத்தியா அசியமாக இருக்கின்றது(1) இதுபொழுது சரீரத்துடன் ஆத்மாசம்பந்தம் வைத்திருப்பது நீங்கி மறுபடியும் சரீரத்துடன் ஆத்ம சம்பந்த மேற்படவேண்டும் (2) உலகவாழ்க்கையின் சகல நிகழ்ச்சிககளும் நாசமாக்கப்பட்டும் அதன் முகடு, விரிப்பு, விளக்கு முதலிய சகலனவும் மானிடர்களின் ஊன்தீன் யாவற்றும் முடிவடைந்து உலகினுக்கு வரவேண்டிய ஆத்மாக்கள் முழுதும் வந்து பிரயோசனம் பெற்றுத் தீரும் வரை கியாமத்து ஏற்படமாட்டாதென்று அல்லாஹ்தஆலா அறிவிக்கின்றான்.

இதன் 18-வது வாக்கியத்தில் (ஸூர்) குழல் ஊதப்படும் நாளில் நீங்கள் கூட்டம் கூட்டமாக வருவீர்களென அறிவிக்கிறான். அதாவது, இந்த இடத்தில் ஸூர் ஊதுவதென்பது இரண்டாவது ஊதுதலையே குறிப்பிடுகிறது. ஏனெனில் முந்திய ஸூர் ஊதப்பட்டவுடன் உலகமும் அதிலுண்டான வஸ்துக்களும் நாசமாய் ஒன்றுமில்லாது போய்விடும். பின்னர் இரண்டாவதாக குழல் ஊதப்பட்டவுடன் அதன் கடிசானசத்தத்தால் சகல ஆத்மாக்களும் தன்தன் சரீரங்களுடன் சம்பந்தப்பட்டு தனித்தனியே எழுந்துவரும். அதுகால் முஸ்லிம்களின் வரிசை வேறாகவும் அதிலும் ஒவ்வொரு நபிமார்களின் உம்மத்தோர்கள் வெவ்வேறாகவும், எஹூது நஸாறா ஹிந்து முதலிய சமுகத்தினர்களின் வரிசைகள் வெவ்வேறாகவும் இருக்கும். இவ்வாறு கூட்டங் கூட்டமாக நியாயத் தீர்ப்புக்காக அல்லாஹ்த ஆலாவின் சன்னிதானத்துக்கு யாவரும் வருவார்கள் என்பதாகும்.

இதன் 21-22-வது வாக்கியங்களில் அக்கிரமஸ்தர்களை நரகம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதெனக் கூறுகின்றான். அதாவது, நரகம் பாவிகள் குப்பார்கள் முஷ்ரிக்கள் ஆகிய இன்னோரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. முடிவாக அன்னோர் அதில் போடப்பட்டு வேதனை செய்யப்படுவார்கள். முஷ்ரிக், காபிர்களோவெனில் சதாகாலம் அதிலேயே தங்கி வேதனை அனுபவிப்பார்கள். முஃமின்களில் பாவஞ்செய்தோர் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குப்பின் அங்கிருந்து வெளியாய்விடுவர். அன்னோர் உலக வாழ்க்கையின் அற்ப சுவண்டிக்காக ஆண்டவனது கட்டளையை மீறி நடந்ததன் பயனாக வெகுநாள் வேதனை அடைய வேண்டியதாக யிருக்கின்றது. அந்த நரகத்தில் அன்னோருக்கு குளிர்ந்த தண்ணீர், குளிர்ந்த காற்று குளிர்ச்சியான இடம் குளிர்ந்த உடுப்பு முதலிய எவ்விதக்குளிர்ச்சியான வஸ்துவும் கண்முன்னால் கூட இருக்கமாட்டாது. ஆனால் அன்னோர் தாகம் பொருக்க முடியாது அதிசூடான தண்ணீரையும் நரகவாதிகளின் புண்களிலிருந்து வடிந்தோடும் மஞ்சள் நீரையும் குடிப்பார்கள் என்பதே. ஆகவே குப்பார்கள் சதாகாலமும் நரகத்தில் கிடந்து வேதனைப்படுவார்களென்பதை நன்கு தெரிந்துகொள்கிறோம். ஆனால் சிலர் “ நரகவேதனையானது

என்றென்றும் முடிவுபெருத ஊழியூழி காலம் நிலைபெற்றிருக்குமென்று கூறுவதற்கு இடமில்லை என்றும், குர்ஆன்ஷரீபின் முழுக் கருத்தையும் ஆழ்ந்து நோக்குங்கால் நரக வேதனையானது ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப்பின் முடிந்துவிடுமென்பதையே நன்கு தெரிந்துகொள்கிறோம்'' என்றும் எழுதி வைத்திருக்கின்றனர். இஃது காதியானிகளின் பிரதான கொள்கைகளிலொன்றாகும்.

அல்லாஹ்தஆலாவுக்கு மாறு செய்தவர்களுக்குக் கொடுக்கப்படும் வேதனையைக் குறிப்பிட்டுவிட்டு நல்லடியார்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து அவனது கட்டளையைச் சிரமேற்ருங்கி நடந்தோருக்கு அளிக்கப்படும் சன்மானங்களை கூறுகையில், பேணுதலுடன் நடந்துகொண்டோருக்கு மறுமையில் பலவாறன சுவண்டிகளும் சீதேவித்தனமும் ஜெயங்களும் வாசஞ்செய்வதற்கு உத்யா வனங்களும் போஜனத்திற்காகத் திராக்ஷைகளும் அவர்களின் மனோதிருப்தி, உல்லாச வாழ்க்கை முதலியவைகளுக்காக ஒரே வயதையுடைய இளமங்கையர்களும் பிரகாசமான பானப் பாத்திரங்களும் சன்மானமளிக்கப்படும் என அறிவிக்கிறான்.

இதின் 33-ம் வாக்கியத்தில் ''கவாயிப, அத்ராபா'' என்று கூறப்பட்டிருக்கிறது. 'கவாயிப்' என்பது இள வாலிபமுடைய மார்புடைத்திருக்கக் கூடிய மங்கையர்களுக்குச் சொல்லப்படும். 'அத்ராப்' என்பது ஒரே வயதையுடைய மாதுக்கள் என்பதாகும். ஆகவே இவ்வசனத்தில் அல்லாஹ்தஆலா ஒரே வயதையுடைய இளநங்கையர்களான மங்கையர்களைக் குறிப்பிடுகிறான் என்பதை நன்கு தெரிந்துகொள்கிறோம்.

ஆனல் பிரமதஸ்தர்களிலுள்ள அறியாத சிலர், குர்ஆன் ஷரீபில் பெண்களைப்பற்றிய வர்ணிப்புகள் காணப்படுகிறது, மறுமை நாளில் பெண்கள் கிடைக்குமென முஸ்லிம்கள் ஆதரவைத்துக்கொண்டிருக்கின்றனரென்று கூறுகிறான்களென்பதை பொது நோக்காகக்கொண்டு நம்மிற் சிலர், திருவசனங்களுக்கு கூடார்த்தங்கள் செய்ய முற்பட்டிருக்கின்றனர். அதற்கேற்ப இந்தவாக்கியத்தில் ''கவாயிப் என்னும் சொல்லானது பாலிகை என்னும் பெண்ணைக் குறிக்காமல் வெறும் பால்யதிசையின் இளமைப் பருவத்தையே குறிக்கும்'' என்று கூறி தர்க்கம் புரிவோருக்கு சமாதானங்கூற முற்பட்டிருக்கின்றனர். இச் சமாதானம் குர்ஆன் ஷரீபின் பஹிரங்க அறிவிப்புக்கு முற்றும் மாற்றமானதாக இருக்கிறதென்பது திண்ணம்.

குப்பார்கள், வானத்தைப் படைத்த நாயன்வேறு, பூமியைப்படைத்த நாயன் வேறு என்று கூறிக்கொண்டிருந்தனர். அச்சொல்லை மறுப்பதற்காக வானங்களையும் பூமியையும் இவைகளுக்கிடையி லுண்டாயிருக்கும் வஸ்துக்களையும் படைத்துக் காப்பாற்றக் கூடிய நாயன் றஹ்மானை அந்தஒரேநாயன் தான் என்பதாக அல்லாஹ்தஆலா அறிவிக்கிறான்.

எந்நாளில் ஜிப்ரயீலும் மற்ற மலக்குகளும் வரிசைவரிசையாக நிற்பார்களோ அந்நாள் நீதிபரிபாலனஞ் செய்வதான நாளாகவும், வல்லமைபொருந்திய அல்லாஹ்தஆலாவின் நீதிநெறியின் அமலியைக்கண்டு ஒவ்வொருவரின் மனமும் நடுக்கங்கொள்ளும்படியான நாளாகவு மிருக்கும். அதுகாலை யாரும் அல்லாஹ்த ஆலாவிடம் பேசுவதற்கு சுதந்திரம் பெற்றவர்களாக இருக்கமாட்டார்கள். ஆனல் அல்லாஹ்தஆலா யாருக்கு அனுமதியளிக்கின்ருனே அன்னோர் அனுமதி பெற்று ஒழுங்கானமுறையோடு பேசுவார்கள் எனக் கூறுகின்றான். இவ்வாயத்தால் சிலருடைய துர்க்கொள்கைகளுக்கு மறுப்புக் கூறப்படுகிறதென்பதை நன்கு தெரிந்துகொள்கிறோம். அதாவது, ஈஸவிகளிற் சிலர் மானிடர்கள் புரியும் பாவங்கள் யாவற்றுக்கும் ஹஸ்ரத் ஈஸா (அலை) பொறுப்பேற்றுக் கொண் டிருக்கின்றார்கள்; ஆதலின் அவரை கடவுளின் குமாரர் என்று உறுதி கொள்வதே போதுமானதாகும்; மறுமை நாளில் அங்குள்ள சகலவிஷயங்களும் அவர்களின் கைவசமாய்விடும்; அவர்களை உறுதி கொண்டோர் யாவரையும் அழைத்துச்சென்றுவிடுவார்கள்; எனவே இவ்வுலகினில் நாம் நாடியதைச் செய்யலாம், பிரயாசையோடு வணக்கம்புரிவதும் ஹராம் ஹலால் என்று பாகுபாடு செய்வதும் பிரயோசனமற்றதாகும் என்றும் கூறிக்கொண்டிருந்தனர். இன்னும் கூறியும் வருகின்றனர். இக்கூற்றை மறுப்பதற்காக, ஈஸா (அலை) உள்பட யாவரும் அந்தவரிசையில் நிற்பார்கள்; யாவரும் பேசுவதற்கு சுதந்திரம் பெறமாட்டார்கள்;

சிபாரிஷ்செய்யமாட்டார்கள்; ஆனால் அல்லாஹ்தஆலாவால் அனுமதி பெற்றவர்கள் தான் பேசமுடியுமென்று கூறி நஸாராக்களின் தவறான இக்கொள்கை உண்மையற்றதாகுமென விளக்கிக்காண்பிக்கிறான். (வல்லாஹு அஃலம்.)

நாயகவாக்கியம்.

ஒரு நாளன்று மூன்று நபர்கள் பாதைசாரியாக நடந்து செல்லுங்கால் மழைபெய்ய ஆரம்பித்தது. அதனால் அம்மூவ்வரும் ஒரு மலைப் பொதும்பில் நுழைந்து கொண்டனர். உடனே மலைமேலிருந்து ஓர் பெரும்பாராங்கல்லானது சருகிவந்து அப்பொதும்பின்வாயிலை அடைத்துக்கொண்டதால் அம்மூவரும் அதற்குள் அகப்பட்டு திகைக்கும்படிநேரிட்டுவிட்டது. அன்னோர் இதனைக்கண்டு பயந்து இதுபொழுது நாம் யாதொன்றும் செய்யமுடியாது ஆகவே நாம் ஒவ்வொருவரும் தூயமனதோடு அல்லாஹ்த ஆலாவுக் காகப்புரிந்திருக்கும் நற்கருமங்களை ஞாபகத்திற்குக் கொண்டுவந்து அதனை பொருட்டாகக் கொண்டு அல்லாஹ்த ஆலாவிடம் பிரார்த்தனை புரிவோமாகில் ஒருக்கால் அதன் பொருட்டால்இக்கல் அகற்றப்பட்டுப்போம், எனப்பேசிக் கொண்டார்கள். ஆகவே அம் மூவரிலொருவர் முன்வந்து, யாஅல்லாஹ்! என் மாதாப் பிதாக்கள்விருத்தாப்பியர்களாகவும் பலக் குறைவுடையவர்களாகவும் இருந்தார்கள்; எனக்கு சிறுவயதையுடைய இளவாலிபர்களுமிருந்தார்கள். இன்னோரின் ஜீவனோபாயத்திற்காக சில ஆடுகள் என்னிடமிருந்தது; அவ்வாடுகளினின்று பால்கறந்து கொண்டு வருவேனாகில் தாய் தந்தையர்களுக்கு கொடுத்து அவர்களின் பசி தீர்ந்த பிறகுதான் பிள்ளைகளுக்குக் கொடுப்பதுவழக்கம். இவ்வாறு நடைபெற்று வருங்கால் ஒரு நாளன்று இரவில் யான் பால் கறந்து வருவதற்கு சற்றுநேரமாய் விட்டது. வீடு வந்து பார்க்கும்போது அவ்விருவரும் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு அப்பாலை கையிலெடுத்துக்கொண்டு அவர்களை எழுப்பாது நின்று கொண்டு அவர்கள் விழிப்பதையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். சிறு பிள்ளைகளோ பசியின் காரணமாக என்காலை பின்னிக் கொண்டிருந்தனர். இதே நிலைமையில் பொழுது விடிந்துவிட்டது. யாஅல்லாஹ்! இக்காரியத்தை யான் உனக்காக செய்திருப்பேனாகில் அதன் பொருட்டால் இக்கல் சற்று அகன்று வானம் தெரியும்படி செய்து விடுவாயாக எனப் பிரார்த்தித்தார். அவ்வாறே வானம் சற்று தெரிவதுபோல் அக்கல் சற்று அகன்றது. மற்றொருவர், யாஅல்லாஹ்! யான் என் சிறியதந்தையின் புதல்விமீது மோகங்கொண்டு அவளுடன் சம்மந்தப்பட விரும்பினேன். அவள் 100 தீனார் வேண்டுமெனக் கேட்டாள். யான் அரும் பிரயாசையோடு 100 தீனார்களை சம்பாத்தியஞ்செய்து அவளிடம் கொடுத்து சம்மந்தப்பட விரும்பி அவளுடைய இருகால்களுக்கிடையில் உட்கார்ந்த பொழுது அவள் என்னை நோக்கி அல்லாஹ்வின் அடியானே! ஆண்டவனுக்கு பயப்படுவாயாக! அநீதியாக என்கற்பை அழிக்காதிருப்பாயாக!! வென கூறினாள். உடனே யான் உன்னை பயந்து உனக்காகவே எழுந்து வந்துவிட்டேன். யாஅல்லாஹ்! இச்செயல் உனக்காகவே புரிந்திருப்பேனாகில் இதன் பொருட்டால் கல்சற்று அகன்று போய்விடுமாறு செய்வாயாக வெனக் கூறினார். உடனே அக்கல் சற்று அகன்றுவிட்டது. மூன்றாவது மனிதர், முன்வந்து யாஅல்லாஹ்! யான் குறிப்பிட்ட அளவு தானியம் தருவதாக ஒரு மனிதனை கூலி வேலை செய்வதற்கு ஏற்பாடு செய்திருந்தேன். அவன் குறிப்பிட்ட வேலையைச் செய்துவிட்டு கூலி பெறுவதற்காக என்னிடம் வந்தான். நானும் அக் கூலியைக் கொடுப்பதற்கு நாடினேன். அவன் அதனை விரும்பாது போய்விட்டான். அந்த தானியத்தைத் பூமியில் விதைத்தேன். அதில் பெரும் அபிவிர்த்தி ஏற்பட்டு அதனை

(இதன் தொடர்ச்சி 413-ம் பக்கம் பார்க்க.)



முஸ்லிம்களின் வீழ்ச்சி

மகுடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயரைக் கேட்டமாத்திரத்தில் நீங்கள் பீதியடைய வேண்டியதில்லை. ஏனெனில், உலகத்தை உய்விக்க, மாக்களை மக்களாக்க, அநாகரீகர்களை நாகரீகர்களாக்க, வீழ்ச்சி யடைந்தோரை உயர்த்த, பின்னுக்கு தள்ளப்பட்டோரை முன்னுக்குக் கொண்டுவர என்றுதோன்றிய இஸ்லாம் மதம் இக்குவலயத்தில் சம்பூர்ணமாகி தனதுலக்ஷியத்தை இப்புவியில் இனிதே நிறைவேற்றி மெய்ப்பித்துக் காட்டியிருக்கின்றது. இதுவெறும் தாவாவன்றி சரித்திர சம்பந்தமான சம்பவமாகும். இஸ்லாம் தோன்றிய அதாவது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நபியாக வந்தகாலத்தில் உலகத்தினுடைய நிலைமையையும், அறபிகளுடைய போக்கையும் பற்றியுள்ள சரித்திரம் நம்முன் இருக்கிறது. அப்பால் நாயகம் (ஸல்.) அவர்களின் 23 வருஷகாலத்திய சலியா உழைப்பினால் அவ்வறபிகள் அடைந்த முன்னேற்றமும், நாகரீகமும், சீர்திருத்தமும் செப்பத்தரமன்று. நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்குப் பின் ஸஹாபாக்களாலும் தாபியீன்களாலும் ஏனைய உலகங்கள் கண்விழித்ததும் முன்னேற்றத்தின் பாட்டையில் இழுத்துச் செல்லப்பட்டதும் நம்முன் நிற்கிறது. சுருங்கச்சொல்லின், தற்கால நவநாகரீகத்திற்கு ஒப்பற்ற தொண்டாற்றி அதற்கு அஸ்திவாரம் இட்டவர்கள் அந்த நபிகள் பிரானின் அன்பர்களும் பக்தர்களுமே யாவர். இது எம்மால் மாத்திரம் சொல்லப்படுவதில்லை. நாகரீகம் விளைந்தஸ்தலம் என்று நானிலமெங்கும் போற்றப்படும் ஐரோப்பா ஈன்ற அறிவுடைய—நியாயபுத்தியுள்ள மக்களே கூறிவருகின்றனர்.

ஆனால், அத்தகைய இஸ்லாத்தைப் பின்பற்றுபவராகக் கருதப்படும் சில முஸ்லிம்களின் தற்கால நிலைமையையும் இஸ்லாத்தின் உயரிய நோக்கத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அம்முஸ்லிம் எனப்படுவோர்க்கும் இஸ்லாத்திற்கும் எவ்விதச் சம்பந்தமுமில்லை என்றே நினைக்க வேண்டிய தேற்படும். இஸ்லாத்தைப் பின்பற்றுபவர் நிச்சயமாக முன்னேற்ற மடைந்தவராயும் உலகத்தின் உன்னதப் பதவியை யடைந்தவராயும் இருக்க வேண்டிய தவசியமன்றோ? அத்தகைய பலனை நாம் பெறவில்லையானால் அப்பொழுது நாம் முஸ்லிம் என்று பெயரளவில் கூறுகிறவர்களேயன்றி யதார்த்தமாக முஸ்லிம்களாக இல்லையென்பது பிரத்தியக்ஷம். நாம் இவ்வாறு கூறுவதைக் கேட்டவுடன் பலருக்கு நம்மீது சீற்ற முண்டாகலாம்? 'அவசரப்படேல்' என்னும் முதுமொழியைக் கடைப்பிடித்து சற்று நிதானியுங்கள் என்றே நாம் கேட்டுக் கொள்கிறோம். முஸ்லிம்களை முஸ்லிமல்லாதார் என்று கூற நாம் ஒருக்காலும் தயாராக இல்லை. பரிபூர்ணமான முஸ்லிமாக இருங்கள் என்றே நாம் உங்களைப்பணிந்து பன்முறையும் கேட்டுக்கொள்கிறோம்.

ஏனெனில், இஸ்லாம் மதம் மக்களை முன்னேற்றுகிறது. அதைப்பின்பற்றிய மக்களும் முன்னேறுகின்றனர். எனினும், இஸ்லாத்தை உள்ளன்போடு நேசிக்காத, இஸ்லாத்தைப் பின்பற்றவேண்டுமென்று விரும்பாத பலர், இஸ்லாத்தின் தெய்வீகசக்தியைப் பகிரங்கமாக எதிர்க்க முடியாது என்று ஐயமற அறிந்துகொண்ட பலர் இஸ்லாத்தில் வந்து விட்டதாக—முஸ்லிமாகி விட்டதாக—வெளிக்குச் சொல்லிக்கொண்டு அதற்கு ஊறு செய்ய அதாவது அதனைப்பின் பற்றிய மக்களுக்கு இடைஞ்சல் செய்ய முன்வந்த

னர். இக்குழாத்தினரின் இத்திய எண்ணம் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காலத்திலேனும், குலபாயே ராஷிதீன்களான ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக், ஹஜ்ரத் உமர்பாறூக் (ரலி,மா)ஆகிய பெரியார்களின் காலத்திலேனும் ஈடேறவில்லை. ஹஜ்ரத் உதுமான் (றலி.) அவர்கள் காலத்தில் இக்குழாத்தினரின் சூழ்ச்சி ஒருவாறு பலிக்கத் தலைப்பட்டது. இதிலிருந்து நம்மவருக்குள் கட்சிப் பிளவுகள் தோன்றலாயின. முதன்முதலாக 'உதுமானிய்யா' என்றும் 'ஸபாயிய்யா' என்றும் இரண்டு கட்சி தோன்றிற்று. இந்த 'ஸபாயிய்யா'வை உற்பத்தி செய்தவர் யூதராக இருந்து இஸ்லாத்தைத் தழுவிய நவ்முஸ்லிமான 'இப்னுஸபா' என்பவராவார். பின் இக்கட்சியானது 'ஷிஆ' என்றும் 'காரிஜிய்யா' என்றும் பிரிந்தது. இவ்வாறு கட்சிகள் தோன்றினும், சத்தியவான்களான உண்மை முஸ்லிம்களின் உழைப்பினால் இவர்களுக்குச் செல்வாக்கு எற்படாது போய் மக்கள் இவர்களின் மாயவலையில்மாட்டிக்கொள்ள ஹேதுவில்லாதுபோய்விட்டது. ஆதலால் முஸ்லிம்களின்முன்னேற்றம் வழக்கம்போல் மேலோங்கிக் கொண்டே இருந்தது. அவர்களுக்கு வெற்றிக்குமேல்வெற்றி கிடைத்துக்கொண்டே இருந்தது.

இவர்கள் தங்களது லக்ஷியத்தில் சித்தியடைவதற்கு பகிரங்கமான முயற்சி செய்வதில் பலனில்லை என்று கண்டமாத்திரத்தில் இரகசியமான சூழ்ச்சிகளை—சதியாலோசனைகளைச் செய்யத் தலைப்பட்டனர். ஆகவே இக்கூட்டம் பல்வேறுவகையில் பிரிந்து தங்களது வேலைகளைச் செய்யலாயின. என்றாலும் இக்கூட்டத்தினர் அரசியல்துரையில் அடிவைத்த மாத்திரத்தில் அக்காலத்திய அரசாங்கம் உடனுக்குடன் அவர்களை அடக்கிவிட்டது. ஆனால் மதசம்பந்தமான விஷயத்தில் தலையிடுங்கால் அரசாங்கம் அவர்கள்பால் நேரடியான நடபடிக்கை எடுத்துக்கொள்ளமுடியாது போயிற்று. எனவே, இவர்களை எதிர்த்து அடக்குவதற்காக மார்க்க பக்தர்களான முஸ்லிம்கள் முன்வந்தனர். இவர்களில்தான் இமாம்கள் போன்ற பெரியார்கள் உண்டாயினர். உள்ளாளுங்கள்ளர்களான இந் நயவஞ்சகக் குழாத்தினர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியதாகப் பல்லாயிரம் ஹதீதுகளைக் கட்டிவிட்டனர்; திரு குர்ஆனுக்கு தங்கள் மனம் போன போக்கில் பொருள் கூறவும் முற்பட்டனர். ஆதலின் இமாம்களான பெரியார்கள் இவ்விஷயங்களில் ஈடுபட்டு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நவின்றிருப்பதாகத் தக்க ஆதாரங்களுடன் ருஜுவான ஹதீதுகள் இன்னின்னவை என்றும், ருஜு இல்லாத ஹதீதுகள் இன்னின்னவை என்றும் பாகுபாடு செய்தனர்; திரு குர்ஆனுக்குப் பொருள்கொள்ளுவதற்குள்ள தக்கமுறையை ஸ்தாபித்தனர்; குர்ஆன் ஹதீதுகளிலிருந்து மார்க்க சம்பந்தமான சட்டதிட்டங்களை நிர்ணயித் தெடுப்பதற்கு சில மூலாதாரமான சட்டங்களையும் நிருமாணித்தனர். எனவே இவ்வித முறையைக் கையாண்டு உள்ளாளுங் கள்ளர்களை ஒடுக்கினர். இதனால் இச்சதிக் கூட்டத்தினருக்கு நாட்டில் ஆதரவேற்படாமல் சிறுபான்மையினராகச் சில கூட்டத்தினர் ஆயினர். இன்னுஞ் சிலகூட்டத்தினர் அடியுடன் இல்லாமலே ஒழிந்தனர்.

மார்க்கசம்பந்தமாக இவ்வித முடிவேற்பட்டாலும் அரசியல் சம்பந்தமாக இது பெரும் பெரும் தீயபலனை யுண்டுபண்ணிற்று. ஒரே அரசாங்கமாக இருந்த இஸ்லாமிய ஏகாதிபத்தியம் பற்பலதுண்டுகளாகப் பிறிந்தன. ஒவ்வொருதுண்டும் ஏனையதுண்டை அடக்கி ஏகாதிபத்தியம் கொள்ள விரும்பிற்று. இதனால் எதிரிகளைத் தலையெடுக்கவிடாமல் தட்டி ஒடுக்கிவந்த முஸ்லிம்கள் பல்வேறாகப் பிறிந்து, உள்நாட்டு யுத்தத்தால் பலங்குன்றி மாற்றானுக் கிடங்கொடுத்தனர். இதனால் முஸ்லிம்களின்வசம் இருந்த இஸ்லாமிய நாடுகள் பல அந்நியர்வயப்பட்டன. இஸ்லாமிய அரசாங்கங்களின் மனப்பான்மை மாறுபட்டிருந்தமையால் தங்களுக்குப் பலம் சேகரிக்கும் நோக்கத்துடன் விரோதிகளுக்குச் சலுகை காட்டவும் அவர்களுக்கு இடங்கொடுக்கவும் முஸ்லிம் அரசர்கள் முன்வந்தனர். ஆகவே, அதனா லேற்பட்டபலன் இன்றும் நம்மெதிரில் இருக்கிறது. இதைப்பற்றி நாம் அதிகம் விஸ்தரிக்க வேண்டியதில்லை.

எனவே, முஸ்லிம்களுக்கு அரசாங்கப் பலம் குன்றவே மார்க்கவிஷயத்தில் குதர்க்கம் செய்யும் கூட்டத்தினர் மறுபடியும் தலைதூக்கிவிட்டனர். முன்னர் 'பஹாயீ'க் கள்

என்றொரு கூட்டத்தார் பாரசீகத்தில் வந்தனர். இப்பால் பாஞ்சாலத்தில் 'காதியானி' என்ற வர்க்கத்தார் தோன்றியிருக்கின்றனர். இக் கூட்டத்தார் கூறும் வாதங்கள் யாவும் முன்னர் இமாம்கள் காலத்தில் நசுக்குண்டு போன நயவஞ்சக உள்ளாளுங் கள்ளர்கள் கூறிய வாதங்களும் தர்க்கங்களு மாகவே இருக்கின்றன. ஆனால், முற்காலத்து உள்ளாளுங் கள்ளர்கள் இஸ்லாத்தைக் கெடுக்கவென்றே கங்கணங்கட்டிக் கொண்டவர்கள். தற்போது ஏற்பட்டிருக்குங் கூட்டத்தார் அந்த நோக்கத்தின் பேரில் தலையெடுத்தவர்கள் என்று உறுதியாய்க் கூறுவதற்கில்லை. இவர்களின் வேலை முறை முயற்சியின் வழியானது அறிந்தோ அறியாமலோ அத்தீய குழாத்தினர்களின் வழியாகவே இருக்கிறது. எனவே, இவர்களது முயற்சியானது சரியான முறையிலில்லை; ஒழுங்கற்றதாக யிருக்கிறது என்று இவர்களை எதிர்த்துக்கூறப் புகுந்தால் தக்க முறைப்படி சரியான விடையிருக்க இவர்களுக்கு வழியில்லாமையால் இமாம்கள் மீது குறைகூறவும், அந்த இமாம்களாலேயே இஸ்லாம் வீழ்ச்சியடைந்ததாகவும் கூறி இமாம்களைப் பின்பற்றாது சுய ஆராய்ச்சி செய்யும் முறையைப் புதிதாக ஸ்தாபிக்க முயன்று, இமாம்களைப் பின்பற்றியதால் தான் இஸ்லாத்தின் முன்னேற்றம் குன்றி நாட்டில் பிளவுண்டாகி இஸ்லாம் வீழ்ச்சியடைந்தது என்று வாதாடுகின்றனர். இது சம்பந்தமாக காதியானி அஹ்மதிய்யா ஜமாஅத்துத் தலைவர் முஹம்மது அலி என்பவரும் அக் காதியானிக் கலாசாலையில் ஆசிரியராகயிருக்கும் ஸலீம் என்பவரும் இதுபொழுது தொடர்படியாய் வியாசங்கள் எழுதிவருகின்றனர். இவ்விதமாக வீட்டிற்குள்ளிருந்து விதண்டாவாதங்களை கிளப்பிவருபவர்களை நேருக்குநேராக விவாதித்துச் சரியான ஒரு முடிவுக்கு வந்துவிடலாம் என்று அழைத்தால் அதற்குப் பின்வாங்கி விடுகின்றனர். முன்னர் இவர்களின் தலைவரான மிர்ஜாகுலாம் அஹ்மத் அமிர்தசரஸ் மௌலானா தனுவுல்லா சாகிபுடன் 'முபாஹலா'ச் செய்து மடிந்தார். மற்றொரு மௌலானாவுடன் டில்லியில் தர்க்கஞ்செய்து தோல்வி யுற்றோடினார். அவரின் சிஷ்யரான முஹம்மது அலியோ மகா சமர்த்தர். நேருக்கு நேராகப் பேசமுன் வருவதே இல்லை. சிலகாலத்திற்கு முன் இவரை நேர்முகமாகப் பேச வரும்படி மௌலானா தனுவுல்லா சாகிப் அழைத்தபோது அவர் அதை மறுத்துவிட்டார். ஏனெனில், நேருக்கு நேராகப் பேசும்போது இல்லாத விஷயங்களை எடுப்பாகக் கூறமுடியாது; கூறும் விபரங்களுக்குத் தக்க ஆதாரத்தைக் காட்டவேண்டுமல்லவா? அவ்வாறு ஆதாரமிருந்தாலன்றோ விவாதத்திற்கு முன்வர மனந்துணியும். பின்னர் சமீப காலத்தில் சிம்லாவில் இந்த காதியானிகளுக்கும் முஸ்லிம்களுக்கும் தர்க்கவாதம் நிகழ்ந்ததும், அதில் காதியானிகள் தங்கள் தாவாக்களை ருஜூப்பிக்க முடியாமல் தோல்வியுற்றதும் நம் ஸை. இ. பத்திரிகையிலும் ஹி. இ. விலும் விபரமாக எழுதப்பட்டிருக்கிறது. மேலும் அது சம்பந்தமான முழுவிபரமும் ரிபோர்ட்டாக அச்சாகி வருகிறது. அது கிடைத்தவுடன் தமிழிலும் தர்ஜூமாச்செய்து வெளியிடப்படும். இந்த தர்க்கத்தில் காதியானிகளின் கக்ஷியை எடுத்துரைக்க அஹ்மதிய்யாக் கலாசாலை ஆசிரியர் ஸலீம் என்பவர் லாகூரிலிருந்து சிம்லாவுக்குச் சென்றார். அங்கு நடந்ததென்ன? தனது கக்ஷிக்குத்தக்க ஆதாரம் காட்ட முடியாமல் தோல்வியடைந்தது தான். எனவே தர்க்க விவாதத்தில் பலவாறு தோல்வியுற்றும் பத்திரிகையில் படாடோபமாக ஆதாரமற்ற விஷயங்களை எழுதிவிடுவதைப் பார்க்கும் ஒரு சிலர்-தக்க மார்க்க ஆராய்ச்சி இல்லாத மதியீனர்கள் அதைச்சரிகண்டு தாங்களும் அதேவிதம் கூறமுன் வருகின்றனர். இன்னோரின் அறியாமை தானென்னே!

சுயநிர்ணயப் பிரயோகம் என்று கூறப்படுகிற "இஜ்திஹாத்" செய்யும் உரிமை யாவருக்கும் உண்டு என்று முஹம்மது அலி கூறுகிறார். இவ்வுரிமையை ஒருவரும் மறுக்கவில்லை. ஆனால், சுய நிர்ணயப்பிரயோகம் செய்யமுன் வருபவருக்கு இருக்கவேண்டிய லக்ஷணங்கள் அவ்வுரிமையைக் கொண்டாட முன்வருபவருக்கு இருக்கவேண்டும். அதற்குரிய இலக்ஷணங்களைப் பொருந்தியவர் "இஜ்திஹாத்" செய்வதில் யாருக்கும் ஆக்ஷேபனை இல்லை என்றே கூறுகின்றோம். அந்த லக்ஷணங்களாவன :—

1. ஷரயீமஸ்அலா சம்பந்தமாகத் திருக்குர்ஆனிலுள்ள ஆயத்துகள்,

2. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களால் கூறப்பட்டவை என்று நிர்ணயிக்கப்பட்ட ஹதீதுகள்.

3. இல்மு லுகாத்;—அறபிப் பாஷையில் இலக்கண இலக்கிய சம்பந்தமான போதிய அறிவும் ஆற்றலும் அவர்களின் வழக்குகள்.

4. மதுஹபுகள்.

5. ஸஹாபிகள் தாபியீன்கள் ஆகிய முன்னோர்களின் சொற்கள், அவர்களின் அபிப்பிராயங்கள்.

6. மேற் கூறப்பட்ட ஐந்து விஷயங்களையும் சீர்தூக்கிப்பார்த்து மஸ்அலாவைக் கண்டுபிடித்தெடுப்பதற்கேற்பட்ட வழிமுறைகள்.

இந்த ஆறுகாரியங்களும் 'இஜ்திஹாத்' செய்வதற்குவேண்டப்பாலனவாக இருக்கின்றது. ஆனால் சுயநிர்ணய உரிமையை விரும்பும் நண்பர்களிடம் இந்த ஆறு தன்மைகளும் இருக்கின்றனவா என்று ஆராய்ந்துபார்த்தால் அவை கோழிமுட்டைதான் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். திருக்குர்ஆனைச் செம்மையாகப் படிக்கத் தெரியாதவர்களும், நாயகம் (ஸல்.) அவர்களின் ஹதீதுகளில் நான்கு வரியைக்கூடப் பாடஞ்செய்யாதவர்களும் அந்த ஹதீதுகளை ரிவாயத்துச் செய்யும் ராவிகளைப்பற்றிய தகவல்களைக்கொஞ்சங்கூட உணர்ந்துகொள்ளாதவர்களும் அறபிப் பாஷையைக்கற்றுப் போதிய பாண்டித்துவம் அடையாதவர்களும், வழிகெட்ட கூட்டத்தாரின் கொள்கைகளைத் தெரிந்துகொள்ளாதவர்களும், கியாஸ் செய்யும் முறையை யுணராதவர்களும் எங்கனம் இஜ்திஹாத் செய்தல் சாலும்? இஜ்திஹாத்செய்து தனிமத்ஹபு ஏற்படுத்த ஆற்றல் இல்லை என்று வாயார ஒப்புக்கொண்டிருக்கிற சாமான்ய உலமாக்களிடம் தமது தாவாவை ருஜூப்பிக்க முடியாமல் தோல்வி யடையும் இக்கூட்டத்தினர் சுயமே இஜ்திஹாத் செய்வது என்றால் அவர்களின் இஜ்திஹாதின் பலன் வழிகெட்ட கொள்கையாய்த் தான் வந்து விடியும். மேற்கூறப்பட்ட 6 வித லக்ஷணங்கள் பொருந்தியவர்கள் இமாம் அஹ்மது பின்ஹன்பல் (ரஹ்) அவர்களுக்குப்பின் இற்றைநாள்வரை இந்நிலவுலகில் யாரும் ஜனிக்கவில்லை என்றுதான் பாரவான்கள் தங்களது கிரந்தங்களில் எழுதி வைத்திருக்கின்றனர். தவிரவும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் ஹதீதுகள் இத்தனைதான் என்று தேர்ந்தெடுக்கப்பட்டதும் அந்த இமாம்களின் காலத்திலேயே ஏறக்குறைய பூர்த்தியாய்விட்டது. இன்னமும், அப்பெரியார்களின் காலத்திற்குப்பின் ஏதேனும் ஸஹீஹான ஹதீதுகள் தக்க சாக்ஷியத்துடன் வெளியானால் அதனை ஏற்றுக்கொள்வதில் அப்பெரியார்கள் ஆக்ஷேபணையும் செய்யவில்லை. எனவே சுயநிர்ணயப் பிரயோகத்தில் மோகங் கொண்டுள்ளவர்கள் இக்காலத்தில் புதிதாக ஏதேனும் ஒரு ஹதீதை ருஜூப்பித்துத் தக்க ஆதாரத்துடன் அப்பெரியார்கள் கூறிய மஸ்அலாக்களுக்கு மாறான ஒரு மஸ்அலாவைக் கண்டு தெளிய முடியுமா? நமக்கு வேண்டிய மஸ்அலாக்கள் இப்பொழுதிருக்கிற மத்ஹபுகளில் இல்லையா? ஆயிரத்துச் சொச்சம் வருஷமாக இருந்த முஸ்லிம்களுக்கு தேவையான விஷயம் இந்த மத்ஹபுகளில் காணப்படாமல் அவர்கள் கஷ்டப்பட்டிருக்கின்றனரா? என்ற விஷயங்களைச் சிந்தித்துப் பார்ப்பது அவசியமாகும். இன்னமும் முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கு இப்பொழுதுள்ள மஸ்அலாக்கள் எவ்விதத்தில் முட்டுக்கட்டையாக இருக்கின்றன என்பதையும் இவர்கள் கூறுவதில்லை. இவ்விதமாக இன்னோர், முன்னோர்களான இமாம்களையும், நம்மவரின் நன்மையின் பொருட்டு வகுத்து வைக்கப்பட்ட மஸ்அலாக்களையும் குறைகூறி மார்க்கத்திற்கு மாறான விஷயங்களை அறியாமல் பாமரமக்களிடம் கூறி அவனியோரைப் பிளவுபடுத்தி வைக்கின்றனர். இவ்வாறு கட்சிப்பிளவை யுண்டுபண்ணி முஸ்லிம்களின் பலத்தை முறியடித்து அவர்களை அடிமைப்படுத்தும் பணியில் அக்காலம் முதல் இக்காலம் வரை இடைவிடாமல் பல வழியிலும் முயன்று அதாவது திருகுர்ஆன் ஹதீது, ஸலபுஸ்ஸாலிஹீன்கள் ஏற்படுத்தியுள்ள வழியினைக் கடைப்பிடித் தொழுகுபவர்களை மூடப் பிடிவாதக்காரர்கள் என்றும், குருட்டு நம்பிக்கைக்காரர் என்றும் கூறி வருவதுதான் விந்தையாக இருக்கிறது. இவ்வாறு கூறுபவர்களை, நான்கு மத்ஹபுகளுக்கும் ஸலபுஸ்ஸாலிஹீன்களின் சொல்லுக்கும் கட்டுப்படாத ஒரு விஷயத்தை மார்க்கத்திற்கு முரண் இல்லாதவகையில் எடுத்துக் கூறும்படி யாம் அவர்களை அறைகூவி யழைக்கிறோம்.

இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் நன்மைசெய்யும் பாட்டைகள் எத்தனையோ இருக்க, மார்க்கமறியா மாக்கள் மார்க்கத் தலைவரெனக் கூறிக்கொண்டு மதத்தில் பிரவேசித்து மார்க்கத்தில் இல்லாத—இன்னமும் முரணான விஷயங்களை ஆதாரமற்ற முறையில் எழுதியும் பேசியும் வருவதுதான் வருந்தத்தக்க விஷயமாகும். இக்கூட்டத்தினருக்கு முஸ்லிம்கள் இடங்கொடுத்து அவர்களை ஆதரிக்க முன்வருவார்களாயின் அதுவே முஸ்லிம்களின் வீழ்ச்சிக்குக் காரணமாகும். ஆதலின் நண்பர்கள் கேட்டதையெல்லாம் நம்புவது என்ற கொள்கையில் இறங்காமல் ஒருவர் ஒரு விஷயத்தைக் கூறினால் அதற்கு மார்க்கத்தில் இடமிருக்கிறதா? அதற்கு ஆதாரமென்ன? அவர்கள் காட்டும் ஆதாரம் எம்மட்டும் நம்பத்தகுந்தவை என்ற இத்தியாதி விஷயங்களையும் கவனிக்கும்படியாய்ப் பன்முறையும் வேண்டிக்கொள்கிறோம்.

ஐரோப்பிய நாகரீகத்தின் விபரீதம்

(புரோப்ஸர் இஹ்ஸான்ஸாமி ஹக்கீ வரைவது)

பாரிஸ் தேசத்தின் விபரீதப்போக்கு.

ஐரோப்பாவில் நடைபெற்றுவரும் சிற்சில விஷயங்களை இங்கு குறிப்பிட உங்களிடம் அனுமதி கோருகின்றேன். புதிய சீர்திருத்த நாகரீகத்தில் மோகங்கொண்டு திரியும் ஒவ்வொருவரும் இதனைப் பார்த்து பிரயோசனமடைவார்களென்பது எமது துணிபு. ஐரோப்பாவின்கண் இதுகாலை காணப்படும் நாசச் சாதனத்தினின்று விடுதலையாக்கி வைப்பதற்கு இஸ்லாத்தை தவிர வேறு எந்த சக்தியாலும் முடியாதென்பதே அத்தேச அறிவாளிகளுடையவும் ஆராய்ச்சியாளருடையவும் தேச நாசத்தின்மீது அனுதாபங்கொண்ட

(408-ம் பக்கத் தொடர்ச்சி.)

விற்பனை செய்து சில மாடுகளையும் அதன் மேய்ப்பாளனையும் வாங்கினேன். இந்நிலைமையில் அன்னோன் வெகு காலத்துக்குப் பின் வந்து தனக்கு கிடைக்கவேண்டிய கூலியை விரும்பினான். உடனே யான் அம் மாடுகளையும் அவைகளின் மேய்ப்பாளையும் கொண்டுபோகும்படி கூறினேன். அவன் ஆச்சரியமுற்று என்கூட விளையாட்டா செய்கின்றீர்; ஆண்டவனுக்குப் பயப்படும் என்று கூறினான். உடனே யான், பரிகாசம் செய்யவில்லை; இஃது உம்முடையதாகும் எடுத்துச் செல்லும் என்று கூறவே அவ்வாறே எடுத்துச் சென்றான். யா அல்லாஹ்! இக்காரியத்தை உனக்காகச் செய்திருப்பேனாகில் அதன் பொருட்டால் இக்கல் அகன்று நீக்கப்பட்டுப் போய்விடும்படி செய்வாயாக! எனக்கூறினர். அத்தன்மைபோல் அக்கல் அகற்றப்பட்டுப் போய்விட்டது என்று எம்பெருமானார் சமத்துவத் தூதர் (ஸல்.) அவர்கள் அறிவித்ததாக ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி.) அவர்களைத் தொட்டு ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

சோதரீர்! மானிடன் தூய்ய மனத்தோடு செய்யும் நற் காரியங்களின் பொருட்டால் பெரும் பெரும் கஷ்டங்களிலிருந்து அவன் விடுதலையடையலாமென்பதையும் கலப்பற்றதாக அல்லாஹ்வுக்காக வென்றே புரியப்பட்ட நற் கருமங்கள் அல்லாஹ்த ஆலாவிடம் சந்தேகமின்றி ஒப்புக்கொள்ளப் படுகிறதென்பதையும் இந்த ஹதீதால் நன்கு தெரிந்துகொள்கிறோம். தவிரவும் தாய் தந்தையர்களின் பதவியானது பெண்டீர் பிள்ளைகளின் பதவியைவிட மேலாக இருக்கிறதென்பதையும் மானிடன் அன்னோருக்கு பணிவிடை செய்யக் கடமைப்பட்டிருக்கிறானென்பதையும் நன்கு தெரிந்துகொள்வோமாக.

வர்களுடையவும் முழுநம்பிகையாக இருந்து வருகிறது. தற்காலே ஐரோப்பில் காணப் படும் சீர்திருத்தம் எனப்படுவதும் நாகரீக மெனப்படுவதும்சமுகத்தை அழித்து நாசப் படுத்துவதாகவே இருக்கிறதென்பதை அன் னோர் நன்குணர்ந்திருக்கின்றார்கள். ஆகவே இதுகாலே ஐரோப்பா, ஈரல் தாமரைக்காய், குடல் நரம்புகள் முதலியயாவும் கெட்டுப் பழுதாய்ப்போன ஒரு வியாதியஸ்தன்போ லிருந்துகொண்டு தன்பலக்குறைவை மறைப் பதற்காக அலேந்துதிரிந்துவர முயற்சித்து வருகிறது. ஆனால் அஃது ஒவ்வொரு அடி வைக்கும்போதும் கீழேவிழுந்து விடுவதற் குத் தயாராக யிருக்கிறதென்பதை உலகம் கண்டுகொண்டிருக்கிறது.

மானிடகுணம்.

ஐரோப்பாவின் குணம் கெட்டுப்போய் விட்டதென சிலர் கூறுகின்றனர். ஆனால் ஆரம்பமுதலே அன்னேரில் குணமென்பதே குதிரைக்கொம்பாகக் காணப்பட்டுவந்திருக் கும்போது சற்குணம் துற்குணமென்பதற்கு இடமெங்கிருக்கிறதெனக் கேட்கின்றேன். எனவே ஐரோப்பாவில் ஏமாற்றுதல், மோ சஞ்செய்தல், வெட்கக்கேடான செயல்புரி தல், பொய்பேசல், தங்கள் நலவைநாடி இத ரர்களின் நலவுகளே திரஸ்கரித்தல் ஆகியவை களே ஐரோப்பாவின் நாகரீகமாக இருந்து வருகிறது. முடிவாக ஐரோப்பாவின் நாகரீக மென்பதே இவைகளுக்குத்தான் சொல்லப் படுமெனத்தெரிகிறது. உலகின் இதரபாகங் களில் வதியும் மனிதர்களெல்லாம் பொய் சொல்லுங்கால் தாங்கள் பொய்பேசுகிறோ மென்ற உணர்ச்சி திட்டமாக அன்னேரில் ஏற்பட்டேவருகிறது. ஆனால் ஐரோப்பாவில் மட்டும் பொய்பேசுவது வாழ்க்கையின் ஒரு சாதாரண அம்சமென்று கருதப்பட்டு அது பிரதான விஷயமென்றும் வாழ்க்கையின் முக்கியபாகமென்றும் யூகிக்கப்படுகின்றது. உண்மையைக் கூறுமிடத்து, மானிடத்தன் மையின் அடையாளமேஐரோப்பாவிலிருந்து எடுபட்டுப்போய்விட்டதென தைரியமாய்க் கூறலாம். அங்கும் மானிடத்தன்மையின் அடையாளங்களில் சிற்சில விஷயங்கள் காணப்படுகிறதெனக்கூறப்படின் அதுவெளி ரங்கத் தோற்றத்தில்தான் காணப்படுகிற தென்று கூறுவது மிகையாகாது.

குடும்ப வாழ்க்கை

ஐரோப்பாவில் குடும்பவாழ்க்கை மிக அரி தாகவே காணப்படுகின்றது. எனவே பெரும் பாலும் குடும்பவாழ்க்கையே நடைபெறுவ தில்லே. சிற்சில இடங்களில் நடைபெறுவதா கத் தோன்றினாலும் அதாவது, ஒரு ஆணும் பெண்ணும் புருஷன் பெண்சாதியின்தோர ணேயில்ஒரேவீட்டில் வாசஞ்செய்தபோதிலும் அன்னேர், இருவர் சேர்ந்து ஒரு அரையில் வாசஞ்செய்வதுகொண்டு செலவு கம்மியாக ஏற்படும் என்னும் காரணத்திற்காக அவ் வாறு வாசஞ்செய்கிறார்களேயன்றிவேறில்லே என்பதுதிண்ணம். அங்கு புருடனுக்கு பெண்சாதியிடம் பிரியமோ அனுதாபமோ கிடையாது. அவ்வாறே பெண்சாதிக்கு புருடன்மீது விருப்பமிருப்பதுமில்லே. ஒரு மனிதனுக்கு தன் பெண்சாதியை விட மேலான ஏதாகிலுமொரு பெண் கிடைத்து விடுவாளாகில் அவள்மீது மோகங்கொண்டு தன் பெண்சாதியை வீட்டினின்று வெளி யாக்கிவிட்டு புதியவளே சேர்த்துக்கொள் கிறான். இவ்வாறே ஒரு பெண்ணுக்கு அன் னிய ஆடவர்மீது மோகமேற்பட்டுவிடுமாகில் அவள் உடனே பிரிவினே செய்துவிடவேண்டு மென்று தன் புருடனுக்கு நோட்டீஸ் கொ டுத்துவிடுகின்றாள். இவ்வாறு செய்து ஒருவ ரை மற்றவர் அறியாதவர்களே போன்று- இவர்களுக்கிடையே ஏற்கனவே எவ்வித சம் பந்தமுமில்லாதவர்களே போன்று ஆய்விடு கின்றனர். ஆகவே இக்காலே ஐரோப்பாவின் வாழ்க்கையானது மிருகங்களின் வாழ்க்கை யைவிட கெட்டதாகயிருக்கிறதென்றுதைரிய மாய்க் கூறுவதற்குத் தயாராக இருக்கின் றேன். எனவே புருடனுக்கு பெண்சாதியுட னும் பெண்சாதிக்கு, புருடனுடனும் பிள்ளே களுக்கு, தாய் தந்தையர்களுடனும் தாய் தந் தையர்களுக்கு, பிள்ளேகளுடனும் எவ்வா றான சம்பந்தமும் இல்லாதிருக்கின்றது.

சொற்ப நாளேக்குமுன் என் சினேகித ரொருவர், ஒரு லெப்டினனட் கர்னலின் பெண்சாதி தம்மிடம்வேலேக்காரியாக அமர்ந் திருப்பதைத் தெரிவித்தார். அதுவிஷயத் தை வினவவே, அவள் வயதுடையவளாகி விட்டதன்காரணமாக புருடன்,வீட்டினின்று வெளியாக்கி விட்டதாகத் தெரியவந்தது. அவள் வயதுடையவளாய்விட்டால் அவன்

கிழவனாகமாட்டானா? அவனுடைய விர்த்தாப்பிய திசையில் என்ன செய்யப்போகிறான் என்பதுதான் எனக்குத் தெரியவில்லை.

துர்ச்செய்கைக்கு சன்மானம்

சில நாளைக்குமுன் என் நண்பரொருவர் பெரும் வற்புறுத்துதல் செய்து சினிமாக் கொட்டகையொன்றுக்கு என்னை அழைத்துச் சென்றார். அங்கு சிரிப்பு விளையாட்டின் தோரணையில் ஐரோப்பாவின் தற்காலநிலை பறக்கவிடப்படுகிறது. அதனைப் பார்ப்பது கொண்டு பெரும் உணர்ச்சி ஏற்பட்டு ஐரோப்பிய நாட்டின் சற்குணத்தின் இரகசியம் வெளுத்துப் போவதாயிருந்தது. அங்கு காண்பிக்கப்பட்ட காக்ஷிகளில் அடியிற் குறிப்பிடப்படும் விஷயமும் ஒன்றாகும். அதாவது:— புருஷன் பெண்சாதி இருவரும் விர்த்தாபிய திசையடைந்து சாப்பிடுவதற்கு வகையின்றி அவர்கள் மீது யாவரும் அனுதாபப் படும்படியாக அவர்களின் நிலைமையிருந்தது. இந்நிலைமையில் முனிஸிபல் கமிஷனர் அங்கு வந்து அவர்களுக்கு ஆசிகூறியபின், கவர்ன்மெண்டானது அன்னவர்களின் தூய்மையைக் கண்டு சந்தோஷமடைந்து 500 பவுன் நன்கொடை அளித்திருப்பதாகக் கூறினார். இதனைச் செவியுற்ற இன்னோர் சந்தோஷ மடைந்து அக் கமிஷனரை அனுப்பிவிட்டு இருவரும் கீழே உட்கார்ந்து, நாம் நம்முடைய வாணாள் முழுதையும் துர்ச்செய்கை புரிவதிலும் காம இச்சைகளை நிறைவேற்றிக்கொள்வதிலும் செலவிட்டிருந்தும் நாம்ஜாக்கிரதையாக நடந்துகொண்டதன் பயனாக கவர்ன்மெண்டானது நம்முடைய பத்தினித்தனத்தை தானே கூறி சன்மான மளித்திருக்கிறதென பேசிக்கொண்டார்கள் என்பதே.

இச் சம்பவ நிகழ்ச்சியால், ஐரோப்பாவின் அந்தரங்க விஷயம் எவ்வாறிருக்கு மென்பதை நீங்களே தெரிந்து கொள்வீர்களாக. ஐரோப்பிய குடிமக்களில் 100-க்கு 80 பேர் பலவாறான வியாதியிலகப்பட்டு விழித்துக் கொண்டிருக்கின்றார்கள். முடிவாக அன்னோர் சிலகாலத்திற்குள் ஆரோக்கியத்தையும் வாலிபத்தின் அழகையும் பழுதாக்கிவிடுவார்கள்போல் தோன்றுகிறது. நம்மில் சிலர் ஐரோப்பிய மாதுக்களின் வெண்மையைக் கண்டு ஏமாந்து போயிருக்கின்றனர். ஆனால் இக்காலை அம்மாதுக்களின் அழகு குன்றியதாய் விட்டதைக் காணலாம்.

மாதுக்களின் விபரீதப்போக்கு.

ஐரோப்பிய மாதுக்களின் செய்கைகளை இங்கு சற்று குறிப்பிடுவது இந்தியர்களுக்கு பெரும் ஆச்சரியத்தைக் கொடுப்பதாயும் அதிலும் பெண்டீர்கள் உணர்ச்சி பெறுவதற்குக் காரணமாயுமிருக்கும். ஐரோப்பாவில் சிறுமிகள் 15, 16 பிராயத்தை அடைந்தவுடன் தாய்தந்தையர் அன்னோரை வீட்டைவிட்டு வெளியாக்கி விடுகின்றனர். அச்சிறுமிகள் ஏற்கனவே ஸ்கூலிலிருக்குங்கால் பலவாறான வியாதிகளுக்கு ஆளாகியிருக்கும் நிலைமையில் வெளியில்வந்து அன்னோர் யாது செய்ய முடியுமென்று நினைக்கின்றீர்கள்? அவர்கள் வீட்டைவிட்டு புறப்பட்டு வேறு வகையின்றி தேயிலைக்கடையிலோ சாராயக் கடையிலோ, சாப்பாட்டு ஹோட்டலிலோ தங்கும் விடுதியிலோ அல்லது வேறு வியாபார ஸ்தலங்களிலோ ஒரு இடத்தைத் தேடி வேலைக்கமர வேண்டியிருக்கின்றது. இதற்கிடையில் அச்சிறுமிகளுக்குநண்பர்கிடைத்து அவர்களும் வைத்துக்கொள்ள விரும்புவார்களாயின் சந்தோஷமாக அவர்களிடம் காலங்கழிக்க இசைந்து விடுகின்றனர். அவ்வாறிருக்கும் நிலைமையில் இருவருக்கிடையே பிரீதி ஏற்பட்டு விடுமாயின் விவாகமுஞ் செய்துகொண்டுவிடுகின்றனர். அவ்வாறின்றி வேறு யாரையாகிலும் விவாகஞ் செய்து கொள்ள நாடுவார்களாயின் இவ்விரண்டு பேருக்கு மிடையில் பிரிவினை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே ஐரோப்பிய மாதுக்கள் எவ்வளவுதூரம் கஷ்டம் அனுபவிக்கின்றார்களோ அவ்வளவுகஷ்டத்தை உலகிலுள்ளவேறெந்த மாந்தரும் அனுபவிக்க மாட்டார்களென்பது எனது துணிபு. அவர்களின் இப்பரிதாபகரமான இந்நிலைமையைக்கண்டு பரிதாபப் படவேண்டியதாக இருக்கிறது. ஆகவே இந்நிலைமையானது அவர்கள் சுயேச்சையாக இல்லாது அடிமைத்தனமாக இருக்கின்றார்களென்பதை தெற்றென விளக்குகின்றது. அச்சிறுமிகள் வயறு வளர்ப்பதற்காக வெளியில்வந்து ஆண்களைப்போன்று கடைவீதிகளில் இராப் பகலாய் வேலைசெய்வதை சுயேச்சை என்று எவ்வாறு கூறமுடியும்? அதனை வறுமையின் காரணமென்றே கூறவேண்டும். இவ்வறுமைக் கொடுமையானது

அன்னாரின் பத்தினித் தனத்தையும் இழந்து விடுவதற்குள்ள சந்தர்ப்பத்துக்குக் கொணர்ந்து சேர்த்து விடுகிறது. நாம் இந்தியாவிலிருந்து கொண்டு, ஐரோப்பிய மாதுக்கள் சங்கை மரியாதையோடு வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று கேள்விப்பட்டு அதனை அப்படியே ஒப்புக் கொண்டுவந்தோம். ஆனால் யான் இங்குவந்து பார்த்தபின் அதற்கு மாற்றமாய் ஐரோப்பிய மாதுக்களைப்போல் கேவலமாக கஷ்டப் படுகிற உயிர்ப்பிராணி உலகில் இருக்கமுடியாதென்பதைத் தெரிந்துகொண்டேன். எனவே இவ்விடத்திய மாதுக்களை இந்திய மாதர்களுடன் ஒப்பிட்டுக்கூறுவது தகாத காரியமாக இருப்பதுடன் அவ்விருவர்க் கிடையில் வானம் பூமிக்கிடையிலுள்ள வித்தியாசம் காணப்படுவதாயு மிருக்கிறதென்பது திண்ணம்.

இவ்விடத்திய மாதுக்கள் கஷ்ட பிரயாசையோடு கூலிவேலை செய்வதற்காக ஒரு இடத்தில் அமர்ந்துவிட்டவுடன் அதிகாலையில் பக்ஷிகள் கூவுவதற்கு முன்பே எழுந்து சீவி சிங்காரித்து உடை அணிந்துகொண்டு விடுதியினின்று புறப்பட்டு வழியில் ஒருதுண்டு ரொட்டியைத் தின்றுவிட்டு தங்கள் வேலைக்குச்சென்று விடுகின்றனர். அங்கு மாலை வரையிலோ அல்லது இரவின் ஒருபாகம் வரையிலோ வேலை செய்துவிட்டு திரும்பி வர வேண்டியிருக்கிறது. இவ்வாறு அவளது வாணாள் முழுதும் சுற்றித்திரிய வேண்டியிருக்கிறது. அவளுக்கு பகலில் தன் வீடுசென்று சாப்பாடு உண்டு வர சற்றுநேரங்கூட ஒய்வு கிடைப்பதில்லை. எனவே பகல் நேரங்களில் அநேகப் பெண்கள் காலையில் சாப்பிடுவதுபோல் ஒருரொட்டித் துண்டை பால் ஆடையுடன் சாப்பிட்டு காலங்கழிக்கின்றனர். அதிகமாகச் சம்பளம் பெறுவோர் மாத்திரம் தொழிற்சாலைக்குச் சமீபத்திலுள்ள சிறிய ஹோட்டல்களுக்குச் சென்று ஏதாகிலு மொருவஸ்துவை தின்று பானமருந்திவருகின்றனர். இதே விதமாகத்தான் அவர்களின் மாலை போஜனத்தின் மாதிரியு மிருக்கிறது.

ஐரோப்பியமாதர்களுக் கேபற்ட்டுள்ள பெரும் கஷ்ட சங்கடம்.

இவ்வுலகினில் அன்னோருக்கு உதவிபுரிபவர்களும் அவர்களது க்ஷேமலாபங்களை விசாரணை புரிவோரும் கிடையாது. அன்னோர் இளவயதை யுடையவர்களாகவும் அழகு சௌந்தரிய முடையவர்களாயும் அலைந்து திரிந்துகொண் டிருக்கும்வரை காலங் கழித்துவிட்டு வாலிபப் பருவம் கழிந்து இனி வாலிபப்பருவத்தின் பெயரால் பிரயோசனமடைய முடியாதென்று தெரிந்துகொண்டவுடன் மிருகங்களைப்போல் ஒன்றும் இயலாது ஒரு இடத்தில் உட்கார்ந்து விடுகின்றனர்.

அம்மாதுக்கள் அளவற்றபிரயாசையுடன் ஏதாகிலுமொரு இடத்தில் வேலை தேடிக்கொண்டபின் பிடவை அணிந்துகொள்வதையும் பவுடர், வாசனைதிரவியம், சிவப்பு, சுர்மா, இவைகள் தடவிக்கொள்வதையும் நகத்திற்கு வர்ணம் கட்டிக்கொள்வதையும் தலை உரோமத்தைக் கத்தரித்துக்கொள்வதையும் பிரதானக்கடமை என்று கருதுகின்றனர். அதற்குக் காரணம் இங்குள்ள மாதர்கள் ஆண்களை தங்கள் பக்கல் திருப்பிக் கொள்ள விசேஷப் போட்டி போட்டு வருவதுவேயாம். இப்போட்டியானது பிரயோசனமற்றதாக யிருக்கின்றது. இங்கு ஆண்பிள்ளைகளுக்கு வலிய அநேகப் பெண்கள் கிடைப்பதுடன் அன்னோருக்கு ஆண்டவனுடைய பயமோ, மார்க்க வரம்புக்குட்பட்டு நடக்கும் கட்டுப்பாடோ இல்லாதிருக்குங்கால் அன்னோர் எதற்காக விவாகம் புரிந்துகொள்ளப்போகின்றனர்? அவ்வாறான முறை இங்கு நிகழ்ந்துகொண்டிருப்பதால் ஐரோப்பிய மாதுக்களுக்கு பெரும் கஷ்டம் சம்பவித்திருக்கின்றது. அதாவது புருடர்கள் பெண்களிடமிருந்து குறிப்பிட்ட ஒரு தொகையைப் பெற்றுக்கொள்ளாது அன்னோரை விவாகஞ் செய்துகொள்வது கிடையாது. பெண்கள் அந்தத் தொகையைச்சேகரஞ்செய்வதற்கு எவ்வளவோ கஷ்டங்களும் அவமானங்களும் படவேண்டி யிருக்கிறது. அவர்கள் அனுபவிக்கும் கஷ்டங்களைச் சொல்வதற்குங்கூட மனம் வெட்கிக்கின்றது.

முஸ்லிம் பெண்களின் நிலைமை

இங்கு எத்தனையோ முறை பிரான்ஸியர்களிடம் வார்த்தையாடுவதற்குள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டு அவ்வாறு பேசிக்கொண்டிருக்குங்கால் அன்னோர், முஸ்லிம் மாதுக்கள் தாழ்மை யுடையவர்களாயும் அடிமைகளே

போன்றும் இருப்பதாகக் கூறினர். உடனே யான், ஏ மானிடர்களே! உங்களில் சற்றேனும் அறிவு இருக்கின்றதா? இவ்வுலகினில் ஐரோப்பிய மாதுக்களைவிட எந்த மானிடப் பிறவியும் தாழ்மையானதாக இருக்கவில்லையே; உங்கள் மனதில் அம்மாதுக்களின் கண்ணியம் ஏற்பட்டிருக்குமானால் அவர்களை உங்களுக்கு வேண்டியவற்றை சம்பாத்தியஞ் செய்துவரும்படி கூறமாட்டீர்கள். இதற்கு மாற்றமாய் முஸ்லிம் பெண்களின் நிலைமை இருக்கின்றது. எனவே, ஆண்பிள்ளை உயிருடனிருக்கும்வரை பெண்களுக்கு வேண்டுவனவற்றைத் தேடி அளித்துக்கொண்டே வருகிறான். அப்பெண் இவனுடைய தாய், சகோதரியாகவோ பெண்சாதி முதலிய எவராக இருந்தபோதிலும் சரியே. இதுவன்றி பெண்களுக்குத் தேவையானவற்றை அளிப்பது ஆண்கள் மீது மார்க்கக் கடமையாகவும் ஏற்பட்டுப்போயிருக்கின்றது.

முஸ்லிம்களின் குருட்டு விளக்கம்.

யான் சில முஸ்லிம்களுடன் வார்த்தையாடசந்தர்ப்பமேற்பட்டது. அதுபொழுது அன்னோர், மானிடர்கள் தங்கள் ஒழுக்கங்களோடு ஐரோப்பிய நாகரீகத்தையும் பின்பற்றி நடக்க வேண்டுமெனக்கூறினர். உடனே யான், இவ்வாறு கூறுவது பெரும் ஆச்சரியமாகயிருக்கின்றது; நம்முடைய ஒழுக்கத்தோடு ஐரோப்பிய நாகரீகத்தை எவ்வாறு பின்பற்ற முடியும்? இவ்விரண்டும் ஒன்ருகச் சேருமா? நீங்கள் கூறுவது இரவும் பகலும் ஒரே நேரத்தில் ஒன்று சேருவது போலிருக்கிறதே; அவ்வாறு சேர முடியாதெனக் கூறுவீர்களாயின் நீங்கள் சொல்லுகிறபடிக்குள்ள விஷயமும் ஒருக்காலும் முடியாது எனக்கூறினேன். இதுகாலை ஐரோப்பாவில் நிகழ் பெற்றுக்கொண்டிருப்பவை யெல்லாம் நாகரீகத்தினல் விளைந்த பயன்களேயாகும். அன்னோரின் செயல்கள் சீர்திருத்த முடியாத நிலைமைக்கு வந்துவிட்டது. ஒருக்கால் அன்னோர் ஒரே மூச்சாக இஸ்லாத்தின் சீர்திருத்தம் கட்டளைகளை ஒப்புக்கொள்ளவேண்டும் அல்லது அழிந்து போகவேண்டும். ஆகவே கூடிய சீக்கிரம் ஐரோப்பியரிலனேகர் இஸ்லாம் மதத்தைத் தழுவி விடுவரென்னும் அறிகுறி தோன்றியிருக்கின்றது.

முஸ்லிம் சோதரர்களிடம் வேண்டுகோள்

எனதன்பார்ந்த முஸ்லிம் சோதரசோதரிகாள்! நீங்கள் மேல்பூச்சுடைய ஐரோப்பிய நாகரீகத்தைக்கண்டு ஏமாந்து போகாமலிருக்கும்படியும், எதை நாகரீகமென்று கூறப்படுகின்றதோ அந்த 'முஸீபத்' கஷ்டத்தினின்று நீங்கள் விலகியிருக்கும்படியும் உங்களைக்கேட்டுக் கொள்ளுகிறேன். ஒருகாலத்தில் யானே ஐரோப்பிய வாழ்க்கையைக் கண்டு ஏமாற்றமடைந்திருந்ததுண்டு. ஆனல் அதுகாலை ஐரோப்பாவின் அந்தரங்க விஷயம் எனக்குத் தெரியாதிருந்தது. இதுகாலை அத்தேசத்தின் அநாகரீகங்களெல்லாம் வெளிச்சமாய்விட்டபின் ஐரோப்பிய நாகரீகத்தின்மீது வெறுப்புக்கொண்டவன் என்னைவிட யாருமிருக்க முடியாதெனத் தைரியமாய்க் கூறுவேன். சுயமதிப்பைநாடும் தன்மதிப்புள்ள மானிடத்தன்மை பொருந்திய உரோஷவானன ஒருமனிதன் தன்பெண்சாதியோ, தாய்சகோதரிகளோ ஒரு ரொட்டித் துண்டுக்காக மானமிழந்து குளிரில் பட்டணம் கிராமம் கடைவீதி முதலியவைகளில் அலைந்து திரிவதற்கு சம்மதப்படுவான? முடிவாக ஐரோப்பாவில் கணக்கற்ற பெண்கள் கஷ்டமெடுத்து சரீரப்பிரயாசையுடன் உழைப்பவர்களாய் விட்டார்கள். ஆகவே பாரிஸில் 100-க்கு 10 பெண்களுக்கு தாடிமீசை ஏற்பட்டிருப்பதுடன் அவர்களுடைய தோற்றங்களும் விகாரமுடையதாய்க் காணப்படுகிறது. இதுவெல்லாம் அன்னோரில் குடும்ப வாழ்க்கை அற்றுப்போனதினலேற்பட்ட பயன்களென்றே கருதவேண்டியதாக இருக்கின்றது.

சிக்கனத்தின் இரகசியம்.

பொதுவாக அநேகருக்கிடையே இந்தியர்களின்வருவாய்குறைவானதாகயிருக்கிறதென்னும் வதந்தி பலமாகப் பரவி இருந்துவருகின்றது. ஆனல் இந்தியர்களின் வருவாய் சொற்பமானதாகயிருந்தபோதிலும் அவர்களின் வாழ்க்கைமுறையானது ஐரோப்பியர்களின் வாழ்க்கையைவிட கெட்டதாயில்லை என்பதை பன்முறையும் யான் வற்புறுத்திக் கூறியிருக்கின்றேன். ஆகவே இந்தியாவில் கூலிவேலை செய்பவனெருவன் நான்கண சம்பாத்தியஞ் செய்வானகில் அது அவனுக்குப் போதியதாக ஆய்விடுகின்றது. ஐரோப்பா

வில் மாதம் 10 ரூபாய் சம்பளம் பெறும் ஒருவன் 11, 12 ரூபாய் செலவுசெய்துவிடுகிறான். இதுவன்றி இந்தியாவில் ஒருமனிதன் பல பெண்கள் பிள்ளைகளுக்காக சம்பாத்தியஞ் செய்தபோதிலும் குடியிருப்பு விடுதி யொன்றை ஏற்படுத்திக் கொள்கிறான். ஐரோப்பாவிலோ வெனில், ஒவ்வொருவரும் தனித் தனியே தமக்காக சம்பாத்தியஞ் செய்த போதிலும் யாவரும் ஏழைகளாகவும் ஈனத் தொழில் புரிபவர்களாகவும் வீடில்லாதவர்களாகவுமே காணப்படுகின்றனர். முடிவாக ஐரோப்பியர்களோவெனில் தங்களுக் கேற்பட்டுள்ள துரதிர்ஷ்டத்தைக் கண்டு அழுதுகொண் டிருக்கின்றார்கள். நாமோ வெனில், அன்னோரைப் பின்பற்றி யொழுகுவதை இம்மை மறுமையின் பாக்கியமென்றும் பெருமை அளிக்கக்கூடிய தென்றும் கருதி வருகிறோம். இந்த நம்முடைய அறியாமைக்கு என்னதான் பரிகாரம் செய்ய முடியுமோ யாம் அறிகிலேம்?

சற்குணசீலரின் சம்பூர்ண போதனைகள்.

மானிடன் அல்லாஹ்தஆலா உண்டென் பதிலும் அவனுடைய (தாத், ஸிபாத்) தன்மை, வர்ணிப்பிலும் நிர்ணயங்கொள்ள வேண்டியது பிரதானமும் முக்கியக் காரியமுமாகும். கிறிஸ்தவர்கள் மூன்று கடவுளை ஒப்புக்கொள்கின்றனர்; பாரசீகர்கள் இரண்டு கடவுள் உண்டென்று கூறுகின்றனர்; எஹூதிகளோ கடவுளின் தன்மை மானிடர்களின் தன்மையைவிட மேலாகக் கருதுவதில்லை; ஹிந்துக்களிடம் குறைந்தபக்ஷம் மூன்று கடவுள் இருக்கின்றனர். ஆனால் எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் எந்த நாயனைப் பற்றி அறிவித்தார்களோ அவன் தனித்த ஏக ஒரே நாயனாகயிருக்கிறான்; அவனுக்கு இணையோ துணையோ கூட்டாளியோ கிடையாது; அவன் ஆரம்பம்முடிவு அற்றவன்; அவனுக்கு குறிப்பிட்ட ஒரு இடமோ ஸ்தானமோ கிடையாது; அவன் சர்வசக்தி வாய்ந்த சம்பூர்ணனாகவும் ஒவ்வொரு வஸ்துவையும் படைக்கிறவனாகவும் எவ்வாறான பின்னங்களையும் விட்டு தூய்மையானவனாகவும் சகல வஸ்துக்கள் மீது சக்திபெற்றவனாகவும் சகலவிஷயங்களை அறிகிறவனாகவும் இருக்கிறான்.

நபித்துவத்தை உண்மை கோள்ளல்.

நபிமார்களின் பதவியானது இதர மானிடர்களின் பதவியைவிட மேலானதாகயிருக்கின்றது. இதற்காகவே அன்னோர், மானிடப் பதவியைவிட உயர்ந்த அந்தஸ்திலிருக்கிறார்களெனக் கூறப்படுகின்றது. இதனை ஆதாரமாகக் கொண்டுதான் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைச் சிலர் ஆண்டவனென்றும், ஆண்டவனுடைய குமாரனென்றும், ஆண்டவனின் அவதாரமென்றும் கருதி அதற்குத் தலை சாய்க்கின்றனர்.

ஆனால் எம்பெருமானார் ஏகத்துவத்தூதர் (ஸல்.) அவர்கள் இவ்வெண்ணம் தவறானதாகுமென்று அறிவித்து தாங்கள் மானிட இனத்தைச் சார்ந்தவர்களென்பதையும், அல்லாஹ்வின் அடியாரென்பதையும் பன்முறையும் பஹிரங்கமாக தெறிவித்திருக்கின்றார்கள். மேலும் தாங்கள் நபித்துவத்தை உலகத்தோருக்கு அறிவித்து அல்லாஹ்வின் ரஸூலாக யிருக்குமென்று தெரிவித்திருந்தும் அதன்மீது பெருமை கொள்ளாது, தாங்கள் ஆண்டவனின் அடியாராக இருக்குமென்பதை பஹிரங்கமாகக் கூறி அதனால்பெருமை கொண்டார்கள். தங்கள் நபித்துவத்தை ஒப்புக்கொள்வதுடன் முந்திய சகல நபிமார்களின் நபித்துவத்தையும் ரிஸாலத்தையும் நிர்ணயங்கொள்வது சகலமானிடர்மீதும் கடமையாகுமென்பதாகவும், தங்கள்மீது அனுப்பப்பட்ட வேதத்தை ஒப்புக்கொள்வதுடன் வானுலகிலிருந்து அனுப்பப்பட்ட சகல வேதங்களையும் ஒப்புக்கொள்வது கடமையாகுமெனவும் கட்டளை பிறப்பித்தார்கள். இவ்வாறான பொதுநோக்கு, தாராளசிந்தை, பிடிவாதமற்ற தன்மை முதலியவற்றை எம்பெருமானார் சமாதானத்தூதர் (ஸல்.) அவர்களைத் தவிர வேறு எவர்பாலும் காணமுடியாது. அல்லாஹ் தன்னிலும் தன் வர்ணிப்பு

களிலும் தன்னை வணங்கப்படுவதிலும் தனித்தவனாக யிருப்பதுபோல், திருத்தூதிலும், வேதங்களிலும், சன்மார்க்கத்திலும், ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது. எனவே ஒரு ஏகத்துவாதி கலிமாச் சொன்னவுடன் அன்னோனுக்கு இவையாவும் அமைந்துவிடுகிறது. அதன்பின் அவனது சிரம் ஏகவல்லமை பொருந்திய அல்லாஹ்தஆலாவின் சமுகத்தைத்தவிர வேறு யாருக்கும் பணியமாட்டாது. இவ்வாறான ஏகத்துவாதி உலகின்கண் காணப்படும் வானம்பூமி சூரியன் சந்திரன் இடிமின்னல் வெயில் குளிர் கடல் திடல் முதலிய யாவற்றும் தமக்கு தொண்டுபுரிபனவை யென்றும் தாம்மட்டும் இவைகளை உண்டுபண்ணிய அல்லாஹ்வை வணங்குவதற்காக படைக்கப்பட்டிருப்பதாகவும் கருதுபவனாக ஆய்விடுகின்றான். தவிர அவன், மானிடர் யாவரும் ஒரே அந்தஸ்துடையவர்களென்பதையுணர்ந்து பிர்அவ்ன் நம்ரூத் போன்றவர்கள் ஆண்டவனென்று தாவாச்செய்ததின் மீது வெறுப்புக்கொண்டு ஏகப்பரம்பொருளாகிய அந்த ஒரே ஆண்டவனை வணங்குவதற்கு மோகங்கொண்டு விடுகின்றான். அம்மோகத்தின் பிரீதியால் தன் சரீரம் சொத்து சுதந்திரம் வீடுபிள்ளைகள் முதலிய யாவற்றையும் தியாகஞ்செய்யவும் முற்பட்டுவிடுகின்றான்.

மறுமை நாள்மீது ஈமான்

தவ்ராத் வேதத்தில் (கியாமத்) மறுமை நாளைப்பற்றிய பிரஸ்தாபமே கிடையாது. இன்ஜீலில் மறுமைநாளின் பிரஸ்தாபமிருந்த போதிலும் அதற்குள்ள காரணகாரியங்கள் கூறப்பட்டில்லை. மற்ற வேதங்களில் ஜாடையாகவே கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் குர்ஆன் ஷரீபும் எம்பெருமானார் (ஸல்.) அவர்களும் மறுமை நாள் உண்டென்பதை தக்க ஆதார ஆதயங்களோடு நல்லமுறையில் சாமான்யரும் தெரிந்துகொள்ளும் விதமாக விளக்கிக் காண்பித்திருப்பதால் அதனை எந்த மந்தபுத்தியுள்ளவனும் மறுத்துக் கூற மாட்டானென்பது திண்ணம்.

காபிர்கள் கியாமத் நாளை மறுத்து, மானிடன் மரணமடைந்து தேகம் துண்டுதுண்டுகளாய்ப் போனபின்பு மறுபடியும் எழுப்பப்படுவது எப்படி என்றும், எலும்புகளெல்லாம் மடிந்து உக்கிப்போனபின் எவ்வாறு ஒன்று சேருமென்றும் கூறிக்கொண்டிருந்தனர். இக்கூற்றுக்கு மறுப்பாக ஆரம்பமாய் அவைகளை உண்டுபண்ணிய நாயன் மறுமுறையும் அதனை உற்பிக்கச் செய்வானென்றும், உங்களுக்கு மறுமுறை எழுப்பப்படுவதில் சந்தேக மேற்படுமாகில் நீங்கள் நோட்ட மிட்டுப்பாருங்கள்; நாம் உங்களை மண்ணில் நின்றும் படைத்தோம், பிறகு ஒருதுளி இந்திரியத்தினின்று பின்பு இரத்தக் கட்டியிலிருந்து பிறகு, தசைக்கட்டியிலிருந்து. இவ்வாறான மாறுதலுக்குப்பின் உங்களைப் படைத்த நாயனுக்கு மறுமை நாளில் மறுமுறை எழுப்புவது கஷ்டமான காரியமாகுமாவென்றும், பூமியைப் பாருங்கள் அது காய்ந்து வரண்டுபோ யிருக்கின்றது. அதன் மீது மழைவருஷித்தவுடன் அப்பூமி செழிசெழிப்பாகி பற்பலவாறான பசுமைகளும் கனிவர்க்கங்களும் அதினின்று உற்பத்தியாகின்றன. அதாவது, ஒவ்வொரு ஆண்டிலும் அல்லாஹ் தஆலா வரண்டுபோன பூமியை பசுமையாகவும் செழிப்புடையதாகவும் செய்து புற்பூண்டுகளை முளைக்கச்செய்வதுபோல் அழிந்து மண்ணோடு மண்ணாய்ப் போன உயிர்ப்பிராணியை மறுமை நாளில் உயிர்ப்பிக்கச் செய்வதில் ஆச்சரியமொன்றுமில்லை என்றும் அறிவிக்கின்றான். மறுமை நாள் உண்டென்பதன்மீது அறிவிக்கக்கூடிய ஆதாரங்களைப் படிப்பது கொண்டு, குர்ஆன்ஷரீபானது யாவருக்கும் நன்கு விளங்கக்கூடிய சாதாரண முறையில் மறுமைநாள் விஷயத்தை அறிவித்திருக்கிற தென்பதும் அதனை ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளாது பராமுகமாய் இருக்கலாகாதென்பதும் நன்கு புலனாகும்.

தொழுகை

வணக்கங்களில் மிகமிகப் பிரதானமானது தொழுகையாகும். இவ்வணக்கத்தைப்போல் உலகிலுள்ள எந்த மதஸ்தருடைய வணக்கமுமில்லை என்பதை உலகமே ஒப்புக்கொண்டிருக்கிறது. தொழுகையானது அல்லாஹ்வின் மீது மோகங்கொண்டவன் நிறைவேற்றும் ஒரு காக்ஷியாக இருக்கின்றது. தொழுகையானது ஆண்டவனால் படைக்கப்பட்ட சகலவற்றின் வணக்கங்களும் ஒருங்கே அமையப்பெற்றதாக இருக்கின்றது. தொழுகையில் துப்பரவுபரிசுத்தம் முதலியவைகள் மேலான முறையில் கற்பித்துக்கொடுக்கப்படுகின்றது.

தொழுகையில் மானிடத் தன்மையின் சமத்துவம் சகோதரத்துவத்தின் போக்குமுதலியவைகள் செய்முறையில் கற்பித்துக்கொடுக்கப்படுகிறது. தொழுகையானது அடிமை எஜமான் இவர்களுக்கிடையில் வேற்றுமை கிடையாதென்பதை அறிவிப்பதற்குள்ள ஒரே வழியாக இருக்கின்றது. தொழுகையில் வரிசையாக நின்று இமாமுடைய ஒரு சப்தத்தின்மீது திரும்புவதையும் ஒரு செயலிலிருந்து மற்றொரு செயலின் பக்கல் செல்வதையும் பார்த்தால் யுத்த சட்ட திட்டங்களையும் அதன் ஒழுங்கு முறையையும் தக்க முறையில் கற்பித்துக் கொடுப்பதுபோலிருக்கிறது.

நோன்பு, ஹஜ்ஜு, ஜகாத்

நோன்பு, ஹஜ்ஜு, ஜகாத் இவைகளில் பொதிந்து கிடக்கும் அளவற்ற இரகசியங்கள் ஒவ்வொருவருக்கும் நன்கு தெரிந்தவையே. மேலும்நோன்பு நோற்பதுகொண்டு பயபக்தி, பேணுதலுடைய சக்தி அதிகரித்துக்கொண்டேபோகிறது. இதுவன்றி, அஃது சரீர சிகிச்சைக்குத்தக்க ஔடதமாகவுமிருக்கின்றது. எனவேநோன்புநோற்பது கொண்டு இறைப்பையில் ஏற்படும்துர்நீரெல்லாம் உலர்ந்துபோய் இறைப்பைக்கு வலுவேற்படும்படி செய்கிறது. ஜகாத்தோவெனில் மானிட வர்க்கத்தாரின் கஷ்டத்தை நீக்குவதற்காக ஏற்பட்டிருப்பதால் அதன் நன்மையை சகல மதஸ்தர்களும் உணர்ந்து சிலாக்கித்து வருகின்றனர்.

ஹஜ்ஜில்இம்மை மறுமை இவ்விரண்டின்பிரயோசனங்களேற்பட்டிருக்கின்றன. எனவே அதில் நான்குவிதமான நோக்கங்களிருக்கின்றன (1) சகல இடங்களில் வசிப்போரும் ஒன்று சேர்ந்து அல்லாஹ்த ஆலாவை வணங்குவது, (2) மக்கமா நகரின் வளமும் வியாபார அபிவிருத்தியும் ஏற்படுதல், (3) ஒருவரோடொருவர் ஒற்றுமையாகி சகோதர வாஞ்சையை வெளிப்படுத்துவது, (4) பெரியார்களின் ஞாபகச் சின்னங்களைப்பார்த்து உணர்ச்சி பெறுவது ஆகியவைகளாகும்.

மதுவருந்தல், சூதுவிளையாடல்

தவ்ருத் வேதத்திலோ, மதுவருந்தல் கூடாதகாரியமென பொதுப்படையாக கூறப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் குறிப்பிட்ட நபர்களுக்கு குறிப்பிட்ட நேரத்தில் விலக்கப்பட்டிருக்கிறது. இன்ஜீல் வேதத்தில் அக்கட்டளையில் எவ்வித மாறுதலும் செய்யப்படவில்லை. சூது விளையாட்டைப் பற்றி முந்திய வேதங்களெதிலும் கூறப்பட்டில்லை. ஆனால் உலக சீர்திருத்தகராகிய எம்பெருமானார் சத்தியத் தூதர் (ஸல்.) அவர்களும் குர்ஆன்ஷரீபும் மதுவருந்தலையும் சூது விளையாடுவதையும் தகாக் கருமங்களெனக் கூறி எக்காலத்திற்கும் எவருக்கும் அவை கூடாதென விலக்கியிருக்கின்றார்கள்.

பகரம் வாங்காதிருத்தல்

சற்குண உபதேசங்களும் போதனைகளும் இன்ஜீல் வேதத்தில் நிறம்ப காணப்படுகின்றன. இதுசம்மந்தமாய் ஹஸ்ரத் மஸீஹ் (அலை.) அவர்கள் மலையில் ஜைத்தூன் மரத்தடியில் உபதேசித்த பிரசங்கம் யாவருக்கும் பிரஸ்தாபமாக இருந்துவருகின்றது. அதில், உங்கள் வலகன்னத்தில் யாரும் அடிப்பானாகில் இடகன்னத்தையும் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றும், ஒரு மைல் தூரம்வரும்படி அழைப்பானாகில் இரண்டு மைல்தூரம் செல்லவேண்டு மென்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் குர்ஆன்ஷரீபானது சற்குணத்தின் பொக்கிஷமாகவும்,எம்பெருமானார் சமாதானத் தூதர் (ஸல்.) அவர்கள் சற்குணத்தை நிரை பூர்ணமாக்கி வைப்பவர்களாகவும் அனுப்பப்பட்டிருந்தும் கெடுதிக்கு தண்டனை கெடுதியைக் கொண்டே கொடுக்கவேண்டுமென்று அறிவித்திருக்கின்றார்கள். இன்ஜீலில் கூறப்பட்டுள்ள விஷயம் எக்காலத்திற்கும் பொருத்தமுடையதாக இருக்கவில்லை. அதனை யாரும் அனுஷ்டிப்பதற்கும் தகுதியற்றதாகவுமிருக்கின்றது. ஆனால் குர்ஆன் ஷரீபின் போதனையோ சகல காலத்திற்கும் பொருத்தமான நேர்வழியாக அமைந்திருப்பது கண்கூடு.

விவாக விலக்கு

யூதர்களிடம் ஒவ்வொரு சின்னஞ் சிறு விஷயங்களுக்கும் விவாக விலக்குச் செய்வது ஆகுமாக்கப்பட்டிருக்கிறது. இன்ஜீலிலோ 'ஜினா' விபசாரஞ்செய்த நேரத்தில்மட்டுந்தான் 'தலாக்' சொல்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றது. இதனைக் கண்ணுற்ற ஒவ்வொரு புத்திசாலியும் தவ்ராத்தின்

போதனையில் விசாலமேற்பட்டிருக்கிறதென் பதையும் இன்ஜீலின் கட்டளையில் நெருக்க மேற்பட்டிருக்கிற தென்பதையும் நன்கு தெரிந்துகொள்வர். இதுகாலை இவ்விரண் டின் பலாபலன்கள் நம் கண்முன் வைக் கப்பட் டிருக்கின்றது. உதாஹரணமாக மேனாட்டின் நீதிஸ்தலங்களில் எத்தனையோ தகுதியுடையவர்கள் சீமான்கள் தங்கள் பெண்சாதிகள் விபசாரம் புரிந்ததற்காக விவாக விலக்குச் செய்யவேண்டுமென பஹி ரங்க கோர்ட்டில் பிராது தாக்கல் செய்து விடுதலை கோரிவருவதை பத்திரிகை வாயி லாய்த் தெரிந்து வருகிறோம். ஆனால் எம் பெருமானார் (ஸல்.) அவர்களும் தூய்மை வாய்ந்த தெய்வ அறிவிப்பும் குறிப்பிட்ட ஒரு சமயத்தில் தலாக்கைப் பரிகாரமாகச்செய்து கொள்வதற்கும் வாழ்க்கையின் கஷ்டத்தை திருப்தி செய்துகொள்வதற்கு ஒரு தக்க யோசனையாகவும் ஆக்கி வைத்திருக்கின்றது. மானிடன் இயற்கையில் தனிமையானவ னாக படைக்கப்பட்டிருப்பதால் அவனுக்கு துணையும் உதவியாளரும் வேண்டற்பாலன வாகயிருக்கின்றது. ஆண்பிள்ளைக்கு அத்தி யந்த சிநேகிதர் பெண்பிள்ளையாக யிருக்கும். பெண்கள், ஆண்களின் வாழ்க்கையில்காணப் படும் கவலை சந்தோஷம் துக்கம் முதலியவை களில் பங்கெடுத்துக்கொள்ளவும், தூய்மை வாய்ந்த தனது பிரீதியினால் ஆண்பிள்ளையின் சந்தோஷம் மனதிருப்தி முதலியவைகளை அதிகப்படுத்தவும், தன் முழுமனதோடு அவ னுடைய மன கஷ்டத்தை நிவர்த்திசெய்வதற் கும், மானிட அபிவிர்த்திக்கு அடிகோலவும் படைக்கப்பட்டிருக்கின்றாள். இதுபொழுது இத்துணைவி தெய்வக் கட்டளையாகிய இக்கட மைகளை தக்கமுறையில் நிறைவேற்றாதிருந்து விடுவாளாகில் அதுகாலை அல்லாஹ்தஆலா அந்கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்காக வேறு வழியை ஏற்படுத்தி வைத்திருக்கின் றான். அதனை அனுஷ்டிப்பதுகொண்டு மானி டனின் கஷ்ட சங்கடங்கள் நீங்கிப் போய் விடும். அதனால் அவன் கவலைக்கடலிலிருந்து விடுதலை பெற்று பிரயோசனம் தரத்தக்க வழியில் காலங்கழிப்பதற்குள்ள ஹேதுண் டாய்விடவேண்டும்.

மானிடனுக்கு இவ்வாறான கஷ்டமேற் படுங்கால் இரண்டுவிதமான பரிகாரங்கள் செய்துகொள்ளலாம். (1) தலாக்-விவாக விலக்கு (2) பலதார மணம். எனவே குடும்ப வாழ்க்கையின் சம்பந்தத்திற்கு ஹானி ஏற் பட்டுப்போய் புருஷன் பெண்சாதிக்கிடையில் இராப்பகலாய் சச்சரவு உண்டாகி ஒற்றுமை க்கு மார்க்கமில்லாது போமாயின் தலாக்-விவாக விலக்குச் செய்துகொள்வதைத் தவிர வேறு வழி காணப்படுவதில்லை. அதுகாலை தலாக்கானது ஒருபெரும் கஷ்ட சங்கடத்தி லிருந்து விடுதலை பெறுவதற்குசிறந்த மார்க்க மாகவும் சமயசஞ்சீவியாகவு மிருந்துவருகின் றது. அதன் அவசியத்தை இதுகாலை இஸ் லாத்தின் விரோதிகளுங்கூட ஒற்றுக்கொண்டு அதனை முக்கியமெனவும் கருதுகின்றனர்.

பலதார மணம்

இதுவிஷயமாயும், இஸ்லாத்தின் விரோதி கள் குறைபாடு சொல்லிக்கொண்டிருக்கின்ற னர். இதன் நன்மைகள் யாதாகு மென்பது மேலே கூறப்பட்டுப் போயிருக்கின்றது. எனவே பெண்சாதியுடன் சச்சரவு ஏற்பட்டு நிவர்த்திக்க முடியாத பிணக்கு உண்டாய் விடுமாயின் சந்தோஷமாக காலங்கழிப்ப தற்குள்ள வழிகளில் நல்லமனதுடைய பெண்ணை விவாகஞ்செய்துகொள்வதுமொன் றாகும். அல்லது பெண்சாதி மலடியாக இருப் பாளாகில் சந்தான விருத்திக்காக வேறு விவாகஞ்செய்து கொள்வதாகும். தவிர பல மனைவிகளை விவாகஞ்செய்து கொள்வது இழி வான விஷயமுமாகமாட்டாது. இவ்வழக்கம் ஆதிகாலந்தொட்டே நடைபெற்றும் வருகின் றது. ஹஸ்ரத் சுலைமான் (அலை) ஹஸ்ரத் தாவூத் (அலை.) முதலானோர் பலதாரமணம் புரிந்துகொண்டிருக்கின்றார்கள். இவ்விவாகம் கெட்ட காரியமாக யிருந்திருக்குமாயின் அல் லாஹ்வின் சொந்த அடியார்களாகிய நபி மார்கள் அக்காரியத்தி லீடுபட்டிருக்கமாட் டார்கள். ஆனால் இஸ்லாம்மார்க்கமானது நான்கு மனைவிகளைப் புரிந்துகொள்ள அனு மதியளித்து அதன்மீது கடிஸான ஒரு நிபந் தனையையும் ஏற்படுத்தியிருக்கின்றது. அதா வது, பெண்சாதிமார்களுக்கிடையே நீதியாக நடந்துகொள்ள இயலாதுபோயின் ஒரே பெண்சாதியையே மணந்துகொள்ள வேண்டு மென்று கூறுகின்றது.

அன்புற்ற நேயர்காள்!

எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் பரிபூர்ணம் வாய்ந்த தூய்மை

யர்ன சத்போதனைகளிற் சிலது முன்மாதிரியாக உங்கள் முன்வைக்கப்படுகின்றது. அதன்மேன்மைகளும் உன்னதங்களும் அறியுடையோருக்கு நன்குபுலனாகும். அதனை நன்கு சிந்தனைசெய்து பார்த்து இதரபோதனைகளின் தன்மையையும் தெரிந்துகொள்வீர்களாக. எம்பெருமானார் தயாள சீலர் சற்குணநாதர் (ஸல்.) அவர்கள்உலகோர்க்கு மாபெரும் கிருபையாளராக விஜயஞ்செய்திருப்பதால், அவர்கள் இலக்ஷக்கணக்கான நன்றிகளை உலகோர்க்குச் செய்திருக்கின்றார்கள். அக்கிருபைகளின் விபரத்தைமட்டுப்படுத்த - கணக்கிட முடியாமலிருக்கின்றது. பெண்மக்களின்கொலை, சந்ததிகளைக்கொல்லுவது ஆகிய கெட்ட பழக்கத்தை உலகத்தைவிட்டு அகற்றிவிட்டார்கள் ; அடிமைகளின் காலிலிருந்து அநீதி என்னும் வளையத்தை கழற்றி எறிந்துவிட்டார்கள் ; பெண்களின் அதிக்கிரமச் செயல்களை அகற்றினார்கள்; பெண்களுக்கு ஆண்களிடமிருந்து அநேக பாத்தியதைகள் கிடைக்கும்படி செய்தார்கள் ; பெண்களின் வாழ்க்கை சம்பந்தமான அநேக சட்டதிட்டங்களை ஏற்படுத்திவைத்தார்கள் ; வட்டிவாங்குவதின் கெடுதியைவிட்டு முஸ்லிம் உலகைவிடுதலை செய்துவைத்தார்கள்; அரபி அஜமி என்னும் வித்தியாசம், உயர்வு தாழ்வு என்னும் பாகுபாடு முதலியவற்றை அழித்து சமத்துவ சகோதரத்துவத்தின் உயர்வைக் கற்பித்துக்கொடுத்தார்கள் ; சீமான் ஏழை, பகீர் அரசன், அரபி அஜமீ, ரூமீஹிந்தி முதலிய சகலரையும் ஒரே மேடையிற் கொணர்ந்து சேர்த்து எல்லோரும் ஆண்டவனின் ஒரேவிதமான அடியார்களென்னும் சுபச்செய்தியை வெளியாக்கினார்கள். அல்லாஹ்த ஆலாவின் சகல படைப்புகளின்மீது கிருபைபுரிந்து இரக்கங்காட்ட வேண்டுமென்னும் கட்டளையைப் பிறப்பித்தார்கள். மேலும் அம்மகான் அவர்கள் இப்பூஉலகமக்களை ஏகப்பரம்பொருளாகிய அல்லாஹ்த ஆலாவின் பக்கல் அழைத்தார்கள் ; மானிடர் யாவரும் அல்லாஹ் அல்லாத வேறு எவருக்கும் அடிமைத்தனம் செய்வதினின்று விடுதலையாக்கிவைக்கும் ரிஸாலத்தளவில் அழைத்தார்கள். இவ்வாறான மகத்துவம் பொருந்திய நபித்துவத்தை யார்தான் மறுக்கவல்லார்? இவ்வாறான உபகாரம் புரிந்த உத்தமரின் நன்றிக்கு எவர்தான் மாற்றஞ்செய்யத் துணிவர்? இதேகாரணத்தால்தான் அவர்களின் உயர்ந்தபோதனையை கார்லைல், இஸ்பிரின்கர் போலொற்ற ஆயிரக்கணக்கான கல்விமான்களான இதரமதவாதிகள் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர். உலகம் விடுதலை அடைந்துவிட நாடுமாகில் அது கைகொள்ளவேண்டிய முறைகள் எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் தூய்மை வாய்ந்த ஜீவிய வாழ்க்கையில் அமைந்துகிடக்கின்றது. எனவே எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் உலகோர்க்கு கிருபையாகவே அனுப்பப்பட்டிருப்பதால் அக்கிருபையின் பொருட்டால் நாம் கணக்கற்ற நற்பாக்கியங்களையும் பிரயோசனங்களையும் அடைந்திருக்கிறோம் அடைந்தும் வருகிறோமென்பது திண்ணம்.

காஜீ நியமுகமும் முஸ்லிம்களின் கோரிக்கையும்.

சாரதா சட்டம் அமுலில் வந்ததுமுதற்கொண்டு முஸ்லிம்கள் அதிருப்தி கொண்டவர்களாயிருந்து அதிலிருந்து விடுதலை பெறுவதற்கான மார்க்கத்தைத் தேட வேண்டு மென்பதிலேயே கவலை கொண்டவர்களாக இருந்து வந்தனர். மேலும் அச்சட்டம்அமுலுக்கு வந்ததுமுதல் சிலர், முஸ்லிம்களின் மார்க்க விஷயங்களைக் கவனிப்பதற்காகவும் விவாகம், விவாக விலக்கு, விவாகப் பிரிவினை போலொற்றைவைகளை மார்க்க சட்டப்படி தீர்ப்பதற்காகவும் ஒரு ஸ்தாபனம் அவசியமென்னும் முடிக்கு வந்தனர். இவ்வாலோசனையை ஆங்காங்குள்ள பற்பலரும் அங்கீகரித்தனர். இப்பொழுது சமீபமாக "ஜம்இயத்துல்உலமா" சபையும் "முஸ்லிம் கான்பரன்ஸு"ம் இதன் அவசியத்தைக் கோரி வேண்டுதல் வெளியிட்டன.

மார்க்க விஷயங்களும் தற்கால கோர்ட்டுகளும்

நேயர்காள்! இதுகாலே ஏற்பட்டிருக்கும் கோர்ட்டுகளில் அநேகமாக முஸ்லிம்களின் விவகாரங்கள் முஸ்லிம் அல்லாத நீதிபதிகளாலேயே தீர்க்கப்பட்டு வருகின்றது. வெளித்தோற்றில் அவர்களுக்குமுன் முஹம்மதிய மார்க்கச் சட்டம் இருந்தபோதிலும் அச்சட்டங்களில் அமைந்திருக்கும் நுட்பங்களை நன்குதெரிந்து கொள்வதற்கும் அதன்படி தீர்ப்பளிப்பதற்கும் முடியாத விதமாக இருந்து வருகிறது. முஹம்மதிய மார்க்கத்தின் சில சட்டதிட்டங்களை நன்கு தெரிந்து கொள்ளாது அம்மார்க்கத்திலேற்படும் விவகாரங்களில் தீர்ப்பளிக்க முற்படுவது அநேகமாக தப்பான வழியிலேயே செல்லும்படி ஏற்பட்டு விடுகிறது. இதனாலேயேதான் எத்தனையோ விஷயங்களில் தீர்ப்பளிப்பது சன்மார்க்கத்துக்கு விரோதமாக இருப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். ஐகோர்டுகளென்ன பிரிவி கவுன்ஸிலிலும் சிலகால் இவ்வாறான சம்பவம் நிகழ்ந்துவிடுகிறது. சில விஷயங்களில் உலமாக்களென்னும் பகீஹுகள், பிக்ஹுனுடைய சட்டத்தில் தங்கள் புத்தியை செலுத்தி அதனை ஆராய்ந்து அதிலிருந்து சில விஷயங்களைத் தெரிந்தெடுக்க வேண்டியதாக இருக்கின்றது. இவ்விஷயங்களில் முஸ்லிம் அல்லாதோர் எவ்வாறு தீர்ப்பளிக்க முடியும்?

முஜ்தஹித்களான சுயநிர்ணய ஆராய்ச்சியாளர் மார்க்கச் சட்டத்தில் அறிவைச் செலுத்தி குர்ஆன் ஹதீதுகளிலிருந்து அநேக மஸ் அலாக்களை வெளிப்படுத்தி நம் மனோருக்கு உதவிபுரிந்திருக்கின்றார்கள். இதுகாலே நாம் அம்மகான்களால் எடுத்து வெளியிடப்பட்டுள்ள மஸ் அலாக்களைக் கொண்டு பிரயோசனமும் பெற்றுவருகிறோம். இன்னும் பிற்காலத்திலும் அதைக்கொண்டே அநேக மார்க்க விஷயங்களை முடிவுக்குக் கொண்டு வருபவர்களாகவும் இருந்து வருகிறோம்.

இஸ்லாமிய சட்டமும் காஜீயும்

முஸ்லிம் சமுகத்திற்கு காஜீ நியமுக விஷயம் ஆவசியமாக இருக்கிறதென்பதை சன்மார்க்கம் பஹிரங்கமாக அறிவித்துக் கொண்டிருக்கிறது. மேலும் அந்த காஜீ முஸ்லிமாக இருக்கவேண்டுமென்று பிக்ஹு கிரந்தங்கள் கூறுகின்றன. அதிலும் முக்கியமாக முஸ்லிம் அல்லாதாரிடம் அதிகாரமிருக்குமாயின் அதுகாலே முஸ்லிம்களுக்காக காஜீயை நியமித்துக்கொள்வது பிரதானமாக இருக்கின்றது. காஜீ முஸ்லிம்களின் ஏகோபித்த அபிப்பிராயத்தின் மீது காஜீயாக ஏற்பட்டு விடுவார். ஆனால் இதுகாலே முஸ்லிம்களால் நியமுகம் செய்யப்பட்ட காஜீயால் தீர்மானஞ்செய்யப்படும் விஷயங்கள் செல்படிக்கு வருவதற்கு அவர்களிடம் அதிகார மில்லாததால் கெவர்ன்மெண்டு மூலமாகவே காஜீக்கு அதிகாரம் கொடுத்து நியமித்து அவருடைய தீர்ப்பை கவர்ன்மெண்டு ஒப்புக்கொண்டு அமுல் நடத்த வேண்டும்.

ஈஸ்ட் இந்தியாகம்பெனியும் காஜீகளும்

ஈஸ்ட் இந்தியா கம்பனியார் அதிகாரப் பதவி வகித்தவுடன் முதன் முதலாக முழு அதிகாரத்தோடு காஜீக்கோர்ட்டானது முஸ்லிம் காஜீகளிடம்ஒப்புவிக்கப்பட்டிருந்தது. அதற்குப்பின் ஆங்கில கவர்ன்மெண்டாரிடம்முழு அதிகாரமும் வந்தபின் விக்டோரியா மகாராணியார் "மார்க்க விஷயங்களில் தலையிடப் படமாட்டாது" என்னும் ஸ்ரீமுகம் விடுத்தார். அதுகாலே, சக்கரவர்த்தி பஹாதுர்ஷா அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதற் கேற்ப காஜீபீடம் ஒழுங்கான முறையில் நிலைநாட்டப்பட்டிருந்தது. அப்பீடம் தஸ்தாவேஜ்களை ரிஜிஸ்டர்செய்வது, விவாகம் விவாகவிலக்குச் செய்வதுபோலொற்ற மார்க்க காரியங்களை கவனித்து முடிவுசெய்வதுபோன்ற காரியங்களை கவனித்து வந்தது. ஆனால் தெண்டனை விதிப்பது பழிவாங்குவது முதலியவைகள் வேறாகப் பிரிக்கப்பட்டுப் போயிற்று.

1803-ம் வருஷத்திய 46-வது காஜீ ஆக்டிலும் காஜீகளின் இலக்ஷணங்களும் அவர்களின் சேவைகளும் தக்கமுறையில் விளக்கப்பட்டிருக்கின்றது. அதற்குப்பின் பற்பல சந்தர்ப்பங்களிலும் சேர்க்கப்பட்ட சட்டங்களிலும் விவாக சம்மந்தமாகவும் இதர மார்க்க விஷயமாகவும் தீர்ப்பளிக்க காஜீக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது. அச்சட்டம் 1864-ம் ஆண்டுவரைசெல்லுபடியிலிருந்துவந்தது. பின்னர் காஜீபீடம் பூராவும் எடுபட்டுப்

போயினும் அநேக இடங்களின் நீதிஸ்தலங்களில் மார்க்க விஷயங்கள் விவாதத்திற்கு வருங்கால் அதுவிஷயமாய் அதிகாரிக்கு ஆலோசனை கூறுவதற்கு ஒருவர் நியமிக்கப்படும் வழக்கமிருந்து வந்தது. இவ்வாறு 1864 முதல் 1880-ம் வருஷம்வரையிலிருந்து 1880-ல் விவாகச்சடங்குகளை நிறைவேற்றுவதற்கும் அதனைபதிவு செய்துகொள்வதற்கும் மட்டும் காஜீ நியமிக்கும் வழக்கம் ஏற்பட்டது.

சிங்கபூரில் சீப் காஜீ

இந்தியாவிலோ ஆங்கில அரசாக்ஷி ஏற்பட்டபின் சன்னஞ் சன்னமாக காஜீ ஸ்தாபனம் எடுபட்டுப் போயிற்று. ஆனால் சிங்கப்பூரில் பிரிட்டிஷ் ஆக்ஷி ஏற்பட்டும் சீப் காஜீ பதவி இன்றுவரை இருந்துவிவாகம், விவாகவிலக்கு முதலியவைகள் அவராலேயே நடைபெற்று வருகிறது. சிங்கப்பூரில் முஸ்லிம் காஜீ நியமிக்கப்பட்டிருக்கும் நிலைமையில் $8\frac{1}{2}$ கோடி முஸ்லிம்கள் வசிக்கக் கூடிய இந்தியாவில் காஜீபீடம் இல்லாதிருப்பது இந்திய முஸ்லிம்களின் துர் அதிருஷ்டமல்லவா?

ஜாவா, சுமாட்ராவில் காஜீ கோர்ட்டு

ஹாலண்டு அரசாங்க ஆதிக்கத்திலிருக்கும் ஜாவா, சுமாட்ராவில் அநேக விஷயங்களில் மாறுதல் ஏற்பட்டிருந்தும் மார்க்க விஷயத்தில் தலையிடுவதற்கு இன்றுவரை அக் கவர்ன்மெண்டுக்கு தைரியமேற்படவில்லை. எனவே ஒவ்வொரு வகுப்பாருக்கும் ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் ஒவ்வொரு தலைவர் (அமீர்) அதிகார தோரணையிலேயே நியமிக்கப்படுகின்றனர். அன்னோரைத்தேர்ந்தெடுப்பதில் முஸ்லிம்களின் ஆலோசனை பெரிதும் அங்கீகரிக்கப்படுகிறது. அந்த அமீர் முஸ்லிம்களிலேற்படும் வழக்குகளைத் தீர்த்து வைக்கின்றான். இதுவன்றி விவாக சம்பந்தமான விஷயம், விவாகப் பிரிவினை, விவாக ரத்துபோலொற்ற காரியங்களைமுடிவு செய்வதற்காக முழு அதிகாரம் பெற்ற காஜீகள் ஒவ்வொரு பட்டணங்களிலும் கிராமங்களிலும் நியமுகஞ் செய்யப்பட்டிருக்கின்றனர்.

பிலிப்பைன் தீவும் காஜீஸ்தானமும்

ஐக்கிய அமெரிக்கா தேசமும்,பிலிப்பைன் தீவில் இவ்வழக்கத்தை அனுஷ்டானத்தில் வைத்திருக்கின்றது. எனவே மார்க்க சம்பந்தமான விஷயங்கள் 'ஷெய்குல்இஸ்லாம்' என்னும் முஸ்லிம் பெரியாருடைய மேன்பார்வையில் முடிவு செய்யப்படுகின்றது. அப்பெரியாரின் மேன் பார்வையிலேயே மார்க்க கோர்ட்டும் இருந்துவருகிறது.

சைனாவும் மார்க்க கோர்ட்டும்.

முஸ்லிம்கள் மிகுதமாய் வசிக்கக் கூடிய தெற்கு சீனாவில் அவர்களின் மார்க்க விஷயங்களில் அரசாங்கம் எவ்வாறும் தலையிடுவது கிடையாது. எனவே மார்க்க விஷயங்கள் உலமாக்களின் மேற்பார்வையில் முடிவு செய்யப்படுகின்றது. சைனாவின் மத்திய பார்லிமெண்டிலும் இவ்வாறே தான் காரியாதிகள் முடிவுசெய்யப்படுகின்றன. இதன் பயனாய் முஸ்லிம்களின்மார்க்க ஆவேஷத்தை கெவர்ன்மெண்டு எவ்வளவு தூரம் கவனித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறதென்பது கீழ் குறிப்பிடப்படும் சமீப நிகட்சியொன்றை இங்கு குறிப்பிடுவது கொண்டு நன்கு புலனாகும். அதாவது:—ஷங்காயிலுள்ள மந்திரி சபையில் மெம்பராகவுள்ள ஒருவரால் நடத்தப்படும் சீன பத்திரிகையொன்று "முஸ்லிம்கள் பன்றி இறைச்சியை ஏன் உபயோகிக்கிறார்களில்லை?" என்னும் மகுடத்தின்கீழ் ஒருகட்டுரை வெளியிட்டது. இதனைக்கண்டு சைனாவிலுள்ள உலமாக்கள் பெரும் கிளர்ச்சிசெய்து அப்பத்திரிகையின் மீது கெவர்ன்மெண்டு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கெவர்ன்மெண்டாரிடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள். (இந்தியாவில்முஸ்லிம்களின் மனம் புண்பட்டு வரும் சம்பவங்கள் நிகழ்வதை கண்ணுருவோருக்கு இஃதொரு பிரதான விஷயமாகத் தோன்றாது) உலமாக்களின் ஏகோபித்த முயற்சியின் பயனாய் சீன அரசாங்கமானது பார்லிமெண்ட் சபை, மந்திரி சபை ஆகியவைகளைக்கூட்டி அப்பத்திரிகையின் சொந்தக்காரராகிய மந்திரி சபை அங்கத்தினர் சைனாவிலுள்ள சகல பத்திரிகைகளிலும் முஸ்லிம்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவேண்டும்; ஒருக்கால் முஸ்லிம்கள் அவருடைய தவறுதலை அங்கீகரித்துக் கொள்ளாது போயின் பத்திரிகையை நிறுத்தி அப்பத்திரிகையின் ஆசிரியர் சொந்தக்காரரான மந்திரி ஆகியவர்கள் மீது

கவர்ன்மெண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்னும் முடிவுக்கு வந்தது என்பதே.

சோதரர்காள்! இவ்வாறான கஷ்டம் இந்திய முஸ்லிம்களாகிய நமக்கு தினே தினே ஏற்பட்டுக்கொண்டே வருகிறது. நாம் அடிமைச் சங்கிலியால் வெகுவாய் கட்டுண்டே கிடப்பதால் அதற்குள்ள பரிகாரத்தைத் தேடிக்கொள்ள அசக்தர்களா யிருக்கிறோம். மார்க்க விஷயங்களில் தலையிடுவதில்லை என்று நமக்கு வாக்குறுதி செய்யப்பட்டிருந்தும் சிற்சில விஷயங்களில் கவர்ன்மெண்டு தானே தலையிட்டு விடுவதுடன் இதரர்களின் தலையீட்டையும் நன்கு கவனிப்பது கிடையாது. இது இந்திய முஸ்லிம்களின் துர்அதிர்ஷ்டமேயாகும்.

இவ்வாறு இந்தியாவில் நடைபெற்றுவருங் காலை சிலர் நம்மைப்பார்த்து பரிகாசமாக, 'துருக்கி மிஸிரிகளும் முஸ்லிம்கள் தாமே, இங்கு இந்தியர்கள் ஆக்ஷேபிக்கும் விஷயங்கள் அத்தேசங்களில் சட்டமாக இயற்றப்பெற்று நடைபெற்று வருகின்றதே' என ஏளனமாகக் கூறுகின்றனர். அவ்வாறு கூறுபவர்கள் "எவ்விஷயத்தில் அல்லாஹ்த ஆலாவுக்கு மாறு செய்கிறதேற்படுகிறதோ அவ்விஷயத்தில் எவரையும் பின்பற்றுவது அவசியமில்லை" என்பதை நன்குணர்வார்களாக. எனவே துருக்கியரிலோ மிஸர்வாசிகளோ ஏதாகிலும் மார்க்கமுரணான விஷயங்கள் காணப்படுமாயின்—அன்னோரின் அனுஷ்டானத்திலிருந்து வருமாயின் அதனை முஸ்லிம்கள் எவ்வாறு பின்பற்றல் முடியும்? முஸ்லிம்கள் சன்மார்க்கத்துக்குக் கட்டுப்பட்டு நடக்க கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பது நிக்ஷயம். எனவே எந்த ஸ்திதியிலும் ஒரு முஸ்லிம் மார்க்கத்தின் முந்தாணியை விட்டுவிட முடியாது. துருக்கியர் மிஸிரிகள் முஸ்லிம்களாக இருந்தபோதிலும் அவர்களின் செயல்கள் சன்மார்க்கத்திற்கு விரோதமாக யிருக்குமாயின் அவைகளை முஸ்லிம்கள் பின்பற்றுவது தகைமை யுடையதாகமாட்டாது. எனவே மேலே கூறப்பட்டு வந்த கஷ்ட சங்கடத்திலிருந்து முஸ்லிம்கள் விடுதலை பெறவேண்டுமானால் அன்னோருக்காக இந்தியாவில் காஜீ கோர்ட்டு ஏற்பட்டு அவர்களின் மார்க்க விஷயங்கள் அக்கோர்ட்டு மூலமாகவே முடிவு பெறல்வேண்டும். ஆகவே இந்தியாவிலுள்ள ஒவ்வொரு ஜில்லாவிலும் காஜீ கோர்ட்டு ஏற்படுத்தி அதன் தொடர்பை ஒவ்வொரு மாகாணத்திலேற்படும் கோர்ட்டுடன் சம்மந்தப்படுத்தி முடிவாக அதில் தீர்மானமாகும்படி செய்து விடல்வேண்டும்.

மார்க்க சம்பந்தமான உயர் சபை

சாரதா சட்டம் போலொற்ற மார்க்க விஷயத்தில் தலையிடும்படியான மசோதாக்களே ஏற்படாது தடுப்பதற்காக ஒரு சபை வேண்டற்பாலதாகும். எனவே மசோதாக்கள் சட்டமாக்கப்படுவதாக யிருந்தால் முதலாவது அச்சபைக்கு அனுப்பப்பட்டு மார்க்க பரிசிலனை செய்யப்பட்டபின்பே அதனை சட்டமாக அமைக்க இந்திய சட்டசபைக்கு அனுப்பபடல்வேண்டும். அவ்வாறான மார்க்க பரிசிலனை சபையில் அங்கம் வகிப்போர் சன்மார்க்க வழி காட்டியாயும் பலவாறான கல்வியைக் கற்றுத்தேர்ச்சி அடைந்தவராயும் மார்க்க விஷயத்தில் போதிய ஆற்றலுள்ளவராயும் சட்டசம்பந்தமான அனுபவம் வாய்ந்தவராகவும் மார்க்கத்தைப் பொருட்டாக மதித்து அதற்குத்தலை சாய்ப்பவராகவுமிருத்தல்வேண்டும். இவ்வாறான சபை ஒவ்வொரு மாகாணத்திலும் வேண்டற்பாலதாகும். அச்சபை அந்தந்த மாகாண சட்டசபையில் சட்டமாக இயற்றகொண்டுவரப்படும் மார்க்க சம்மந்தமான விஷயங்களை பரிசிலனைசெய்து சட்ட நிரூபண சபைக்கு அனுப்பவேண்டும்.

நேயர்கார்! இவ்வாறான மார்க்க சம்மந்தமான சபைகள் ஏற்படுவது அத்தியாவசியமாக இருக்கின்றது. அவ்வாறு ஏற்பட்டுவிடுமாயின் சாரதா சட்டம்போன்ற மார்க்க விரோதமான சட்டங்கள் சட்ட நிரூபண சபையின் ஏடுகளில் இடம்பெறாது போய் விடும். ஆகவே இஸ்லாத்தின் கார்மானத்திற்காகவும் முஸ்லிம்கள் கஷ்டசங்கடத்தில் அகப்பட்டு விழிக்காமலிருப் பதற்காகவும் மார்க்க உயர்சபை, காஜீ கோர்ட்டு ஆகியவைகளை நியமனஞ் செய்யவேண்டுமென்று ஆங்காங்குள்ள முஸ்லிம்கள் கிளர்ச்சி செய்ய வேண்டியதும் அவை முடிவுபெறும்வரை துயர்படியாக பிரயாசை எடுத்துவரவேண்டியதும் முஸ்லிம்களின் கடமையாகும். நம் முஸ்லிம் சமுகம் இது விஷயமாய் ஒரே மூச்சாக பிரயாசையோடு வேலை செய்து வரு

மாயின்கூடிய சீக்கிரம் கோரிய காரியம் கை கூடிவருமென்பது திண்ணம். அந்நாளையே நாம் மிகமிக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவ்வாறு ஏற்படும் நாள்தான் முஸ்லிம்களின் மார்க்க பாதுகாப்புக்குள்ள நந்நாளுமாகும்.

முஸ்லிம் வீரமாதுக்களின் தீரம்

முஸ்லிம் மாதுக்களின் கடமை யாது? அவர்கள் மார்க்க விரோதிகளை சம்ஹாரஞ் செய்வதற்கு முற்பட்டு தங்கள் சந்ததிகளை மார்க்கசேவை புரிவதற்கு பழக்க வேண்டியது அவசியமாகும்; அன்னோர் தங்கள் பர்த்தாக்களுக்கு சதாவும் ஒற்றுமையை போதிக்கவேண்டும்; உண்மையே பேசவேண்டும்; அதன் மீது ஸ்திரமா யிருக்க வேண்டும்.

உம்மு அம்மாராவின் தியாகம்

ஒருநாளன்று உம்மு அம்மாராவின் குமாரருன ஹஸ்ரஸ் ஹபைப்பின் ஜைத் (ரலி.) அவர்கள் உம்மானிலிருந்து மதீனமா நகர் வந்து கொண்டிருக்குங் காலை "முஸைலமத்துல் கத்தாப்" என்பவன் அன்னோரைப் பிடித்து "நீர் முஹம்மதாகிறவர் அல்லாஹ்வின் ரசூலாக யிருக்குமென்று உண்மை கொண்டிருக்கிறீரு?" என வினவினன். அதற்கு "நிச்சயமாகவே அவ்வாறு உண்மை கொண்டிருக்கின்றேன்" என ஹஸ்ரத் அவர்கள் கூறினர்கள். உடனே 'முஸைலமா' என்பவன் அவ்வாறு கூறலாகாது. 'முஸைலமா அல்லாஹ்வின் ரஸூலாகயிருக்கும்' என்று கூறும் என கட்டளையிட்டான். ஹஸ்ரத் அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ள முடியாதென்று கூறிமறுத்து விட்டார்கள். அதன்பயனய் அப்பொய்யன் ஹஸ்ரத் அவர்களின் கையைத்தறித்துவிட்டான். பிறகு மறுமுறையும் அவ்வாறே அவன் வினவியதற்கு அதேவிதமாக மறுமொழி கொடுத்தார்கள். அப்பொய்யன் உடனே மற்றொருகையையும் வெட்டிவிட்டான். இதற்குபின் அவன் பன்முறை வினவியும் ஹஸ்ரத் அவர்கள் அவனுக்கு இணங்கிவராத்ததால் ஒவ்வொரு உறுப்பாகத்தறித்து வந்து சகல உறுப்புக்களையும் வேருக்கிவிட்டான். இந்நிலைமையிலும் ஹஸ்ரத் அவர்கள் சன்மார்க்க வழியினின்று சற்றேனும் அகன்றுவிடாது இன்னுயிரை அல்லாஹ்தஆலாவின் இனிய பாதையில் சேர்த்துவைத்தார்கள்.

உம்மு அம்மாராவின் உறுதி.

மனேதிடுக்கத்தைக் கொடுக்கும் இக்கோர நிகழ்ச்சி 'உம்முஅம்மாரா'வுக்குத் தெரியவே அம்மாது பொருமை என்னும் அம்மியை நெஞ்சின்மீது சுமந்துகொண்டார்கள். ஆனல் மனதில்மட்டும் முஸ்லிம்கள், 'முஸைலமத்துல் கத்தாப்' மீது படை எடுப்புச் செய்தால் தாங்களே அந்த மூதேவியைக் கொன்றுவிட வேண்டுமென்று உறுதிசெய்து கொண்டார்கள்.

அக்காலை கலீபாப் பீடத்தி லமர்ந்திருந்த ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்களுக்கு இச்செய்தி தெரிந்தவுடன் இஸ்லாத்தைவிட்டு நீங்கிய முர்தத்துகளின் கிளர்ச்சியை அகற்றுவதற்காக 4 ஆயிரம் பேர்களடங்கிய படையொன்றை ஹஸ்ரத் 'காலிதிப்னு வலீத்' (ரலி) அவர்களின் தலைமையில் அனுப்பிவைத்தார்கள். 'உம்மு அம்மார்' என்னும்மாதோ ஏற்கனவே இச்சம்பவத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்களாதலின் உடனே கலீபா அவர்களிடஞ் சென்று யுத்தத்தில் கலந்துகொள்ள அனுமதி கோரி உத்திரவுபெற்று பட்டாளத்துடன் சேர்ந்து கொண்டார்கள். எல்லோருங்குறிப்பிட்டுள்ள இடத்திற்குச் சென்றவுடன் இருசாரார்க்கிடையே தக்க எதிர்ப்பு ஏற்பட்டு வெகுநேரம் வரை ஒரே நிலைமையில் யுத்தம் நடைபெற்று வந்ததால் இரத்த நதிப்பெருக்கேற்பட்டுவிட்டது. அந்த யுத்தத்தில் முஸ்லிம்களுக்கு பெரும் நஷ்டமேற்பட்டு 1,200 சிப்பாய்களும் பல ஹாபிஜூல் குர் ஆன்களும், காரிகளும்

ஷஹீதாப் விட்டார்கள். ஆனால் விரோதிகளுக்கு பெரும்நஷ்டமேற்பட்டு 'முஸைலமா'வின் சிப்பாய்களில் அநேக ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டு நரகமடைந்தார்கள்.

இவ்வாறான அமளியுடைய நேரத்தில் 'உம்முஅம்மார்' என்னும் அம்மாது 'முஸைலமா'வைத் தேடிக்கொண்டேயிருந்து அவனிருக்குமிடந் தெரிந்து ஈட்டி, வாள் இவைகளினால் படையை ஒதுக்கிக்கொண்டு வடபுறமும் இடபுறமும் காயம் அடைந்தவர்களாய் 'முஸைலமா' இருக்குமிடம்போய்ச் சேர்ந்தார். அதற்குள் அம்மாதின்மீது 11 காயங்களேற்பட்டும் ஒருகை மணிக்கட்டோடு பிரிந்தும் போய்விட்டது. இவ்வளவு கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு சற்றுமுன் சென்று 'முஸைலமா'வின் மீது வாட்பிரயோகஞ் செய்தார்கள். ஒரே அடியாக 'முஸைலமா'வின் மீது இருவாட்கள் வந்து வீழ்ந்தது அதனால் அவன் இருதுண்டாக குதிரையினின்று கீழேவிழுந்து விட்டான். அங்குபார்க்கும் போது 'உம்மு அம்மாரா' தன் புதல்வரான அப்துல்லா தமக்குச்சமீபத்தில் நிற்பதைக்கண்டு 'முஸைலமா'வைக் கொன்றதுயார் எனக்கேட்டார். அதற்குஅப்துல்லாஎனதுவாளும் 'வஹஷியின்வாளொன்றும் பட்டது. ஆனால் யாருடைய வாள் அவனை மரிக்கச்செய்ததென்பது எனக்குத் தெரியாதென்று கூறினார். இச்சம்பவநிகட்சியின்மீது அம்மாது அளவற்ற சந்தோஷமடைந்து தன்சிரசை அல்லாஹ்த ஆலாவுக்காக பூமியில் வைத்து துதிசெய்தார். அதுகாலை அம்மாதின் சரீரம் காயத்தால் நிறப்பப்பட்டிருந்தால் படைத்தலைவராகிய ஹஸ்ரத் காலிதிப்னுல் வலீத் (ரலி.) அவர்கள் முழுகவனத்தோடு பரிகாரஞ்செய்ய ஏற்பாடுசெய்தார்கள். சொற்பநாளில் அக்காயங்களெல்லாம் சொஸ்தமாய் சௌகரிய மேற்பட்டு விட்டது.

மனோதைரியம், வீரம், ஈமானின் பலம், இஸ்லாமிய சேவை ஆகியவைகள் கஅபுளுடைய மகளான உம்மு அம்மாராவை முஸ்லிம்களின் பார்வையில் சங்கை மரியாதை வாய்ந்த மாதாகவும் போற்றப்படும் உத்தமியாகவும் செய்துவிட்டது. எனவே ஒவ்வொருவரும் அளவுகடந்து அவ்வம்மையைப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் ஆபூபக்ர்ஸித்தீக் (ரலி) அவர்கள் அடிக்கடி அம்மாது வீட்டிற்குச் சென்று சுகச்செய்தி விசாரித்து வருவார்கள். ஹஸ்ரத் உமர்பாரூக் (ரலி.) அவர்கள் அம்மாதை கண்ணியமாக மதித்துவந்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் கலீபாப் பதவி வகித்திருந்த காலை ஒருதடவை யுத்தகளத்தில் அகப்பட்ட முதல்கள் வந்தது. அதில் அழகுபொருந்திய துப்பட்டியொன்றும் விலையுயர்ந்த முக்காட்டுப் புடவையும் வேலைப்பாடுடைய இரண்டுபட்டியுமிருந்தது. அச்சாமான்களை பங்கிடுங்கால் அவ்விருபட்டியையும் கலீபா அவர்களின் மகளுக்குக் கொடுத்துவிடும்படி சிலர் யோசனை கூறினர். சிலரோவெனில், ஹஸ்ரத் அவர்களின் பெண்சாதியும் அலீ (ரலி.) அவர்களின் மகளுமான குல்தூம் (ரலி.) அவர்களுக்குக் கொடுத்துவிடும்படி கூறினர். ஆனால் கலீபத்துல் முஃமினீன் ஹஸ்ரத் உமர்பாரூக் (ரலி.) அவர்கள் அந்தஇருபட்டிக்கும் 'உம்மு அம்மாரா'தான் பாத்தியஸ்தராகும். எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் 'உஹத்' போர் நடைபெறுங்காலை யான் எனது இடபுறம் வலபுறம் எங்கு பார்த்தபோதிலும் 'உம்மு அம்மாரா'வையேகாண்கின்றேன்'' என்று கூறியிருக்கின்றார்கள் எனச் சொல்லி அவ்விரண்டையும் அம்மாதுக்கே அனுப்பி வைத்துவிட்டார்கள். அம்மாதின் தைரியம் தானென்னே!

மிஃறாஜ் வைபவம்.

தன் அடியாரை இரவில் மஸ்ஜிதஹராம் (மக்காவி)லிருந்து மஸ்ஜித ஆக்ஸா (பைத்துல் முகத்தஸ்) வரை கொண்டுபோன அந்த நாயன் மிகப் பரிசுத்தமுடையவனாகும் அப்பள்ளிக்குச் சூழால் நம்முடைய கிருபை(யின் காட்சிகள்) நிறைந்திருப்பதால்

அவருக்கு அதனை காண்பிப்பதற்காக (அழைத்துச் செல்லும்படி செய்த நாயன் மிகத் தூய்மை வாய்ந்தவன்.) அவன் கேழ்க்கிறவனாகவும் பார்க்கிறவனாகவு மிருக்கிறான்.

எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் தூக்கத்திற்கும் விழிப்புக்கு மிடையிலிருக்குங்கால் முகடு பிளக்கப்பட்டு ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை.) அவர்கள் மற்றும் சில மலக்குகளுடன் அங்குவந்து எம்பெருமானார் (ஸல்.) அவர்களை விழிக்கச்செய்து நெஞ்சைப் பிளந்து 'ஜம்ஜம்' தண்ணீர்கொண்டு துப்பரவு செய்து ஈமான் ஹிக்மத்தைக்கொண்டு நிறப்பப்பட்டிருந்த தட்டத்திலுள்ளதை அங்கு வைத்து விட்டார்கள். அதன்பின் சர்வலோக தயாளர் (ஸல்.) அவர்கள் புராக் என்னும் வாகனத்தின்மீது விற்று பலவாறான காக்ஷிகளைக் கண்டு களித்தவர்களாய் 'பைத்துல்முகத்தஸ்' வந்து அங்குள்ள 'மஸ்ஜித அக்ஸா'வில் பற்பல நபிமார்களின் ஆத்மாக்கள் வீற்றிருக்குங்கால் அவர்கள் யாவருக்கும் இமாமாக நின்று இரண்டு 'ரக்கஅத்' தொழுகை நிறைவேற்றினார்கள். பிறகு அங்கிருந்து வானுலகிற்குச் சென்றார்கள். முந்திய வானத்தில் ஹஸ்ரத் ஆதம் (அலை.) அவர்களையும் இரண்டாவதில் ஹஸ்ரத் எஹ்யா, ஹஸ்ரத் ஈஸா (அலை, மா.) இவ்விருவரையும் மூன்றாம் வானத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்களையும் நான்காவதில் ஹஸ்ரத் இத்ரீஸ் (அலை)யும் ஐந்தாவதில் ஹஸ்ரத் ஹாரூன் (அலை)யும் ஆறாவதில் ஹஸ்ரத் மூஸா (அலை.) அவர்களையும் ஏழாவது வானத்தில் ஹஸ்ரத் இப்ராஹீம் கலீலுல்லாஹ் அவர்களையும் சந்தித்தபின் தங்களுக்கு சுவர்க்கத்தைச் சுற்றிக் காண்பிக்கப்பட்டது. அங்கிருந்து சென்று 'சித்றத்துல் முன்தஹா'வுக்குச் சிறப்புற்றார்கள். அதுகாலை ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை.) அவர்கள் தங்கள் சுயரூபத்தில் வெளியானார்கள். அதற்குப்பின் ஏகவல்லமை பொருந்திய அல்லாஹ்த ஆலாவிடம் திருவசனம் புரிந்தார்கள். அதுபொழுதுதான் தொழுகை கடமையாக்கப்பட்டது. இவ்வாறான காட்சிகள் யாவற்றையும் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் கண்டுகளித்து தங்களில்லமெய்தி விட்டார்கள்.

மகுடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தெய்வ திரு வசனத்தால் எம்பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு சரீரத்துடன்தான் மிஃறாஜ் ஷரீப் ஏற்பட்டதென்பது நன்கு புலனாகின்றது. ஏனெனில் (1) 'ஸுப்ஹான' என்னும் தூய்மைப்படுத்துவதன்மீது அறிவிக்கக்கூடிய பதமானது பிரதானமாயுள்ள நூதன விஷயங்களிலேயே உபயோகிக்கப்படுகின்றது. இவ்வைபவம் (மிஃறாஜ்) ஆத்மார்த்தமானதாக இருக்குமாயின் அது ஒரு பிரதான விஷயமாகக் கூறப்பட்டு அதற்காக ஆச்சரியத்தின் மீது அறிவிக்கக்கூடிய 'ஸுப்ஹான' என்னும் பதத்தை உபயோகிக்கவேண்டிய அவசிய மேற்பட்டிராது. (2) குர்ஆன் ஷரீபில் 'அஸ்ரா' என்னும் வார்த்தை எங்கெங்கெல்லாம் உபயோகிக்கப்பட்டிருக்கின்றதோ ஆங்கெல்லாம் விழிப்புடைய நேரத்தில் நிகழ்பெற்ற சம்பவமென்றே புலனாகிறது. கனவிற்கும், மனதோற்றத்திற்கும் 'இஸ்ரா' என்னும் பதத்தை உபயோகப்படுத்துவதே கிடையாது. 'அப்த்' என்னும் பதம் குர்ஆன் ஷரீபில் எங்கெங்கெல்லாம் காணப்படுகின்றதோ ஆங்கெல்லாம் சரீரத்துடன் ஆத்மா சேர்ந்ததைக் குறிக்கிறதேயன்றி சரீரமன்றி ஆத்மாவைமட்டும் குறிப்பிடுவதாகயில்லை. (4) மிஃறாஜ் சம்பவ நிகட்சியைக்கேட்டு குப்பார்கள் பெரும் ஆச்சரியமுற்று தங்கள் புத்திக்குப் புலனாகவில்லை என்று கூறியதும் அஃது சரீரத்துடன் தான் ஏற்பட்டதென்பதை நன்கு விளக்குகின்றது. அவ்வாறில்லாதுபோனால் குப்பார்கள் ஆச்சரியப்படுவதற்கும் இவ் விஷயத்தை ஒப்புக்கொள்ளாது அநேகர் முர்தத்தாய் போய்விடுவதற்கும் எவ்விதக் காரணமுமில்லை.

தவிர முஹத்திதீன்களும், புக்ஹாக்களும், சூபியாக்களும் எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு விழித்திருக்கும் நிலைமையிலேயே ஸ்தூல சரீரத்துடன் தான் மிஃறாஜ் ஏற்பட்டது, சரீரத்துடன் தான் மஸ்ஜித ஹராமிலிருந்து மஸ்ஜித அக்ஸாவுக்குச் சென்று அங்கிருந்து வானலோக யாத்திரை செய்தார்களென்று கூறி யிருப்பதாக அல்லாமா காஜீ இயால் அவர்கள் ஷிபாவில் கூறியிருக்கிறார்கள்.

நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் மஸ்ஜித அக்ஸாவரை அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து 'சித்ரத்துல் முன்தஹா' பிறகு நாயன் நாடிய இடம்வரை அழைத்துச் செல்லப்பட்டது யாவும் விழிப்புடைய நேரத்தில் திரேகத்துடன் தான் நடைபெற்றதென ஹஸ்ரத்

ஷாஹ்வலியுல்லா முஹத்திஸ் தெஹ்லவீ (ரஹ்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

எந்தநாயன், ஹஸ்ரத் ஜகரிய்யா (அலை.) அவர்களின் விர்த்தாபியதிசையில் அவர்களின் மனைவியார் மலடியாக இருக்கும் நிலைமையில் வழக்கத்திற்கு மாறாக சந்ததியை அளித்தானோ, எவன் ஹஸ்ரத் மர்யம் (அலை.) அவர்களது தூய்மை பொருந்திய வயற்றிலிருந்து தந்தையின்றி வனுப்பமான ஒருநபி பிறக்கும்படி செய்தானோ அந்தநாயன் நிச்சயமாக தனது ஹபீபாகிய எம்பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு சரீரத்துடன் மிஃரூஜ் ஏற்படும்படி செய்ததில் ஆச்சரியமொன்றுமில்லை. ஹஸ்ரத் ஸையிதுனா மூஸா (அலை.) அவர்களுடன் வார்த்தையாட 'ஸீனா' மலைக்கு அழைத்த நாயன் எம்பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களுடன் முகாலோபனஞ்செய்வதற்காக சரீரத்துடன் வானுலகுக்கு அழைத்ததில் புதுமையொன்றுமில்லை. ஆகவே அல்லாஹ்தஆலா எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்களை தன் சந்நிதானத்திற் கழைத்ததே விசேஷித்த ஒரு தனி மகுத்துவத்தைத் தரத்தக்கதாக இருக்கின்றது

இதற்குமாறாக மிஃரூஜ்சரீரத்துடன் நடைபெற்றதென்பதை இயற்றுக்கொள்ளாதவர்கள் (1) வானமென்று ஒருவஸ்த்துவே இல்லாதிருக்கும்போது நபிகள் பிரான் (ஸல்.) வானத்திற்குச் செல்வதெப்படி அதிலும் சரீரத்துடன் செல்வதெங்கனம்? என்று கூறுகின்றன. அதற்கு கீழ்வருமாறு பதில் கூறப்படுகின்றது. அதாவது :—பைஸாகூரஸூம் அவருடைய சிஷ்யர்களும் அவரைப்பின் தொடர்போரும் வானமே கிடையாதெனக் கூறியிருக்கின்றனர். எனவே ஒரு மனிதன் வானத்தை மறுப்பதால் அஃது இல்லாது போய்விட மட்டாது. வானம் ஏற்பட்டிருக்கிறதென்பது எல்லோரின் ஏகோபித்த அபிப்பிராயமாகும். ஆயிரக்கணக்கான வருடங்களாக பெரும் பெரும் உலமாக்களும் தத்துவ விஞ்ஞான சாஸ்திரிகளுள் படயூனனின் சிறந்த பண்டிதர்களான தத்துவ ஆராய்ச்சியாளர் யாவரும் வானம் உண்டு என்னும் தீர்மானத்திற்கே வந்திருக்கின்றனர். தவிர நபிமார்கள் (அலை) அவர்களுக்கு எத்தனை வேதங்கள் இறக்கிவைக்கப்பட்டிருக்கின்றதோ அவை யாவற்றிலும் வானம் உண்டென்பதையே வற்புறுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வாறான ஆராய்ச்சி யாளரும் உலகிலுள்ள கற்றோர் கல்லாதோர் யாவரும் அங்கீகரித்து ஏற்று வரும் ஒரு விஷயத்தை, வானுலகிலிருந்து இறக்கி வைக்கப்பட்ட வேதங்களும் பூஉலகிலுண்டான கிரந்தங்களும் அங்கீகரித்துவரும்-பஹிரங்கமாக அறிவித்துவரும் ஒருவிஷயத்தை போதிய காரணமின்றி எவ்வாறு மறுத்துக்கூற முடியுமென்பதுதான் தோன்றவில்லை. ஆனல் வானம் இருக்கிறதென்றால் அது ஏன் நமது பார்வைக்குத் தென்படுகிறதில்லை எனக்கேழ்க்கலாம். இவ்வினா ஒரு நட்பமான கேள்வியாக மாட்டாது. ஏனெனில், எத்தனையோ வஸ்துக்களை மானிடர் மெல்லிய நட்பமான தூரதிருஷ்டிக் கண்ணாடியால்கூட பார்க்கமுடியாமலிருக்கிறது. பூமிக்குள்ளாலும் சமுத்திர ஜலத்திற்கு மத்தியிலும் மலைக்கற்களுக்குள்ளும் எத்தனையோ ஆயிரக்கணக்கான வஸ்துக்கள் மறைந்து கிடப்பதை மானிடர் எவ்விதமான தூரதிருஷ்டிக்கண்ணாடியாலும் பார்க்கமுடியாமலிருக்கின்றது. தவிர கண்ணாடியினுள்ள குளோப்புக் குள்ளால் வைக்கப்பட்டிருக்கும் பிரகாசமுடைய விளக்கை தூரத்தினின்று பார்ப்போமாகில் அக்குளோப் நமது கண்களுக்குப் புலப்படாது விளக்குமட்டில் தான் தென்படுகிறது. ஆதலால் குளோப் தென்படாததுகொண்டு அதனை இல்லைஎன்று தீர்மானஞ் செய்வதற்கு எவ்வித ஆதாரமுங் கிடையாது. அவ்வாறே வானமும் பளிங்கியைப்போன்று தூய்மையானதாகவும் நமது பார்வையினின்று வெகு தூரமானதாகவுமிருப்பதால் நமது பார்வைக்குப் புலனாசிறதில்லை என்னும் விஷயத்தை ஆதாரமாகக்கொண்டு அதனை மறுக்கமுடியுமா? ஆகவே பைஸாகூரஸ்க்கு முன்பே வானம் உண்டென்பதைதக்க ஆதாரங்களுடன் ஸ்தாபித்திருக்கின்றனர் என்பதே.

(2) வானமிருப்பதாக ஒப்புக்கொண்டபின் முற்காலத்திலுள்ள அறிவாளிகளின் அபிப்பிராயப்படி வானமானது வெங்காயத்தைப் போல் சேர்ந்து அடுக்கடுக்காக இருப்பதால் அதில் கிழிவுதல் ஏற்படுவதும் பிறகு சேர்ந்து கொள்வதும் ஏற்படக்கூடாது என்று கூறுகின்றனர். இதற்கும் கீழ்வருமாறு பதில் கூறப்படுகிறது. அதாவது:—இக் கூற்று ஹகீம்பித்லிமூஸ், வானம் கெட்டியாகவும்

ஒன்றோடொன்று சேர்ந்ததாகவும் இருக்கிறதென்று சொல்வதைப் பின்பற்றுவதால் ஏற்படும் சந்தேகமாகயிருக்கின்றது; இக்கூற்றை அநேக (ஹுக்கமாக்கள்) அறிஞர்கள் மறுத்து வானம் கெட்டியாக யில்லாதிருப்பதை ஸ்திரப்படுத்தியிருக்கின்றூர்கள்; எனவே வானம், எந்த வஸ்த்துவும் அதில் செல்வதற்கு இயலாத விதமாய் கெட்டியாக இருக்குமாயின் ஆயிரக்கணக்கான நக்ஷத்திரங்களும் சூரியன் சந்திரன் முதலிய கிரஹணங்களும் எவ்வாறு சுற்றிவரும் என்பதை அன்னோர் உணரவில்லைபோலும்; அவ்வாறு வானம் கெட்டியாக இருப்பதாய் வைத்துக்கொண்ட போதிலும் அதில் வாயற்படிகளும் பாதைகளும் இல்லை என்று அன்னோருக்கு எங்கிருந்து தெரிகிறது? அவ்வாறு இல்லை என வைத்துக்கொண்ட போதிலும் அதில்கிழிவு, தொண்டி ஏற்படமாட்டாதென்று கூறப்படுவதை அநேகர் அங்கீகரிப்பதில்லை என்று கூறுவோம் என்பதே.

இஸ்லாத்தின் விரோதிகள் இவ்வாறான பல குயுக்தி வாதங்கள் செய்து தோல்வி அடைந்து போயிருக்கின்றூர்களாதலின் எம்பெருமானர் (ஸல்) சரீரத்துடன் விழிப்புடனேயே மிஃறாஜுக்குச் சென்று திரும்பினர் களென்பதை நன்கு தெரிந்து கொள்கிறோம்.

மிஃறாஜ் ஷரீபானது எம்பெருமானர் (ஸல்.) அவர்களுக்கு அவர்களது நுபுவ்வத்தின் 12-ம் ஆண்டு 52-ம் பிராயத்தில் ரஜப் மாதம் 27வ திங்கட்கிழமை நிகழ்பெற்றதென்று ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி.) அவர்களால் றிவாயத்துச் செய்யப்பட்டிருப்பதாக தாரீகுல் கமீஸ் என்னும் நூலில் கூறப்பட்டிருக்கிறது.

மிஃறாஜ் ஷரீபின்பயன்.

உம்முஹானீ (ரலி.) அவர்களின் வீட்டிலிருந்து புறப்பட்டு கஃபத்துல்லாவிற்கும், அங்கிருந்து பைத்துல் முகத்தஸ், வான லோகம், சித்ரத்துல்முன்தஹா முதலிய இடங்களுக்கும் எம்பெருமானர் (ஸல்.) அவர்களை அல்லாஹ்த ஆலா அழைத்துச் செல்லும்படி செய்தது, அவ்விரவில் தன்னுடைய திருஷ்டாந்தங்களை காண்பிப்பதற்கேயாம். மேலும் மஸ்ஜித் அக்ஸாவுக்குச்சென்று சகல நபிமார்களுடன் சந்திப்பு ஏற்பட்டதும் ஒவ்வொரு வானத்திலும் சம்பாஷணை நடந்ததும் முடிவில் அல்லாஹ் ஜல்ல ஷானுஹு வின் தெரிசனைகிடைத்து அதைக்கொண்டு சிறப்பிக்கப்பட்டதும் பிரதானமானவைகளே யாகும்.

தூய்மை வாய்ந்த அவ்விரவில் நமக்குக் கிடைத்த அரும்பாக்கியங்களை மட்டுப்படுத்திக் கூறமுடியாது. அவ்விரவில்தான் நமக்கு அளவற்ற பயனை அளிக்கவல்லதும் இம்மை மறுமையின் பலவாறான கஷ்ட சங்கடங்கள் நிகழ்பெறுமல் தடுத்துக்கொள்ளக் கூடியதுமாகிய தொழுகை நம்மீது கடமையாக்கப் பட்டது.

சோதரீர்! சென்ற 1300 வருட காலமாக நம் முஸ்லிம்கள் மிஃறாஜ் ஷரீபின் நிகழ்ச்சியை உண்மையாக்கி வைத்து அதனை உறுதி கொண்டு வருகின்றனர். ஆனால் எவர்களின் மூளையில் கெடுதி ஏற்பட்டு மிஃறாஜ் சம்பந்தமான விஷயம் அவர்களின் புத்திக்குப் புலனுகாமலிருக்கின்றதோ அன்னோர் இச்சம்பவ நிகழ்ச்சியை புத்தி ஏற்றுக்கொள்கிறதில்லை எனக் கூறுகின்றனர். எனவே ஒரு மனிதர் சற்று நேரத்திற்குள் வானுலக யாத்திரை சென்று சுவர்க்கம் நரகம் முதலிய காட்சிகளை கண்டு அல்லாஹ்தஆலாவையும் சந்தித்து தம் வீடு வருங்கால், கதவின் சங்கிலி ஓசை அப்படியே இருந்தும் படுக்கை விரிப்பின் சூடு நீங்காமலிருந்ததாகவும் கூறுவது தங்கள் அறிவிற்கு எட்டுகிறதில்லை எனக்கூறி மிஃறாஜை மறுக்கின்றனர். ஆகவே அன்னோர் மிஃறாஜ் என்பது ஆத்மார்த்த சம்பவமென்றும் சரீர சம்பந்தப்பட்டதல்ல வென்றும் கூறுகிற்கின்றனர். இவைகளெல்லாம் வீண் விதண்டாவாதங்களேயாகும். ஆகவே நம் முஸ்லிம் சோதரர்கள் எம்பெருமானர் (ஸல்.) அவர்களுக்கு சரீரத்துடன்தான் மிஃறாஜ் ஏற்பட்டது; அது ஆத்மார்த்தமானதல்ல வென்பதை நன்குதெரிந்து அதனை உண்மை கொள்வார்களாக.

இஸ்லாமிய கட்டளையும் தொழுகையும்.

இதுகாலையுள்ள முஸ்லிம்களின் நிலைமையும் அவர்கள் அல்லாஹ்வை மறந்திருப்பதும் எம்மட்டில் வந்துவிட்டதெனின் தொழுபவர்களைவிட தொழுகை இல்லாதவர்களே எங்கும் அதிகமாய்க் காணப்படுகின்றனர். முற்காலத்தைப்போல் முஸ்லிம்களின் வெளிரங்க அடையாளம் தொழுகை எனக் கருதப்படுமாயின் கோடி முஸ்லிம்களில் சில இலக்ஷம்பேர்களே தொழுகையுடையவர்களாய்க் காணப்படுகின்றனர். ஒருவன்தொழுகையை விட்டிருப்பது அவனது ஈமானின் பலக்குறைவையன்றோ வெளியாக்குகின்றது. மானிடன் ஈமானுடையவாய் ஆகிவிட்டபின் தொழுகைதான் அவனுடைய இஸ்லாமிய பிரதான செய்கையாக இருந்துவருகிறதென்பது பிரத்தியக்ஷம்.

தொழுகையில்லாதோர் விஷயமாய் குர்ஆன் ஷரீபின் தீர்ப்பு.

தொழாமலிருப்பது முஷ்ரிக், காபிர்களின் செய்கையாகு மென்பதைத் தெரிவிப்பதற்காக 'தொழுகையை நிறைவேற்றுங்கள்; முஷ்ரிக்களாய்விடாதீர்களே"ன குர்ஆன் ஷரீப் கூறுகின்றது. மேலும் "அவர்களிடம் தொழுகையை நிறைவேற்றுங்களெனச் சொல்லப்படுமாயின் அன்னோர் தொழுவது கிடையாது. கியாமத்(மறுமை)நாளைப் பொய்யாக்கி வைப்போருக்கு ஆண்டவனது முனிவு ஏற்பட்டிருக்கிறது" என்று குர்ஆன் கூறுவதால் தொழுகையை நிறைவேற்றாதிருப்பது அல்லாஹ்வையும் அவனது ரஸூலையும் பொய்யாக்கி வைப்போரின் செய்கையாகயிருக்கு மென்று நன்கு புலனாகின்றது. "பிறகு அவன் சன்மார்க்கத்தை உண்மைகொள்ளவில்லை; தொழுகையை நிறைவேற்றவில்லை, ஆனால் பொய்யாக்கி வைத்து முகத்தைத் திருப்பிக்கொண்டான்" என அல்லாஹ்த ஆலா அறிவித்திருப்பதால் தொழுகையை நிறைவேற்றாதிருப்பவன் றஸூலைப் பொய்யாக்கி வைத்தவனாகுமென்பது நன்கு புலனாகின்றது. மேலும் "அவர்கள் ஷிர்க், குபிரினின்று தவ்பாச்செய்து தொழுகையை நிறைவேற்றியும் ஜகாத்கொடுத்தும் வருவார்களாயின் அன்னோர் உங்களின் மார்க்க சோதரர்களாகும்" என்று குர்ஆன் அறிவிப்பதால் முஸ்லிம்களுக்கு தொழுகையின் அவசியம் எவ்வளவுதூரம் வேண்டற்பாலதாகயிருக்கிறதென்பது நன்குபுலனாகும்.

தொழுகை நிறைவேற்றாதிருப்பதற்குள்ள மார்க்க தண்டனை

தொழுகை நிறைவேற்றாதிருப்பவனுக்கேற்படும் தண்டனை யாதாகு மென்பதில் உலமாக்கள் பலவாறான அபிப்பிராயபேதமுடையவர்களாயிருந்து வருகின்றனர். எனவே ஹஸ்ரத் இமாம் அஹ்மத் பின் ஹம்பல் (ரஹ்.) அவர்கள் தொழுகையை நிறைவேற்றாதிருப்பவனை கொன்றுவிடவேண்டுமென்று கூறுகின்றார்கள். ஏனெனில், அவன் தொழுகாதிருப்பதால் காபிராய்விடுகின்றான்; எவன் முஸ்லிமாகயிருந்து காபிராக மாறிவிடுகின்றானோ அவனைக்கொல்லவேண்டுமென்று சன்மார்க்கம் கட்டளை பிறப்பிக்கின்றது. ஆகவே இவனும் கொல்லப்படுவதற்கு பாத்தியஸ்தனாய் விடுகின்றான் எனக் கூறுகிறார்கள். ஹஸ்ரத் இமாம் ஷாபிஈ இமாம் மாலிகீ (றஹ்,மா) இவ்விருவரும் தொழுகாதிருப்பவன் காபிராய் விடுவதில்லை ஆனால் தண்டனையின் தோரணையில் அவனை கொன்றுவிட வேண்டுமென்று கூறுகின்றார்கள். ஹஸ்ரத் இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள், மானிடன் தொழுகையை நிறைவேற்றாதிருப்பது கொண்டு காபிராய் விடுவதுமில்லை; அவன் கொல்லப்படுவதற்கு பாத்தியஸ்தனாகவும் ஆய்விடுவதில்லை. ஆனால் தண்டிக்கப்படுவதற்கும் நீண்டகால சிறைவாச தண்டனை அடைவதற்கும் பாத்தியஸ்தனாக ஆய்விடுகின்றான் எனக்கூறியிருக்கின்றார்கள். சுருங்கக்கூறின் பஞ்சமா பாதங்களாகிய பெரும் பாவங்களைவிட தொழுகையை விட்டிருப்பது மாபெரும் குற்றமாகும். அக்குற்றங்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனையைவிட தொழுகையை விட்டிருப்பதற்கு அதிகமான தண்டனை கொடுக்கப்படுமென்பது திண்ணம்.

எம்பெருமானுர் நபிகள் நாதர் (ஸல்.) அவர்களின் திருவாக்கியங்களிலும் தொழுகையை விட்டிருப்போனுக்கு கடிசான தண்டனை ஏற்படுமென கூறப்பட்டிருக்கின்றது. அதாவது, "தொழுகைக்காக அழைக்க (பாங்கு சொல்ல)ப்படுமாகில் ஷைத்தான் அதிவேகமாய் ஓடுகின்றான்" என்றும், "மனிதர்கள் 'லாயிலாஹ இல்லல்லாஹு' வென்னும் கலிமாவை ஓதி தொழுகையை நிறைவேற்றி வைத்து ஜகாத் கொடுக்க முற்படும் வரை அன்னோரிடம் யுத்தம் புரிவதற்கு யான் ஏவப்பட்டிருக்கிறேன். அவ்வாறுசெய்வார்களாயின் தங்களுடைய உயிர்களையும் சொத்துக்களையும் காப்பாற்றிக்கொண்டவர்களாய் விடுகின்றார்கள்" என்றும் எம்பெருமானுர் சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். தவிர வள்ளல்ரசூல் (ஸல்.) அவர்கள் மிஃறாஜுக்குச் சென்ற கால் ஏழு வானங்களையும் சுற்றிவரும்பொழுது விபரீதக் கோலத்தையுடையும் தடுமாற்ற மடையக் கூடியவுமான ஒரு கூட்டத்தைப் பார்த்தார்கள். அன்னோரின் தலைகள் கல்லால் நசுக்கப்படுகிறது; பிறகு சொஸ்தமாய் மறுபடியும் நசுக்கப்படுகிறது இவ்வாறு அன்னோருக்கு வேதனை கொடுக்கப்படுவதை எம்பெருமானுர் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் பார்த்து தங்களுடனிருந்த ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை.) அவர்களிடம், இவர்கள் யார்? ஏதற்காக இவ்வாறான வேதனை கொடுக்கப்படுகின்றது? எனக் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள், இன்னார்மீது அல்லாஹ்த ஆலா கடமையாக்கியிருந்த ஐந்து நேரத்தொழுகையும் பாரமாகத்தோன்றி தொழுகையை நிறைவேற்றுவதில் சோம்பல் செய்தவர்களாகும்; அதற்காக இவ்வாறான வேதனை கொடுக்கப்படுகிறதென தெரிவித்தார்கள். மேலும், "எவன் தொழுகையை விட்டிருக்கின்றானே அவனுடைய பெயர் நரகத்தின் தலைவாயல்மீது எழுதப்பட்டுப் போய்விடுகிறதென்று சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். மேலும் சங்கைவான்களான சஹாபாக்களும் தொழுகையை நிறைவேற்றாதிருப்போனுக்கு மன்னிப்பு அளிக்கப்படுவதே கிடையாதென்று திட்டமாய்க் கூறிவந்திருக்கின்றார்கள்.

உலகில் பெரும் அரசனாகவும் தலைவனாகவுமிருந்த ஒரு மனிதன் கியாமத் நாளில் அல்லாஹ்த ஆலாவுக்குமுன் கொண்டுவரப்படுவான். அதுபொழுது அவனிடம், எதற்காக என் கட்டளையை மீறி தொழுகையை நிறைவேற்றாதிருந்தாய், என அல்லாஹ்த ஆலா கேட்பான். அதற்கவன், யா அல்லாஹ்! நீ எனக்கு அதிகாரத்தையும் இராஜிய பரிபாலனத்தையும் கொடுத்திருந்ததால் என் முழு கவனத்தையும் அதிலேயே செலுத்த வேண்டிய தேற்பட்டிருந்ததால் தொழுவதற்கு நேரமில்லாது போய்விட்டது எனக் கூறுவான். உடனே அல்லாஹ்த ஆலா ஹஸ்ரத் தாவூத் (அலை.) ஹஸ்ரத் சுலைமான் (அலை) இவ்விருவரையும் அழைத்து வரச் செய்து, இவ்விருவரும் மாபெரும் சக்கரவர்த்திகளாக யிருந்தும் இன்னோரின் இராஜாங்க சேவையானது அவர்கள் தொழுகைகை நிறைவேற்றுவதை விட்டு தடைசெய்துவிட்டதா? ஆகவே, எந்த இராஜ்யபரிபாலன விஷயமும் உங்களை தொழுகையைவிட்டுத் தடுத்துவிடவில்லை; நீங்களே தொழுகையைமறந்து உட்கார்ந்திருந்தீர்கள்; அதன் காரணமாய் இதுபொழுது நரகத்திற்குச் செல்லுங்களென்று கட்டளையிடுவான் என்பதாகவும், அதன்பின் உலகில் வியாதியஸ்தனாக யிருந்த ஒருவனைக் கொண்டுவரப்படும். அவனிடம் எதற்காக என் கட்டளையை மீறி தொழுகையை நிறைவேற்றாதிருந்தாய் என அல்லாஹ்தஆலாகேட்பான். அதற்கவன், யாஅல்லாஹ்! யான் வியாதியஸ்தனாக யிருந்த காரணத்தால் தொழுவதற்குள்ள சக்தி எனக்கில்லாதுபோய்விட்டதெனக் கூறுவான். உடனே அல்லாஹ்த ஆலா ஹஸ்ரத் அய்யூப் (அலை) அவர்களை அழைத்துவரச்செய்து ஏ மனிதனே! இவர்களைவிடவா நீ அதிகமாய் வியாதியில் அகப்பட்டிருந்தாய்? இதோ பார் இவர்களது திரேகத்தில் எத்தனையோவருடம் புழு ஏற்பட்டிருந்தது. அப்படி யிருந்தும் ஒரு மூச்சை யாகிலும் என் ஞாபகமில்லாத வழியில் செலவிடவில்லை; உண்மையில் வியாதியானது தொழுகைக்குத் தடையாக யிருக்குமாயின் இவர்களையும் தடைசெய்திருக்கும். ஆகவே நீதொழுகை நிறைவேற்றுவதை விட்டு வியாதி தடை செய்யவில்லை; உன்னுடைய சோம்பேறித்தனமும் மறதியுந்

தான் தடைசெய்துவிட்டது ஆகவே இவனை நரகத்திற்கு இழுத்துச் செல்லுங்களென றஹ்மான் கூறுவானென்றும், அதற்குப்பின் உலக வாழ்க்கையில் சந்ததி மிகுதமாயுள்ள ஒருவன் வருவான். அல்லாஹ்த ஆலா அவனை நோக்கி, ஏ மனிதனே ! எனது கட்டளையைப் பின்பற்றி தொழுகையை நிறைவேற்றி வந்தாயா ? வெனக் கேழ்ப்பான் அதற்கவன், யாஅல்லாஹ் ! யான் அதிகமான சந்ததியுடையவனாக யிருந்ததால் அவர்களின் சம்ரக்ஷணையின் கவலையிலும் பிரீதியிலும் காலங் கழிக்க வேண்டி யிருந்ததால் தொழுவதற்கு நேரமில்லாது போய்விட்டது எனக்கூறுவான். உடனே ஹஸ்ரத் யஅகூப் (அலை.) அவர்களை அழைத்து வரச்செய்து ஏ மனிதனே ! உனக்கு அதிக சந்ததியிருந்ததா அல்லது இவர்களுக்கிருந்ததா ? உலக சம்பந்தமான விஷயத்தில் உனக்கு அதிககஷ்டமிருந்ததா அல்லது இவர்களுக்கிருந்ததா ? இவர்கள் ஹஸ்ரத் யூசுப் (அலை) யை இழந்துவிட்டு வருடக்கணக்காக அழுதுகொண்டிருந்தும் ஒருபொழுதும் தொழுகையை விட்டிருக்கவில்லை ஆகவே இன்னோனை நகரத்திற்கு இழுத்துச் செல்லுங்களென்று றஹ்மான் கூறுவானென்றும், அதற்குப் பின்பு புருடனின் அக்கிரமத்திற்கு இறையான ஒரு பெண்பிள்ளை வருவாள், அல்லாஹ்த ஆலா அவளைநோக்கி, நீ உலகில் தொழுகையை நிறைவேற்றினாயா இல்லையா ? வெனக் கேழ்ப்பான். அதற்கவள் என் புருடன் என்மீது பெரும் அநீதி செய்கிறவனாக இருந்ததால் தொழுகை நிறைவேற்றுவதற்கு இடமளிப்பதே கிடையாதென்று கூறுவான். உடனே அல்லாஹ்த ஆலாவின் உத்திரவுப்பிரகாரம் பீபி ஆஸியா அங்குவருவார்கள். அதுபொழுது அல்லாஹ்த ஆலா அப்பெண்பிள்ளையை நோக்கி, இவர்களின் புருடனை பிர்அவனைப்பார்க்கினும் உன் புருடன் அதிக்கிரமம் செய்கிறவனாக இருந்தானா ? புருடனின் அக்கிரமச் செயல்பெண் சாதியின் தொழுகையைத்தடைசெய்திருக்குமாயின் பீபி ஆஸியா அறவே தொழுகையை நிறைவேற்றி யிருக்கமுடியாது ஆகவே நீர் தொழுகா திருந்தது உன்மீதுள்ள தவறேயாகும். அதனால் நரகத்திற்குச் செல்ல வேண்டுமென்று அல்லாஹ்த ஆலா கட்டளை பிறப்பிப்பா னென்றும் தப்ஸீர் ரூஹுல் பயானில் கூறப்பட்டிருக்கின்றது.

என தன்புற்ற நேயர்காள் ! மேலேகூறப்பட்டுள்ள விஷயங்களால் தொழுகை மானிடர்களுக்கு எவ்வளவுதூரம் பிரதான விஷயமாக இருக்கிறதென்பதும் அதனை நிறைவேற்றாதிருப்பது கொண்டு அல்லாஹ்த ஆலாவின் கோபத்திற்கும் வேதனைக்கும் எவ்வளவுதூரம் ஆளாகவேண்டி யிருக்கிற தென்பதும் நன்கு புலனாகின்றது. ஆகவே தக்க முறையில் தொழுகையை பேணுதலுடன் நிறைவேற்றிவந்து அல்லாஹ்த ஆலாவின் றஹ்மத்துக்குப் பாத்தியஸ்தர்களாவீர்களென்று பெரிதும் எதிர்பார்க்கிறோம்.

மார்க்க வினாவிடை

வினா 1. ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்களுக்கு தந்தையுண்டா இல்லையா ?

2. ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் வானத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கின்றார்களா இல்லையா ?

3. அவ்வாறு உயர்த்தப்பட்டிருக்கின்றார்களென்று கூறப்படுமாயின் ஜடலத்துடனா, அல்லது ரூஹ்மட்டும் உயர்த்தப்பட்டதா ?

4. நபிகள்பிரான் (ஸல்) அவர்கள் மிஃறாஜ் சென்றுவந்தது ஸ்தூல சுரீரத்துடனா, அல்லது மிஃறாஜ் ஆத்மார்த்தமானதா ?

5. அடியார்களை (மஹ்ஷரில்) மறுமை நாளில் எழுப்பப்படுவது ஜடலத்துடனா, அல்லது ஜடலத்திற்கு சம்பந்த மில்லாது 'ரூஹ்' மட்டில் எழுப்பப்படுமா ?

6. நபிமார்களுக்கு நிகழ்பெற்றுள்ளதாக குர்ஆனில் கூறப்பட்டிருக்கும் முஃஜிஸாத்களில் சிலதையோ முழுதையுமோ இன்கார் செய்யலாமா ?

7. காபிர்கள் நரகத்தைவிட்டு மீட்சியாக்கப்பட்டு ஒருகாலத்தில் நரகம் யாருமில்லாது ஒழிந்துபோகுமா ?

ஆகிய இவ்வேழு வினாக்களுக்கும் நம் சுன்னத்துவல் ஜமாஅத்தின் கொள்கையின் இஜ்மாஃ பிரகாரம் தக்க பதிலளித்தும் அக்கொள்கைக்கு மாற்றமாய் கூறுபவர்கள் விஷயமாய் நம் சன்மார்க்கம் யாதுகட்டளை இடுகிறதென்பதையும் விபரமாய்த் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உண்மைவிரும்பி)

விடை 1. ஹஸ்ரத் செய்யிதுனா ஈஸா அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் தந்தையின்றிப் பிறந்தார்களென்பதே சுன்னத்து வல்ஜமாஅத்தாரின் (அகீதா) நம்பிக்கையாகும். இவ்விஷயமாய் அநேக ஆயத்துகளும் ஹதீதுகளும் சான்று பகர்ந்துகொண்டிருக்கின்றன. ஸூரயே மர்யமில் அல்லாஹ்த ஆலா கூறுகின்றான் :—

"நாம் அவள் (மர்யம்) அளவில் நம்முடைய ரூஹை (ஜிப்ரயீலை) அனுப்பினோம். (அவ்வமயம்) மர்யமுக்காக அவர் பரிபூரண மனிதராகக் கோலங்கொண்டார். (அதுபொழுது) மர்யம் நான் உன்னைவிட்டு றஹ்மானைக் கொண்டு கார்மானந் தேடுகின்றேன்; நீர் பயபக்தியுள்ளவராக யிருப்பீராகில் (என்னைவிட்டு ஒதுங்கிவிடும்) எனக் கூறினார் (அதற்கு விடையாக) நான் உமக்கு பரிசுத்தமான ஒரு ஆண்மகவை நன்கொடை அளிப்பதற்காக உன் ஆண்டவனது தூதராகத்தான் இருக்குமென்று (ஜிப்ரயீல்) கூறினார். என்னை எந்த ஆண்மகனும் தீண்டவில்லை; நான் கெட்டவளுமல்ல; (அப்படியிருக்க) எவ்வாறு எனக்கு ஆண்மகவு உண்டாகும் என்று (மர்யம்) கூறினார். இவ்வாறே (ஆடவரின் சம்மந்தமின்றியே) மகவு உண்டாக்குவது தனக்கு இலகுவானதென்று என்னுடைய நாயன் கூறினான், என (ஜிப்ரயீல்) சொன்னார். (இச்சம்பவத்தை) நம்மில் நின்றும் ஜனங்களுக்கு அருட்கொடையாகவும் ஆக்குவதற்காக (இவ்வாறு செய்தோம்) இது விஷயம் கற்பித்து முடிவடைந்த ஓர் விஷயமாக ஆய்விட்டது. உடன் (மர்யம்) கற்பவதியாய்விட்டார். (அல்குர்ஆன்)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி.) அவர்கள் இந்த வாக்கியத்தின் விரிவுரையில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தந்தையின்றியே ஜனித்தார்களென்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். தவிரவும் தப்ஸீர் துர்ருல் மன்ஸூரில் இந்த ஆயத்தின்விரிவுரையிலும், அக்கிரந்தம் 4-வது வால்யூம் 335-ம் பக்கத்திலும் அநேக சஹாபாக்களின் ரிவாயத்துகளைக் கொண்டு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தந்தையின்றியே ஜனித்தார்களென்பதை தக்கவிதமாக ருஜூப்பித்திருக்கின்றார்கள். ஆகவே இவ்விஷயம் சஹாபாக்கள், முபஸ்ஸிரீன்கள், முஹத்திதீன்கள், இமாம்கள் முதலிய யாவராலும் ஒற்றுமையாக கூறப்பட்ட இஜ்மாஆன மஸ்அலாவாகும். இதனை மறுப்பவர்கள் வழிகெட்ட முர்தத்தாகுவார்களென்பதிலையம்மில்லை.

(2, 3) ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஸ்தூல சரீரத்துடனேதான் வானுலகிற்கு உயர்த்தப்பட்டார்களென்பதும், கியாமத்து நாள் சமீபத்தில் இப்பூஉலகில் இறங்குவார்களென்பதும் சுன்னத்துவல்ஜமா அத்தாரின் அகீதாவாகும். அல்லாஹ்தஆலா (ஸூரயே ஆலஇம்றான், ஸூரத்துன்னிஸா ஆகிய ஸூராக்களில்) தன்னளவில் உயர்த்திக்கொண்டதாக அருள் செய்திருக்கிறான். தவிர முத்தவாத்திரானவும் மஷ்ஹூரானவுமாகியசொல்படிக்கு வானத்துக்கு ஹயாத்துடனேயே உயர்த்தப்பட்டார்களென்றும் பிறகு கியாமத் நாள் சமீபத்தில் இறங்குவார்களென்றும் விபரமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது சம்மந்தமாய் புகாரீ முஸ்லிம் திர்மதீ இப்னுமாஜா நஸயீ அபூதாவூத் முதலிய ஹதீது கிரந்தங்களிலும், இப்னுஜரீர் துர்ருல் மன்ஸூர் முதலிய தப்ஸீர்களிலும் விபரமாகக் கூறப்பட்டிருக்கின்றது. இவைகளை மறுத்து ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானுலகிற்கு உயர்த்தப்படாது மரணமாய் இப்பூஉலகிலேயே அடக்கப்பட்டுப் போய் விட்டார்களென்று இயம்புவது குர்ஆன் ஹதீது இவைகளை மறுத்துக் கூறுவதாகும். குர்ஆனையும் ஹதீதையும் மறுத்தவன் முர்தத்தாவான் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை.

(4) எம்பெருமானார் ரசூல் (ஸல்.) அவர்கள் விழிப்பிலேயே ஸ்தூல சரீரத்துடன் மிஃறாஜூக்குச் சென்றார்கள் என்பதுதான் அஹ்லசுன்னத் ஜமாஅத்தார்களின் அகீதாவாகும். இதனை அநேக ஹதீதுகள் ஸ்திரப்படுத்துகின்றன. ஸூரயே இஸ்ராவில் ஆண்டவன் அருள் செய்வதாவது :—

"(மக்காவுடைய) மஸ்ஜிதேஹராமிலிருந்து (பைத்துல் முகத்தஸூடைய) மஸ்ஜித அக்

ஸ்ர்வரை தன்து அடியாரை (முஹம்மதை) இரவில் நடத்தாட்டிவைத்த நாயனை தூய்மையாக்குகிறேன்''

இந்த ஆயத்தின் விரிவுரையில் தப்ஸீர் இப்னு அப்பாஸிலும், தப்ஸீர் இப்னுஜரீரிலும், தப்ஸீர் துர்ருல் மன்தூரிலும் இதர ஹதீது கிரந்தங்களிலும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் விழிப்பு நிலையிலேயே ஸ்தூல சரீரத்துடன் மிஃருஜுக்குச் சென்றார்களென வற்புறுத்திக் கூறப்பட்டிருக்கின்றது. இதற்கு மாற்றமாய் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பைத்துல் ஹரமிலிருந்து பைத்துல் முகத்தஸ் பள்ளிவரை சென்றதை மறுப்பவர் காபிராய் விடுவர். பைத்துல் முகத்தஸிலிருந்து வான யாத்திரை சென்று வந்ததை மறுப்பவர்கள் வழிகெட்டவராவர். சில கிதாப்களில் அன்னர் காபிராகிவிடுவார்களென்றும் கூறப்பட்டிருக்கின்றது. இவ்விஷயம் 'ஷரஹ அகாயித்', 'ஷரஹ பிக்ஹுல் அக்பர்' முதலிய கிரந்தங்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றது.

(5) மஹ்ஷரில், மானிடர் ஸ்தூல சரீரத்துடனும் ரூஹுடனும் எழுப்பப்படுவர் என்பது தான் அஹ்லசுன்னத் வல்ஜமாஅத்தாரின் இஜ்மாஃவான அகீதாவாகும். இதுவிஷயமாய் அநேக ஆயத்துகள் கூறப்பட்டிருக்கின்றது:-

ஆஸிப்னுவாயில் என்னும் முஷ்ரீக், மக்கிப்போன எலும்பை கையில் வைத்துக் கொண்டு இந்த எலும்பை உயிர்ப்பிப்பவன் யார்? என நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்களிடம் வினவினன். அதற்கு விடையாக "முதலில் இதனை உற்பத்தி செய்தவன் உயிர்ப்பிப்பான் என்று நபியே கூறும்'' என்று அல்லாஹ்தஆலா (சூரயேயாசீன் 78, 79-ல்) அருள் செய்தான். தவிர நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் "இறுதி நாளில் நீங்கள் நிர்வாணிகளாகவும் பாதரக்ஷை இல்லாதவர்களாயும் கத்ன செய்யப்படாதவர்களாயும் எழுப்பப்படுவீர்கள்'' என்று நவின்றிருக்கின்றார்கள். இந்த 'அகீதா'வின்மீதே சஹாபாக்கள், இமாம்கள் முதலியோர் இஜ்மாஃ செய்திருக்கின்றார்கள். இதனை மறுத்துக் கூறுபவர்கள் முர்தத்தாய் விடுவார்களென்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. இதன் விவரம் 'மகாஸித்' என்னும் கிரந்தத்தில் வரையப்பட்டிருக்கின்றது. தவிர ஷைகுல் இஸ்லாம் இமாம் கஸ்ஸாலி (றஹ்.) அவர்கள் "அன்முன்கிது மினல்லலால்'' என்னும் கிரந்தத்தின் 12-ம் பக்கத்தில், கியாமத் நாளில் ஸ்தூல சரீரத்துடன் எழுப்பப்படுவதை மறுப்பவர்கள் காபிராகி விடுகிறார்களென்று கூறி யிருக்கின்றார்கள்.

(6) நபிமார்களின் முஃஜிஸாக்களை (அற்புத நிகழ்ச்சிகளை) ஒப்புக்கொள்ள வேண்டியது கடமையாகும். ஆகவே திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள அற்புத நிகழ்ச்சிகளில் சிலதை மறுப்பவன் குர்ஆனையே மறுத்தவனகிவிடுகின்றன். குர்ஆனை மறுத்தவன் தீனைவிட்டு புறம்பான முர்தத்தாய் விடுவான் என்பதில் சந்தேகமில்லை.

(7) நரகம் படைக்கப்பட்டிருக்கிறதென்பதும், அதற்கு முடிவில்லை என்பதும், காபிர்கள் அதைவிட்டு ஒருபோதும் மீட்சி பெற மாட்டார்களென்பதும் அஹ்ல சுன்னத் ஜமாஅத்தாரின் இஜ்மாஃவான அகிதாவாகும். அல்லாஹ்தஆலா "காபிர்களுக்கு ஒருபோதும் மன்னிப்பளிப்பதில்லை; சதா காலம் நிலைத்திருக்கும்படியான நரகத்தின் வழியைத்தவிர வேறு வழி காட்டவுமாட்டான்; இது விஷயங்கள் அல்லாஹ்வுக்கு மிகவும் இலேசானதாக இருக்கிறது. (சூரத்துன்னிஸா 168, 169) ஆகவே நரகம் முடிவடையாது; காபிர்கள் என்றென்றும் அதில் வேதனை செய்யப்படுவர் என்னும் அகீதாவின்மீதே இஜ்மாஃ ஏற்பட்டுள்ளது. இதை மறுப்பவன் தீனைவிட்டு புறம்பான முர்தத்தாய்விடுவான்.

வல்லாஹ் அஃலம் (மௌலவி.)

அறிவிப்பு.

அடுத்த மாதத்துடன் நமது மாசிகையின் நான்காம் ஆண்டு பூர்த்தியாய் விடுகிறபடியால் சென்ற ஆண்டிற்கு சந்தா செலுத்தாம லிருப்பவர்களுக்கு அடுத்த டிஸம்பர் மாதத்தில் வி. பி. அனுப்பப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மன்னார்குடி அவதூறு வழக்கு

மன்னார்குடி மேல ராஜவீதியில் சென்ற 31-8-33-ல் இரவு 10-மணிக்கு "மன்னார்குடி முஸ்லிம் இரண்டாவது மகாநாடு" கூத்தாநல்லூர் பிரபல்ய மிராஸ்தாரும் சைகோன் பிரிட்டிஷ் முஸ்லிம் பிரஜைகளின் தலைவருமாகிய ஆலீ ஜனாப் ஜ மு. முஹம்மது இஸ்மாயீல் ராவுத்தர் பஹாதூர் அவர்களது தலைமையின்கீழ் நடைபெற்றது. அதில் தஞ்சை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணஞ் செய்துவந்த "ஹிஸ்புல்லா"க்கள் இரவு 3 மணிவரை அநேக மார்க்க விஷயங்களை வெகு சாங்கோபாங்கமாய் எடுத்துக் கூறினார்கள். பிறகு அடியில் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன :—

1. சன்மார்க்கப்பிரசாரம் புரியவும், நமது ஜில்லாவில் பரவிவரும் காதியானி முதலிய தீயகொள்கைகளை அகற்றவும் சுற்றுப் பிரயாணஞ் செய்துவந்த "ஹிஸ்புல்லாஹ்"களை மன்னார்குடி முஸ்லிம் மகாநாடாகிய இப்பொதுக் கூட்டம் பாராட்டுவதுடன் இவ்வித சத்தியப் பிரசாரத்தை நமது தமிழ்நாடெங்கும் செய்யவேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

2. தஞ்சை ஜில்லாவின் முஸ்லிம் சங்கங்களைக்கொண்ட ஐக்கிய மகாநாட்டை கூத்தாநல்லூரில் கூட்டவேண்டுமென முஹம்மது பந்தர், புதக்குடி முதலிய ஊர்களிலுள்ள சங்கங்கள் செய்த தீர்மானத்தையும் கூத்தாநல்லூர் 2-வது முஸ்லிம் மகாநாட்டில் அத்தீர்மானத்தை ஆதரித்து அதனைக் கூட்டிவைக்கும் பொறுப்பை கூத்தாநல்லூர் முஸ்லிம் லீக் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டதையும் இம்மகாநாடு ஆதரிப்பதுடன் இத்தீர்மானத்தை ஷெலீக்குக்கு அறிவிக்க வேண்டுமாய் மன்னார்குடி முஸ்லிம் ஜமாஅத்து பஞ்சாயத்து பிரஸிடெண்டைக் கேட்டுக்கொள்கிறது.

3. சென்னை "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கம் சென்ற நான்காண்டுகளாய் இஸ்லாத்துக்கு ஆற்றிவரும் அருந்தொண்டுகளையும் குறிப்பாக காதியானீ அஹ்மதியாக் கொள்கை பாவவிடாமற் றடுப்பதற்கு அச்சங்கம் எடுத்துக்கொண்டிருக்கும் அபார முயற்சியையும், சன்மார்க்கப் பிரசாரம் புரிவதற்கென 'ஹிஸ்புல்லாஹ்' திருக்கூட்டத்தினரை ஏற்படுத்தியிருப்பதையும் இம்மகாநாடு பாராட்டுவதுடன் நமது தமிழ் முஸ்லிம்கள் மார்க்க சட்ட திட்டங்களை உள்ளாலுள்ளபடி அறிந்துகொள்வான் வேண்டி சுன்னத்து வஜமாஅத்து நூல்களைப் பிரசுரம் செய்வதற்கான முயற்சியை எடுத்துக்கொள்ளும்படியும் இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

4. கூத்தாநல்லூர் "சாந்தி பிரகடன சபையார்" திருக்குர்ஆனை தமிழில் மொழிபெயர்த்து வருவதை இம்மகாநாடு ஆதரிப்பதுடன் அதனைச் சரிபார்த்துத் திருத்திக் கொடுப்பதற்கு உலமாக்கள் முன்வந்திருப்பதை இம்மகாநாடு பாராட்டுகின்றது.

5. உருது பாஷை நமது இந்திய நாட்டிற்குப் பொது பாஷையாக இருப்பதாலும், இஸ்லாமிய நூல்கள் பல அதில் எழுதப்பட்டு நமது வேத பாஷைக்கு அடுத்தபடியில் இருப்பதாலும் அதனைத் தமிழ்நாட்டில் பரவச் செய்யுமாறு எல்லா முஸ்லிம்களையும் இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

இத்தீர்மானங்களை ஆதரித்தும் ஆமோதித்தும் பற்பல கல்விமான்களும் மகான்களும் பேசியபின் மகாநாட்டின் நடவடிக்கைமுற்றுப் பெற்றுவிட்டது.

அதன்பின் இம்மகாநாடு சம்மந்தமாய் 8-9-33 ல் வெளியான "தாருல் இஸ்லாம்" பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளியாயிற்று. அதில் "மன்னார்குடி மகாநாட்டின் ஊழல்," "பொய்யர்கள் திகைத்தனர்" "பொது ஜனங்கள் விழித்தனர்" என்றும், மகாநாடு நடைபெறுவதை விளம்பரப் படுத்துவதற்காக வெளியிடப்பட்டிருந்த அறிக்கையில் கையொப்பதார்களின் அனுமதி பெறாமலே அன்னார்களின் பெயர்களைப் பிரசுரித்திருப்பதாயும், கள்ளக் கையெழுத்திட்டு அக்கிராசனருக்கு அளித்த பத்திரத்தை வெளியிட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வியாசத்தை ஆக்ஷேபித்து, மேல்கண்ட வாசகத்தி

னுள்ள ஒவ்வொரு வார்த்தையும் இன்னும் அதுசம்பந்தமாய் அப்பத்திரிகையில் வெளியான முழு வியாசங்களும் வாதியையும் ஷை மகாநாட்டையும் கேவலப்படுத்தி நிந்திக்கக் கூடியதாக இருப்பதாயும், இந்த நிந்தனையானது வாதியினுடையவும் மகாநாட்டினுடையவும் கண்ணியத்தை கெடுக்குமென்று அறிந்திருந்தும் அவ்வாறு நம்பும்படியான காரணத்தையுடையதாய்ப் பிரசுரிக்கப் பட்டிருக்கிறதென்றும் கூறி இவ்வியாசம் அவதூறு உடையதாகுமென மன்னார்குடி பிரபல வர்த்தகரும் மேல ராஜவீதி மஹல்லா பஞ்சாயத்துத் தலைவருமான ஜனுப் A. முஹம்மது இஸ்மாயில் ராவுத்தர் அவர்களால் சென்னை "தாருல் இஸ்லாம்" ஆசிரியர்களான ஜனுப்கள் பா. தாவூத்ஷா சாஹிப், ஹாபிஸ் A. N. முஹம்மது ஈசுப் சாஹிப், பிரசுரதார் ஜனுப் இ. அப்துர் ரஹ்மான் சாஹிப் ஆகியோர்மீது மன்னார்குடி சப் டிவிஷனல் 1-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டார் அவர்கள் கோர்ட்டில் ஒரு அவதூறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. கனம் மாஜிஸ்ட்ரேட் அவர்கள் வழக்கை ஏற்றுக்கொண்டு 500-வது செக்ஷன் பிரகாரம் சம்மன் பிறப்பித்தார். முறையே 23-9-33, 3-10-33, 19, 20-10-33-லும் விசாரணை நடைபெற்று ஆறு சாக்ஷிகள்வரை சாக்ஷியங் கொடுத்தனர். வாதிக்காக தஞ்சை ஸ்ரீ ராவ் சாஹிப் K. S. சீனிவாச ஐயரும் மன்னார்குடி ஸ்ரீ S. ரெகுநாத ஐயரும், பிரதிவாதிகளுக்காக சென்னை ஈ. எல். ஐயரும், ஸ்ரீ வி. ராஜகோபாலாச்சாரியாரும் ஆஜராகியிருந்தார்கள். பிறகு 27, 28-10-33-ல் கூத்தானல்லூர் புதக்குடிக்கு மத்தியிலுள்ள சேகரையின் கேம்பில் ஈரங்கி போடப்பட்டிருந்தது. இதற்கிடையில் நடைபெற்ற சமரஸ ஏற்பாட்டை இருசாராரும் ஏற்றுக்கொண்டு விட்டதால் அன்று 27-10-33 தேதி வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்குமுன் இக்கேஸ் சம்பந்தமாய் ஒரு ராஜிநாமா கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது. அதில், இந்தநம்பர் எதிரிகள், அவர்கள் பத்திரிகையான "தாருல் இஸ்லாமில்" அக் கம்யூனிகேஷனை தவறுதலாயும்கவனக் குறைவாகவும் பிரசுரித்து விட்டதைப்பற்றி உண்மையாய் வருத்தப்படுவதாகவும், அந்த வியாசத்தின் ஒவ்வொரு பாகத்தையும் தவறுதலென்று ஒப்புக்கொண்டு விசனிப்பதாவும், இருதரத்தாரும் முஸ்லிம்களாய் இருப்பதாலும் மத சம்பந்தமாய் தங்கள் சகோதர முஸ்லிம்களுடைய நன்மையையும் முன்னேற்றத்தையும் கருதி 22-10-33-ல் ஜனுப் பா. தாவூதுஷா சாஹிபுக்கும் கூத்தானல்லூரிலிருக்கும் சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கக்காரியதரிசிமௌலவி ச. அ. முஹம்மது அலி சாஹிபுக்கும் நடைபெற்ற எக்ரிமெண்டை இந்த ராஜிநாமா மூலியமாய் ஒப்புக்கொண்டிருப்பதாகவும், அந்த எக்ரிமெண்டுப்படி இனி எப்பொழுதும் எதிரிகள் நடந்துகொள்வதாய் ஒப்புக்கொள்வதால் இந்த ராஜீநாமா செய்து கொள்ளப்பட்டதாயும், அந்த எக்ரிமெண்ட் காப்பியும் இந்த ராஜிநாமாவுடன் அணைத்திருப்பதாகவும், அந்த உடன்படிக்கைக்குத் தவறினால் உடன்படிக்கை ஷர்த்துப்படி ரூ. 1,000 நஷ்டம் கொடுப்பதாய் எதிரிகள் ஒப்புக்கொள்வதாயும், அந்த எக்ரிமெண்டை, இந்த ராஜிநாமாவின் பாகமாய் இயற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்வதாகவும் கோரப்பட்டிருந்தது. கனம் நியாயாதிபதி அந்த ராஜிநாமாவை ஏற்றுக்கொண்டு வழக்கை விடுதலைசெய்துவிட்டார்.

ஸமரஸத் தோற்றம்

சென்னை "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தாருக்கும், சென்னை "தாருல் இஸ்லாம்" ஆசிரியர்களுக்குமிடையே நீண்ட நாளாய் மார்க்க சம்மந்தமான விவாதம் நடைபெற்று வந்ததென்பது யாவருமறிந்த விஷயமே. இவ்வாறான விவாதத்திலேயே கவனத்தைச் செலுத்திவருவதால் இதர மார்க்க சேவைகளி லீடுபட்டுழைப்பதற்குத் தடை ஏற்பட்டிருக்கிறதெனக் கருதிய பொதுநல நோக்கங்கொண்ட கனவான்களிற் சிலர், இவ்விரு சாரார்க்கிடையேயுள்ளவிவாதத்திற்கிடமான விஷயங்களை பைசல்செய்துவிட

வேண்டுமென்று கருதி அச்சேவையிலீடுபட அதிக ஊக்கத்தோடு முன்வந்தனர். ஆகவே 22-10-33 ஞாயிற்றுக்கிழமை யன்று தஞ்சை ஜில்லா கூத்தாநல்லூரின் பிரபல்ய வர்த்தகரும் தயாள சீலரும் லாண்டுலார்டுமாகிய ஆலிஜனுப் அல்ஹாஜ் ஐ. மு முஹம்மது இஸ்மாயீல் ருவுத்தர் அவர்களின் உன்னதமாளிகையில் சமரஸ விஷயமாய் ஒரு கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கூத்தாநல்லூர் முக்கியஸ்தர்களும் பிரபல தலைவர்களும் சென்னை 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' சங்கக் காரியதரிசி மௌலவீ அல்ஹாஜ் ச. அ. முஹம்மது அலிசாஹிப் அவர்களும் "தாருல் இஸ்லாம்" ஆசிரியரான ஜனுப் பா. தாவூத்ஸா சாஹிப் அவர்களும்பிரசன்னமாயிருந்தனர். அக்கூட்டத்திற்கு ஆலீஜனுப் நாட்டாண்மை அ. கா. மன்சூர்ஸா ராவுத்தர் அவர்கள் அக்கிராஸனம் வகித்தார்கள். சமரஸவிஷயமாய் பலவாறு பேசப்பட்டு முடிவாக ஜனுப் அல் ஹாஜ் ச.அ.மு, ஜனுப் பா.தா. இவ்விருவருக்கிடையில் ஓர் உடன்படிக்கை நடைபெற்றது அதன்முக்கிய பாகம் வருமாறு:—

(1) ஜனுப் பா. தாவூதுஸா சாஹிப் அவர்கள் ஒப்புக்கொண்டிருப்பதாவது, என்னல் இதுவரை வெளியிடப்பட்டிருக்கும் பத்திரிகைகள், "ஜவாஹிருல் புர்க்கான்" என்னும் குர்ஆன் மொழிபெயர்ப்புக்கள், ஈமான், இஸ்லாம், இயேசுவின் இரகசியம், இஸ்லாமிய ஞானபோதம், நபிகள் நாயக மான்மியம், ஜியாரத்துல் குபூர் ஆகிய நூற்களிலும் மேற்காணுத இதர பிரசுரங்களிலும் மௌலவி ச. அ. முஹம்மது அலீசாஹிப் அவர்களால் எடுத்துக்காட்டப்படும் சுன்னத்துவல் ஜமாஅத்துக் கொள்கைக்கு விரோதமான தவறுகளை நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட இதனடியில் குறிப்பிடப்படும் ஏழு மௌலானுக்களையும் சென்னையில் ஒன்று கூட்டி அவர்களின் மெஜார்ட்டித் தீர்மானப்படி ஏற்காதவைகளை நீக்கியும், சேர்க்கவேண்டியவைகளை புகுத்தியும் பிழைத்திருத்தம் அச்சிட்டுச் சேர்த்துப் பிரசுரப்படுத்தியும் திருத்தத் தகாதவைகளின் முறண்பாடுகளை பத்திரிகை மூலம் ரத்துசெய்து வெளிப்படுத்தியும் எனது நூற்களை வித்து முதல் செய்து கொள்வதுடன் புதிய பத்திரிகைகளையோ பிரசுரங்களையோ சுன்னத்து ஜமாஅத்துக் கொள்கைக்கு மாற்றமாகச் செய்வதில்லை யென்றும் இதன்மூலம் ஒப்புக்கொண்டிருக்கின்றேன். இதர பத்திரிகைகளில் பிரசுரமாகும் சுன்னத்து ஜமாஅத்துக் கொள்கைக்கு முறண்பாடான வியாஸங்களையோ, நூற்களையோ எமது பத்திரிகையில் பிரசுரிக்கமாட்டேன் என்பதையும் இதன்மூலம் ஒப்புக்கொள்கிறேன். மேற்சொல்லிய மௌலானுக்களால் பரிசீலனை செய்து எனக்கு அளித்த தீர்மானத்தை எனக்கு கிடைத்த முப்பது தினங்களுக்குள் மேற்சொல்லியபடி திருத்தி பிரசுரித்து விடுவேனுகவும்............

(2) ஜனுப் மௌலவீ அல்ஹாஜ் ச. அ. முஹம்மது அலீ சாஹிப் அவர்கள் ஒப்புக்கொண்டிருப்பதாவது, ஜனுப் பா. தாவூத்ஸா சாஹிப் அவர்கள் சொல்லியுள்ள விஷயங்கள் அனைத்தையும் நான் ஆமோதிப்பதுடன் நம்மிடையிலுள்ள விவாதங்கள் என்னவென்பதையும் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்க சார்பில் கீழ்குறிப்பிட்ட மௌலானுக்களை சென்னையில் கூட்டி சங்கச்செலவில் பரிசீலனைசெய்து போதிய காலத்தில் நாம் தெரிந்துகொண்ட மௌலானுக்களிடம் சமர்பித்து அன்னர்கள் செய்யும் தீர்மானத்தை நானும் ஒப்புக்கொண்டு ஜனுப் பா. தாவூத்ஸா சாஹிப் அவர்களிடம் கொடுத்து ரசிது பெற்றுக்கொள்வேனுகவும். இவ்வகையில் தீர்மானமும் திருத்தியமைப்பதும் முடிவடைந்த பிறகு "ஹிபாஜத்துல் இஸ்லாம்", "ஸையுல் இஸ்லாம்" பத்திரிகைகளிலும் நமக்குள் ஏற்பட்டுள்ள அபிப்பிராய பேதங்கள் ஒருவாறு முடிவு பெற்றுவிட்டதால் திருத்தி யமையப்பெற்ற நூற்களையும் பத்திரிகைகளையும் பொது ஜனங்கள் ஆதரிக்கலாமென்றும் இதுவரை நமக்குள்ளிருந்து வந்த மன வேற்றுமைகளை விட்டொழித்து இந்திய முஸ்லீம்கள் ஒற்றுவாழ்வது அவசியமென்னும் கருத்துள்ள பிரசுரங்கள் வெளியிட கடமைப்பட்டிருக்கிறோம்.

(3) இந்த உடன்படிக்கைக்கு வீரோதமாய் நம்மிருவரில் எவரேனும் ஒற்று வாராவிட்டாலும் தவறி நடந்தாலும் தவறி நடந்தவர் மற்றவருக்கு நஷ்ட ஈடாக 1,000 ரூபாய் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பரிசீலனைக் கமிட்டி அங்கத்தினர்கள்.

(1) மௌலானு மௌலவீ அல்ஹாஜ் கான் பஹாதுர் ஜியாவுத்தீன் முஹம்மத் சாஹிப்,

(2) மௌலானா மௌலவீ ஹஸ்ரத் செய்யித் முர்த்தஜா சாஹிப் பஹாதுர், M. L A. (திருச்சி), (3) மௌலானா மௌலவீ முப்தீ ஷேக் ஆதம் சாஹிப் (வேலூர்), (4) மௌலானா மௌலவீ அப்துல் அஜீஜ் சாஹிப் (பெங்களூர்), (5) மௌலானா மௌலவீ செய்யித் அப்துல் வஹ்ஹாப் சாஹிப் புகாரீ (M. A. L. T., M. R. A. S) பிரின்ஸ்பால் ஜமாலியா மத்ரஸா, (6) மௌலானா மௌலவீ அப்துல்ஹக் சாஹிப், (M. A. L. T.) மஹமடன் காலேஜ் (மதராஸ்), (7) மௌலானா மௌலவீ ஹாஜீ பா. செ. முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் (கூத்தா நல்லூர்.)

இவ்வேழு கனவான்களும் பரிசீலனைக் கமிட்டியின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இன்ஷா அல்லாஹ் இப்பெரியார்கள் கூடிய சீக்கிரம் பரிசீலனையிலீடுபட்டு உண்மையை—சன்மார்க்கத்தை வெளியிடுவார்களென எதிர்பார்க்கிறோம்.

இவ்வாறான சமரஸ ஏற்பாட்டிற்கு பெரிதும் முழுமனதோடு முயற்சி செய்த கூத்தானல்லூர் வாசிகளான ஆலீ ஜனாப்கள் சௌகார் அல்ஹாஜ் ஜ. மு. முஹம்மது இஸ்மாயீல் ராவுத்தர், அ. மு. முஹம்மது இஸ்மாயீல் ராவுத்தர், அ. அ. முஹம்மது முஹைதீன் ராவுத்தர், ஆதம் நெ. முஹம்மது இப்ராஹீம் ராவுத்தர், எஸ். ஈ. எஸ். முஹம்மது இஸ்மாயீல் ராவுத்தர், எஸ். ஈ. எஸ். முஹம்மது முஹைதீன் ராவுத்தர், தே. மு. முஹம்மது சுல்த்தான் ஆலீம் சாஹிப், ஹஸன் ஆலிம் சாஹிப், ஹாஜீ கா. ரா. காதிர் பாக்ஷா ராவுத்தர், டி. எம். ஷேக் முஹம்மது ராவுத்தர், அ. அ. ஷரீப் ராவுத்தர் ஆகிய கனவான்களை நாம் மிகப் பாராட்டுவதுடன் அன்னாரின் முயற்சியை பெரிதும் மதிக்கின்றோம்.

இச் சமாதான முயற்சியை நாம் மிகமிக வரவேற்கின்றோம். எப்பொழுதும் சமாதானமாகவே காரியாதிகளை நடத்திச்செல்ல வேண்டுமென்பதில் நாம் பெரிதும் விருப்பங்கொண்டுள்ளவர்களென்பது யாவருமறிந்த உண்மையாகும். நாம் இவ்வளவு காலமாய் சத்தியம், சமாதானம் ஆகியவைகளுக்குத் தான் போராடி வருகிறோமென்பதை நம்முடைய நெடுநாளைய சேவைவாயிலாய்யாவருக்கும் தெறிவித்து வந்திருக்கிறோம். இதுபொழுதும் அச்சமாதானத்திற்கு தலைசாய்க்கத் தயாராக இருக்கிறோமென்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் நாம் நெடுநாளாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த சமரஸத்திற்குள்ள வாயல்தற்பொழுது திறக்கப் பட்டுப் போய்விட்டதைக்கண்டு அங்கம் பூரித்து அகமகிழ்வெய்துகின்றோம். ஆகவே நாம் எல்லோரும் அச்சமாதான உல்லாச மாளிகையினுள் பிரவேசித்து சத்தியத்தைத் தெரிந்தெடுத்துக்கொண்டு களிப்பேறு கொள்வோமாக. வல்ல நாயன் நாம் கோரி முயற்சிக்கும் காரியாதிகளை இனிது நிறைவேற்றிவைத்து முஸ்லிம்கள் யாவரும் ஒற்று வாழுமாறு கிருபை பாலிப்பானாக.

ஷஃபான் மாதச் சிறப்பு.

ஷஃபான் மாதமாகிறது மிகத் தூய்மை வாய்ந்ததாகவும் மானிடன் மேன்பதவி அடைவதற்குள்ள மருத்துவம் பொருந்தியதாகவும் திகழ்கின்றது. எம்பெருமானார் நபிகள்நாதர் (ஸல்.) அவர்கள், நபிமார்கள் யாவரைப் பார்க்கிலும் சங்கைபொருந்தியவர்களா இருப்பதுபோன்று இத் திங்களும் ரமலானத்தை தவிரவுள்ள மாதங்களுக்கெல்லாம் வரிசையுடையதாய்த் திகழ்கின்றது. எனவே உலகதயாளர் உத்தமத்தூதர் (ஸல்.) அவர்கள் இதனை தங்களுடைய மாதமென்று கூறியிருப்பதால் அம்மாதம் சிறப்புற்றதாக இருக்கிறதென்பதற்கு வேறு காரணம் தேவையில்லாதிருக்கிறது. ஆகவே எம்பெருமானார் (ஸல்.) அவர்கள்மீது உகப்புக்கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் இம் மாதத்தை மிக கண்ணியமாக மதிப்பார்களென்பது திண்ணம்.

எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் இம்மாதத்தில் ஆண்டவனை அதிகமாய் வணங்குபவர்களாக இருந்தார்கள். அம்மகானவர்கள் பாவத்தை விட்டு தூய்மை

வாய்ந்தவர்களாக இருந்தும் அதிகமாய் வணக்கம் புரிந்திருக்கின்றார்க ளென்றால் பாவிகளாகிய நாம் இம்மாதத்தில் எவ்வளவு தூரம் வணக்கம் புரியவேண்டு மென்பது கூறாமலே நன்குபுலனாகும். நம்முடைய உச்சி தொடுத்து உள்ளங்கால்வரை பாவத்தால் நிறப்பப்பட்டும் பாவத்தின்பளுவு தாங்கமுடியாது இடுப்பெல்லாம் முறிந்துபோயும் இருக்கும் நிலைமையில் இம்மாதத்தில் நாம் நல்ல சாலிஹான அமல்களைச் செய்து பாபமன்னிப்புத் தேடிக்கொள்ளாவிடில் நாம் ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்களைப் பின்பற்றியவர்ளென்று எவ்வாறு சொல்லிக்கொள்ள இயலும்? பிரீதிகொண்டிருப்பதாகச் சொல்லிக்கொள்வது வாயளவில்தான் என்றுபுலப்பட்டுப்போம்.

தவிர நபிகள் பிரான் (ஸல்.) அவர்கள் ஷஃபான் மாதத்தில் அதிகமாய் நோன்பு நோற்கிறவர்களாக இருந்ததுடன் உம்மத்தோர்களாகிய நம்மனோரை நோக்கி "இம்மாதத்தில் உங்களால் கூடுமானவரை நற்கருமங்கள் புரியுங்கள்; உங்கள் சக்திக்கு அதிகமாய் அமல்செய்வதிலீடுபட்டு களைத்துப்போய் விடுவீர்களாயினும் அல்லாஹ்தஆலா நற்கூலி அளிப்பதினின்று களைத்துப் போகமாட்டான்" என்றுகூறி நற்கருமங்கள் புரிவதன்மீது உற்சாகமூட்டி யிருக்கின்றார்கள்.

இம்மாதத்தில் பெருமானார் சத்தியதூதர் (ஸல்.) அவர்கள் அதிகமாக நோன்பு நோற்பதன் விஷயமாய் அதன் காரணம் யாதாகுமென ஹஸ்ரத் உஸாமா (ரலி.) அவர்கள் வினவியபோது "ஏ உஸாமாவே! றஜபுக்கும் ரமளானுக்கு மிடையிலுள்ள இம்மாதத்தின் மகுத்துவத்தை அறியாது மானிடர் மறதி கேட்டிலிருக்கின்றனர்; இம்மாதத்தில் அடியார்களின் அமல்கள் அல்லாஹ்த ஆலாவின் சமுகம் எடுத்துக் காட்டப்படுகின்றபடியால் யான் நோன்பாளியாகயிருக்கும் நிலைமையில் என் அமல்கள் எடுத்தறிவிக்கப்படுகிறதைப் பிரியம் வைக்கிறேன்" எனக் கூறினார்கள்.

"யான் ஒருநாளன்று என் பர்த்தாவாகிய பெருமானார் (ஸல்.) அவர்களிடம் தாங்கள் ஷஃபான் மாதத்தில் அதிகமாய் நோன்பு நோற்பதற்குள்ள காரணம் யாதாகுமென வினவினேன். அதற்கு சத்தியத்தூதர் (ஸல்) அவர்கள் ஏ ஆய்ஷாவே! இந்த ஷஃபான் முதல் அடுத்த ஷஃபான்வரை மரணமடையக் கூடியவர்களின் தவணை கெடுவை இதே மாதத்தில்தான் எழுதப்படுகின்றது. ஆகவே எனது மரணத்தின் காலத்தை எழுதப்படும் நாளில் நோன்பாளியாக இருக்க வேண்டுமென்று விரும்புகின்றேன்" என சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் தெரிவித்ததாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி.) அவர்களைத் தொட்டும் அறிவிக்கப்படுகின்றது.

15-ம் இரவில் நிகழ்வதென்னே!

அல்லாஹ்தஆலா ஸூரயே 'துகானில்' 'லைலத்துன் முபாரகத்துன்' பரகத் செய்யப்பட்ட இரவு என்று கூறியிருப்பது ஷஃபான் மாதத்தின் பதினைந்தாவது இரவுதானென்றும் அவ்விரவில் சகல விஷயங்களுக்கும் முடிவேற்படுகிறதென்றும் முபஸ்ஸிரீன்கள் கூறி இருக்கின்றார்கள்.

"ஷஃபான் மாதத்தின் பதினைந்தாவது இரவில் அல்லாஹ்தஆலா தனது கிருபையை உலகோர்க்கு அளித்து பாவங்களைப் பொறுத்து விடுகிறானென்று" ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச்செய்யப்பட்டிருக்கின்றது. தவிர அன்றிரவில் அல்லாஹ்தஆலா நம்மனோரை நோக்கி, தன் பாவங்களை பொறுக்கத் தேடுகிற அடியான் யாருமிருக்கின்றானா? அவனுடைய பாவங்களை மன்னித்துவிடுகின்றேன்; தன் ரஜ்கை, விஸ்தீரணப்படுத்தத் தேடுகிற அடியான் யாருமிருக்கின்றானா? அவனுடைய இரணத்தை அதிகப்படுத்தி விடுகின்றேன்; ஒரு கஷ்டத்திலகப்பட்டு அதினின்று விடுதலையை கோறுபவன் யாருமிருக்கின்றானா? யான் அவனுக்கு உதவி செய்கின்றேன் என்று அன்றிரவில் கூறுவதாக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே அன்றிரவு முழுதும் வணக்கம் புரிந்து பகலில் நோன்பு நோற்பது விசேஷித்த மகுத்துவம் பொருந்திய செயலாகுமென்று மகான்கள் கூறியிருக்கின்றார்கள்.

"ஹயாத்த மஸீஹ் அலைஹிஸ்ஸலாம்"

(முதற் பாகம்)

ஹஜ்ரத் ஈஸா நபியவர்களின் சரித்திரச் சுருக்கம், நபியவர்கள் விண்ணுக்குயர்த் தப்பட்ட விபரம், இனி அவர்கள் உலகுக்கு வரும் விபரம் ஆகிய இவைகள் குர்ஆன் ஹதீது முதலிய ஆதாரங்களைக்கொண்டு எழுதப்பட்டது. காதியானிகள் ஹஜ்ரத் ஈஸா நபியவர் களைப்பற்றிக் கூறும் கூற்றுகளுக்கு இந்நூல் தக்க மறுப்பாக மிளிர்கின்றது. இந்நூலைப் போலொரு நூல் இதுகாறும் தமிழில் வெளிவந்ததில்லை. காதியானித் தமிழ் புத்தகங்களைப் படித்து வழிவிலகிச் செல்லும் சோதர சோதரிகளின் கண்களை இந்நூல் திறந்துவிடும் என் பதிலையமின்று. 90 பக்கங்களைக்கொண்டது. விலை அணு 7 தான்.

இரண்டாம் பாகம் அச்சிலிருந்து கொண்டிருக்கிறது சீக்கிரம் வெளிவரும்.

கிறிஸ்தவர்களுக்கோர் வாயாப்பு

கிறிஸ்தவப் பாதிரிகள் இஸ்லாத்தைப்பற்றியும் நபிகள்பிரானவர்களைப்பற்றியும் விடுத்த 14 வினக்களுக்கு சுன்னத்துவல்ஜமாஅத்து உலமாக்களால் அளிக்கப்பட்ட விடை கள் இதிலடங்கி இருக்கிறது. இந்த நூலைப் படித்துப் பார்ப்பார்களாயின் உண்மை இஸ் லாத்தைத் தெரிந்துகொள்வார்கள் என்பதில் எள்ளத்துணையும் சந்தேகமில்லை. மேலும் லாகூர் அஹ்மதியா பார்ட்டி தலைவர் முஹம்மது அலி, M. A., LL. B., யால் எழுதப் பட்ட இயேசுவின் இரகசியம் குர்ஆனுக்கும் ஹதீதுகளுக்கும் விரோதமாகயிருப்பதை நன்கு தெரிந்துகொள்வர். சொற்ப காப்பிகளே கைவசமிருக்கின்றன. முந்திக்கொள்ளுங் கள். விலை அணு 6 தான்.

சுன்னத்ஜமாஅத்தின் விஸ்வாசம்

சுன்னத்துவல் ஜமாஅத்து என்றால் என்ன என்று வினவும் காதியானிகளுக்கு இது ஒரு பதிலாகும். இது சுன்னத்துவல் ஜமாஅத்து முஸ்லிம்கள் யார்? அவர்களின் கொள்கை யாது? சுன்னத்துவல்ஜமாஅத்தை விட்டு விலகியவர்கள் யார்? அவர்களின் கொள்கைகள் யாவை? இக்கொள்கைகள் தோன்றிய காலம் ஆகியவைகளைத் தெளிவுபட விளக்கும் நூல். விலை அணு 6 தான்.

காதியானி மத ஆராய்ச்சி

காதியானி மதக்கோட்பாடுகளைத் தெரிந்துகொள்ளாமல் அநேகர் அவர்களின் நூல்களைப் படித்து வழிதவறி விடுகின்றனர். இஸ்லாத்துக்கும் காதியானி மதத்துக்கு முள்ள வேற்றுமை, காதியானிகள் இஸ்லாத்தைத் தழுவியவர்கள் என்று கூறிக்கொண்டு அதைக் கெடுப்பதற்காகச் செய்யும் சூழ்ச்சி விபரம் முதலியவைகள் இதில் கூறப்பட்டிருக் கின்றன. காதியானிகளைச் சீர்திருத்த முஸ்லிம்கள் என்றும், மிர்ஜா குலாம் அஹ்மதைச் சீர்திருத்தக்காரர் என்றும் கருதி வருபவர்களின் கண்ணைத் திறந்துவிட்டு அவர்கள் இஸ் லாத்தைவிட்டு எவ்வளவு தூரம் விலகிச் சென்றிருக்கின்றனர் என்பதை நன்கு துலக்கும் நூல். 200-பக்கங்களுக்கு மேற்கொண்டது. விலை ரூபா 1-0-0 தான்.

முஸ்லிம்களின் நவீன அநுஷ்டானச் சம்ஹாரம்

அனுச்சார பித்அத் ஷிர்க்கு முதலிய நவீன அநுஷ்டானங்களில் கிடந்துழலும் முஸ்லிம்களுக்கும், அனுவசியமான சடங்குகளைக் கைக்கொண்டு கடன்படுவோருக்கும் இஸ்லாத்தின் உண்மை ஆசாரம் யாது என்பதைத் தெளிவுபடுத்தி அத்தகை வீண்டம்பச் செலவுகளிலும் அனுச்சாரப் பழக்க வழக்கங்களிலுமிருந்து விடுவிக்கும் அரிய புத்தகம்.
விலை அணு 10.

குர்ஆன் ஆங்கில வியாக்யான ஆராய்ச்சியின் முகவுரை

திருக் குர்ஆனுக்குக் காதியானி அஹ்மதிப் பார்ட்டியின் தலைவர் முஹம்மது அலி, M.A., LL. B., எழுதிய ஆங்கில வியாக்யானத்தில் இஸ்லாத்துக்கு விரோதமாக எழுதியுள்ள தவறுகளிற் சிலவற்றை எடுத்துக்காட்டுகிறது. இது பாஞ்சாலத்தைச் சேர்ந்த ஷேக் குலாம்ஹைதர் சாகிபால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு.
விலை அணு 4.

அஹ்மதியர்களைப்பற்றிய கோர்ட்டுத் தீர்ப்பு

இதில் காதியானி மதஸ்தர்கட்கும் முஸ்லிம்கட்கும் மஸ்ஜித் கப்ருஸ்தான் ஆகியவைகள் சம்பந்தமாக ஏற்பட்ட வியாச்சியங்களும் கோர்ட்டுத் தீர்ப்புகளும் எழுதப்பட்டிருக்கிறது.
விலை அணு 2 தான்.

காதியானிப் பிரசாரமும் கம்பளை முஸ்லிம்களின் வெற்றியும்

சிலோன் கம்பளையில் காதியானிகளுக்கும், உலமாக்களுக்கும் நடக்க இருந்த மத தர்க்கவாத சம்பந்தமாக எழுதப்பட்டது. காதியானிகளின் தர்க்க நிலைமைகளையும் அவர்களின் தந்திரக் கபடங்களையும் தெரிந்து அவர்களோடு மல்லாடி அவர்களின் குறும்புகளை அடக்க விரும்புவோருக்கு இந்நூல் இன்றியமையாததாகும்.
விலை அணு 6 தான்.

ரத்துல் காதியானி

வஹீ என்பதென்ன? அது எவருக்கு வரலாம். தற்காலம் வஹீ உண்டா? இல்ஹாம் என்றால் என்ன? என்பனவாதி விஷயங்களைப்பற்றி விபரமாகவும் தெளிவாகவும் கூறப்பட்டிருக்கிறது.
விலை அணு 4.

காதியானி மதஸ்தருடன் ஒற்றுமையாமை — விலை அணு 8.

காதியானிக் கொள்கைகள் தலைகாட்ட முற்பட்டிருக்கும் இதுகாலை இந்நூல்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டியது அவசியமாகும் என்பதை அறிவித்துக்கொள்ளப் படுகிறது.

கிடைக்குமிடம் :—

முஸல்மான் ஆபீஸ்,
தென்காசி.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.